ஜெர்மனியிலும் வன்னியன் தொலைபேசி அட்டைகள்




'சொல்லும் நிமிடங்களை சொன்னபடியே தருவது'

தொடர்புகட்கு: ரவி

01726312893 / 0622642067 Pub.

1.50 Euro ஜேர்மனி

# ஈழமுரசு

ஐரோப்பா

POOBALAM WEEKLY

2004 14 - 20 Juillet 2004 22

சம்யுக்தா

Credits Immobiliers

வீடு வாங்க கடன் உதவி

அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்

SAM-YUKTHA



Credits-Finances-Investssements

6, Rue Cail -75010 Paris

Tél/Fax: 01 40 34 03 24

(M°: La Chapelle/Gare du Nord)

# கொழும்பில் கெடுபிடி அதிகரிப்பு

(12.07.2004)

கொழும்பு நகரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் என்ற பேரில் தமிழ்மக்களுக்க எதிரான கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. மாகாண சபைத் தேர்தல் முடிந்த மறுநாளே படையினரும், பொலிசாரும் இணைந்து இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். கடந்த ஞாயிறு காலை முதல் வீதிச் சோதனை நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. நகரின் அனைத்துப் பகுதியிலும் பொலிசாரும், இராணுவத்தினரும் இணைந்து வீதிச் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். வாகனங்கள், பயணிகள், பேருந்துகள் வழி மறிக்கப்பட்டு சோதனைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், பலர் துருவித் துருவி விசாரிக்கப்பட்டனர். நகரின் சகல பொலிஸ் நிலையங்களினதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. பொலிஸ் நிலைய நுழைவாசலில் தொண்டர் படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர். பொலிஸ் நிலையத்திற்குள் செல்வோரை அவர்கள் விசாரித்த பின்பே உள்ளே செல்ல அனுமதிக்கின்றனர். ▶25








## இலண்டனில் குற்றச் செயல்களில் ஈடுபட்ட தமிழ் இளைஞர்கள் கைது


ஸ்கொட்லான்ட் யாட் காவற்துறையினர் அதிரடிநடவடிக்கை

▶11

## கண்காணிப்புக் குழுத் தலைவர் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

▶25

## மட்டக்களப்பில் புலிகள் மீதான தாக்குதலை தடுக்க தலைமைப்பீடம் விரைவில் நடவடிக்கை



மட்டு – அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் தெரிவிப்பு

▶32

Orient Textilien & Schmuck

Koenigswall 16 (AM hbf),
44137 Dortmund-
Tel: 0231-162377
Fax:49-231-147836

தரம் உத்தரவாதம் அதிகதேர்வு மலிவோ மலிவு!!

* அனைத்து ஜவுளி வகைகள்
* கனம், தரம் மிக்க எவர்சில்வர் பாத்திரங்கள்
* அழகிய அன்பளிப்புப் பொருட்கள், அலங்கார ஆபரணங்கள், பரதநாட்டிய உடைகள்
* வாத்தியக் கருவிகள், கைக்கடிகாரங்கள்
* நவீன வண்ணங்களில் தரமான தங்காபரணங்கள், தாராள தேர்வில் 916/22K உத்தரவாதத்துடன் சிங்கப்பூர் விலையில் விற்பனையாகிறது.

உரிமையாளர்: ச.ஜெகதீஸ்




உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை - கப்டன் கஜன்



**V.T.Cash & Carry**

900g யாழ்ப்பாணம் மிளகாய்தூள் ஒரு போத்தல் 1Euro - மட்டக்களப்பு முறையில் தயாரிக்கப்பட்ட கட்டா கருவாடு 250g 1euro - 350 ச.மீற்றரில் அமைந்துள்ள ஸ்தாபனம்

Tél: 01 40 05 07 18
Fax: 01 40 05 06 92

15, Rue Cail, 75010 Paris.
M°: La Chapelle-Gare du Nord


# ஆனையிறவுப் பகுதியில் கோரவிபத்து இளைஞன் தலை சிதையுண்டு மரணம்!

(11.07.04)

ஆனையிறவுப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஒரு வீதி விபத்தில் இளைஞர் ஒருவர் தலை சிதறுண்டு மரணமானார். ஏ-9 கண்டி வீதியில், யாழ்ப்பாணத்திலிருந்து சென்றுகொண்டிருந்த பாரவண்டியும் கிளிநொச்சியிலிருந்து வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் மோதுண்டன என்று கூறப்படுகிறது. மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த இளைஞர் பாரவண்டியோடு மோதி அதன் சக்கரங்களுக்குள் அகப்பட்டு, தலை சிதைந்த நிலையில் இறந்து கிடந்தார்.

இறந்தவர் யாழ்.பல்கலைக்கழகத்தின் வணிகத்துறை மாணவரான தேவராசா உதயகுமார் (29) என அடையாளம் காணப்பட்டிருக்கிறார். இவர் கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரியிலும் பணியாற்றி வந்தார். மோட்டார் சைக்கிளில் இவருடன் பின்னால் அமர்ந்து சென்ற யாழ். பல்கலைக்கழக மாணவனான கந்தசாமி அசோக் (29) என்பவர் விபத்து நேர்ந்தபோது மோட்டார் சைக்கிளில் இருந்து பாய்ந்து உயிர் தப்பினார். அவருக்கு காலில் காயம் ஏற்பட்டது. அவர் பின்னர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இறந்தவரும் காயமடைந்தவரும் கிளிநொச்சியைச் சேர்ந்தவர்களாவர். இருவரும் கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் சென்றுகொண்டிருந்தபோதே விபத்தில் சிக்கினர். சம்பவம் நடந்த இடத்துக்கு உடனடியாக வந்த தமிழீழக் காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

கிளிநொச்சி நீதிமன்ற நீதியாளர் மயூரன் சடலத்தைப் பார்வையிட்டார். சடலம் பின்னர் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டது. சம்பவத்துடன் தொடர்புடைய பாரவண்டியின் சாரதியை கைதுசெய்த காவல்துறையினர், வாகனத்தைத் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். ஏ-9 வீதியில் - ஆனையிறவுப் பகுதியில் - அண்மைக்காலமாக வீதி விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன.

இதேவேளை, கந்தரோடைப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்ற மற்றொரு வீதி விபத்திலும் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். பாரவண்டி ஒன்றும் மோட்டார் சைக்கிளும் நேர் எதிராக மோதிக்கொண்டதில் இந்த விபத்து ஏற்பட்டது என்று கூறப்பட்டது.

கந்தரோடை - சுன்னாகம் வீதியில் ஆலடி என்று அழைக்கப்படும் இடத்தில் இந்தச் சம்பவம் நிகழ்ந்தது. பாரவண்டியுடன் மோதுண்ட தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயப் பகுதியைச் சேர்ந்த பரமசிவம் றஜீபன் (23) என்பவரே உயிரிழந்தவராவார். இவரது மோட்டார் சைக்கிளுடன் மோதிய பாரவண்டியின் சாரதி தப்பி ஓடிவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

## எதிரியை துரத்தி அழிக்கும் நிலைக்கு இன்று நாம் வளர்ந்திருக்கிறோம்

**கேணல் சூசை**

தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களுடைய வழிகாட்டலில் கரும்புலி மாவீரர்களின் தாக்குதல் திறனால் எம்மை நசுக்கி அழிக்க முற்பட்ட எதிரியை துரத்தி அழிக்கும் நிலைக்கு இன்று நாம் வளர்ந்திருக்கிறோம் என கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்கள் தெரிவித்துள்ளார். கடற்கரும்புலிகளான மேஜர் காந்தரூபன், கப்டன் வினோத், கப்டன் கொலின்ஸ் ஆகியோரின் 14ம் ஆண்டு நினைவு நாளை ஒட்டி நேற்று கிளிநொச்சி காந்தரூபன் அறிவுச்சோலையில் அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துரைத்தபோதே கேணல் சூசை அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஒருகாலப் பகுதியில் சிங்கள இராணுவம் எம்மைத் துரத்தி அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டபோது நாம் எம்மை தற்காத்துக்கொள்ளும் நடவடிக்கையினை மட்டுமே மேற்கொள்ள முடிந்தது. ஆனால் இன்று எமது தேசியத் தலைவர் அவர்களுடைய வழிகாட்டலில் கரும்புலி மாவீரர்களின் வீரமிகு தாக்குதல் திறனால் எதிரியை துரத்தியழிக்கும் நிலைக்கு இன்று நாம் வளர்ந்திருக்கிறோம். அந்த வகையில் மேஜர் காந்தரூபன், கப்டன் வினோத், கப்டன் கொலின்ஸ் ஆகியோர் வழிகாட்டியாக அமைந்துள்ளார்கள் என்றும் மேலும் குறிப்பிட்டார். இந்த நிகழ்வில் கலந்துகொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் கா.வே.பாலகுமாரன் அவர்கள் கருத்துரைக்கையில், காந்தரூபன் அறிவுச்சோலைக்கு புலம்பெயர்ந்த நோர்வே மக்கள், அமைப்புக்கள் பல்வேறு உதவிகளை செய்து வருவது பாராட்டத்தக்கது. எதிர்காலத்தில் இவ்வாறான அறிவுச்சோலைகளின் ஊடாக நமது சிறார்களின் நலன்களைப் பேணுவது, வீரகாவியமான மாவீரர்களின் எண்ணங்களை நிறைவு செய்வதாகவே அமையும் என தெரிவித்தார்.


**LA CHAPELLE**
**இறைச்சிக் கடை**

சுவையான, சுத்தமான, தரமான ஆடு, மாடு, உயிர் கோழி மற்றும் கோழிக் கால்களுடன் அனைத்து வகையான இறைச்சி வகைகளையும் பெற்றுக் கொள்ளலாம்

34 Rue Philippe Girard
Paris 75010, M° : La chapelle
Tel : 01 42 05 00 95

**அதிசயம் ஆனால் உண்மை**

உங்கள் அனைத்துக் கொண்டாட்டங்களுக்கும் தேவையான பேப்பர் பிளேட்ஸ், கப், மேசை விரிப்பு, கரண்டி, பாயாசக்கப், கை துடைக்கும் பேப்பர் மற்றும் உங்களுக்குத் தேவையானவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

விமல் விநியோக நிலையம்
**VIMAL DISTRIBUTION**
1 Bis , Rue Chemain Vert
93800 Epiny Sur Saine
Port 0616812200 Ou 0666795689
Tel.et Fax - 01 42 35 24 98
குறிப்பு - மிகுதிப் பொருட்கள் திரும்பப் பெறப்படும்.

**பற்களின் அழகு சொற்களுக்கு உறுதி!**
**உங்கள் பற்களில் பிரச்சினையா?**



புதிய பற்கள் கட்டவேண்டுமா?
ஆலோசனைக்கு எம்மை நாடுங்கள்!
தொடர்புகளுக்கு:
01 48 84 92 67
06 25 89 75 52
என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளுங்கள்.

**EUROCONSULT SARL TRADUCTIONS**

**மொழி பெயர்ப்பு நிலையம்**

அனைத்துவித மொழி பெயர்ப்பு, இலவச சட்ட ஆலோசனை, வர்த்தக - கணக்காய்வு - தொழிலாளர் பிரச்சனைகள், நிர்வாகக் கடிதம் போன்ற உங்கள் தேவைகளுக்கு
24, Rue Perdonnet , 75010 Paris
Tel: 0153267010 - Fax: 0153267502

**போட்டோ பாலா**

மங்கலகரமான உங்கள் விழாக்கள் மற்றும் அனைத்து நிகழ்வு போட்டோ அல்பங்களை பாதுகாப்பான முறையில் Lamination செய்துகொள்ளாம்
உங்கள் அனைத்து தொடர்புகளுக்கும்:
Photo Bala
87 Rue de Clignancourt, 75018 Paris
Tel&Fax: 01.42.23.39.15 / 06 18 35 40 77

**Errances Travels**



55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle ou Louis Blanc

Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 560 Eu |
| Delhi | - | 560 Eu |
| Bangkok | - | 550 Eu |
| Colombo | - | 660 Eu |
| Singapour | - | 660 Eu |
| Madras | - | 658 Eu |
| New york | - | 550 Eu |
| Montreal | - | 540 Eu |
| Oslo | - | 315 Eu |
| Toronto | - | 540 Eu |

# கொள்ளுப்பிட்டிச் சம்பவம் சமாதான முயற்சியைக் குழப்பும் செயல்



## – விடுதலைப் புலிகள்

கொழும்பு கொள்ளுப்பிட்டிப் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சம்பவம் சமாதான முயற்சியைக் குழுப்பும் செயல் எனத் தெரிவித்திருக்கும் விடுதலைப் புலிகள், இச்சம்பவத்துடன் தமக்கு எதுவித தொடர்புமில்லையெனவும் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், இந்தச் சம்பவத்தை மிக வன்மையாகக் கண்டித்துள்ளதுடன், சமாதான முயற்சிகளைக் குழப்ப மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் ஒரு வெளிப்பாடே இது என்றும் அண்மைக் காலமாகச் சமாதான முயற்சிகளுக்கு சவால்விட்டு அதனைக் குழப்பமுயலும் சக்திகளின் கைவரிசையே இதுவென்று சந்தேகிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகமும் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில், சிறீலங்கா அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதான முயற்சிகளைக் குழப்புவதற்குக் கங்கணம் கட்டி நிற்கும் சக்திகளே இந்தத் தாக்குதலையும் நடத்தியுள்ளதாகக் கருதுகின்றோம். சமாதானத்தை எதிர்பார்த்திருக்கும் மக்களையும், தற்போது நிலவும் சமாதானச் சூழலையும் இந்தச் சம்பவமானது குழப்பி விடுமென்பதால், இந்தச் செயலை நாம் மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம். சமாதான முயற்சிகளைக் குழப்பும் நோக்கில் செயற்படும் ஆயுதக் குழுக்களினால் கிழக்கில் எமது போராளிகளும், பொது மக்களும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் குழுக்களானது இராணுவப் புலனாய்வுப் பிரிவினதும், ஆயுதப் படைகளினதும் உதவியுடன் செயற்பட்டு வருவதாக உறுதியாக நம்புகின்றோம். இவ்வாறான ஆயுதக் குழுக்களுக்கு உதவியும், ஆதரவும் வழங்குவதை இராணுவ புலனாய்வுப் பிரிவும், ஆயுதப் படையினரும் நிறுத்தினால் மட்டுமே சமாதானச் சூழ்நிலை தொடர்ந்தும் நிலவும் என்பதை நோர்வே அனுசரணையாளரூடாகவும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரூடாகவும் சிறீலங்கா அரசுக்கு அறிவித்துள்ளோம். இவ்வாறான ஆயுதக் குழுக்களைச் சுதந்திரமாக நடமாடவும், அவர்களுக்கு ஆதரவு வழங்கியமையும், கொழும்பில் இடம் பெற்ற தாக்குதல்களுக்கு வழிகோலியிருக்கலாமென நாம் பெரிதும் நம்புகின்றோம்.



போர் நிறுத்த உடன்பாட்டின் 1.8வது பிரிவின் படி, வடக்கு, கிழக்கிலுள்ள அனைத்து ஆயுதக் குழுக்களும் நிராயுதபாணிகளாக்கப்பட வேண்டும். அத்துடன், நாசகார நடவடிக்கையில் ஈடுபடும் ஆயுதக் குழுக்களும் கட்டாயம் நிராயுதபாணிகளாக்கப்பட வேண்டும். இராணுவ புலனாய்வுப் பிரிவும் ஆயுதப் படையினரும் போர் நிறுத்த உடன்பாட்டுக்கமையச் செயற்பட வேண்டுமென்பதுடன், சமாதான முயற்சிகளைக் குழப்பும் வகையில் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை நிறு-த்தி, சமாதானச் சூழலொன்றைத் தோற்றுவிக்கும் விதத்தில் செயற்பட வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுக்கின்றோம். இந்தச் சூழ்நிலையில், போர் நிறுத்த உடன்பாட்டைக் கடைப்பிடித்து சமாதானச் சூழல் ஒன்றைத் தோற்றுவிப்பதில் நாம் உறுதியாகவிருக்கின்றோம் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யுத்தத்தை நோக்கி நாட்டைத் தள்ளுகின்றது இந்த அரசு!

### எச்சரிக்கின்றார் தமிழ்ச்செல்வன்

(11.07.04)

கடந்த இரண்டரை வருடகாலமாகக் கட்டி எழுப்பிய நம்பிக்கையைச் சீர்குலைத்து நாட்டை யுத்த நெருக்கடியை நோக்கி இந்த அரசும், அரசுப் படைகளும் தள்ளிக் கொண்டிருக்கின்றன என்ற எண்ணத்தையே அண்மைக்கால நிகழ்வுகள் எமக்கு ஊட்டுகின்றன என்று தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார். பி.பி.சி. செய்தி நிறுவனத்திற்குக் கிளிநொச்சியில் வைத்து வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் இப்படித் தெரிவித்திருக்கின்றார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பொதுமக்கள் மீதும், போராளிகள் மீதான படுகொலைத் தாக்குதல்கள், சீர்குலைவு நடவடிக்கைகள் போன்றவை படையினரின் மறைமுக ஆதரவுடனேயே முன்னெடுக்கப்படுகின்றன. அவற்றை நிறுத்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என வலியுறுத்தி வருகிறோம். ஆனால், அரசுத் தரப்பும், படைத் தரப்பும் ஆக்கபூர்வமான - பயனுள்ள நடவடிக்கை ஏதும் எடுப்பதாகத் தெரியவில்லை.

படுகொலைகளுக்கும், வன்முறைகளுக்கும் காரணமானவர்களைக் கொழும்பிலும் ஆயுதங்களுடன் சுதந்திரமாக நடமாட அனுமதித்திருப்பது சகலரும் அறிந்த உண்மை. கருணாவின் பிடியிலும் - இராணுவப் புலனாய்வுப் பிரிவினது பாதுகாப்பிலும் இருந்து தப்பி வந்து பலர் எம்மிடம் தெரிவித்த விடயங்கள் இவற்றை உறுதிப்படுத்தியுள்ளன-என்று தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்தார்.

### கொட்டுகச்சிவயில் விகாராதிபதி படுகொலை

(11.07.04)

புத்தளம் கொட்டுக்கச்சிவ பகுதியிலுள்ள விகாரையொன்றில் பிரதம சங்கநாயக்கர் கடந்த சனிக்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் படுகொலை செய்யப்பட்டுள்ளார். கொட்டுகச்சிவ குளகட்டுவ மங்களராமயபதி கொட்டுவவெவ சத்தாசீலஹிலி (வயது 68) என்பவரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் விகாரையும் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் எவரும் கைது செய்யப்படவில்லையெனத் தெரிவிக்கும் புத்தளம் குற்றப்பிரிவு பொலிஸ், நிலையப் பொறுப்பதிகாரி பியசோம சில்வா, புலன்விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

## கருணா விவகாரத்துக்கு தீர்வு காணும் வரை பேச்சுவார்த்தை இல்லை!

### – நோர்வேக்கு அன்ரன் பாலசிங்கம் உறுதியாகத் தெரிவிப்பு

(11.07.04)

கிழக்கு மாகாணத்தில் இராணுவத்தினரின் பின்னணியில் விடுதலைப் புலிகள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்களுக்கு முற்றுப் புள்ளி இடப்பட்டு, கருணா விவகாரத்துக்குத் தீர்வு காணப்படுகின்ற வரையிலும் சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு விடுதலைப் புலிகள் தயாராக இல்லை என்று விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நோர்வே அரசாங்கத்திற்குத் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்.

நோர்வேயின் சிறீலங்காவிற்கான விசேட சமாதானத் தூதுவர் எரிக் சூல்ஹைம் கடந்த செவ்வாயன்று அன்ரன் பாலசிங்கம் அவர்களை இலண்டனிலுள்ள அவரது இல்லத்தில் சந்தித்தபோது, இவ்வாறு தெரிவித்த அவர், விடுதலைப் புலிகளை யுத்தத்திற்கு வலிந்து இழுக்கும் வகையில் விசமத்தனமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் கடும் ஆட்சேபம் தெரிவித்தார்.

யுத்தம் ஒன்றுக்குரிய மனோபாவத்துடன் செயற்பட்டு, யுத்த நிறுத்த மீறல்களில் ஈடுபட்டுவரும் படையினரைக் கட்டுப்படுத்த முடியாதவராக அரசுத் தலைவர் இருப்பதால், அவரால் சமாதான முயற்சியை உண்மையாக முன்னெடுத்துச் செல்ல முடியாது என்பதையும் சூல்ஹெய்முக்கு தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

இதேவேளை, நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜான் பெற்றர்ஸன் புதுடில்லியில் இந்திய வெளி விவகார அமைச்சர் நட்வார் சிங், இந்திய தேசியப் பாதுகாப்பு அமைச்சர் ஜே.என்.தீக்ஷித் ஆகியோரைச் செவ்வாயன்று சந்தித்து இலங்கை சமாதான முயற்சியின் நெருக்கடி நிலைமை குறித்து ஆராய்ந்திருக்கிறார்.

இந்தச் சந்திப்பின் பின்னர், செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த பெற்றர்சன், கடந்த வாரம் சூல்ஹைம் வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிகளுடனும், சிறீல-ங்கா அரசுத் தலைவருடனும் நடத்திய சந்திப்புகளின் விபரங்களை நட்வார் சிங்கிற்கும், தீக்ஷித்திற்கும் தெரிவித்ததாகக் கூறினார். ஆனால், பெற்றர்சனுடன் ஆராயப்பட்ட விடயங்களைத் தம்மால் முழுமையாக வெளியிட முடியாது என்றும், சமாதான முயற்சிகள் தொடர்பாக நோர்வே அவ்வப்போது இந்தியாவுக்குத் தெரியப்படுத்தி வருவதாகவும், அத்தகையதொரு சந்திப்பே இதுவும் என்றும் இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் நவ்தேஜ் சர்ணா செய்தியாளர்களுக்குத் தெரிவித்தார்.

"SHELVA" "ZUG"
Credit and Insurance
குறைந்த வட்டியில் அதிகூடிய
வங்கிக்கடன்
30% வீதத்தில் வாகனக் காப்புறுதி
சாரதிப் பத்திரம் இல்லாவிட்டாலும் 30 மட்டுமே...
வீட்டுக்காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
இலங்கையிலிருந்து சுவிஸ் வருபவர்களுக்கான மருத்துவக் காப்புறுதி
(Visa கிடைக்காவிட்டால் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்)
"SHELVA" "ZUG"
T.Thangarajah
Buonaserstr. 2
6343 Rotkreuz
Switzerland
Telefon
041 790 64 63
041 790 64 66
Fax
041 790 64 68
Natel
079 514 64 28

# சிறீலங்காவின் தேசிய காவல்துறை ஆணைக்குழு உரியமுறையில் செயற்படவில்லை

## ஆசியன் மனித உரிமைகள் ஆணைக்குழு குற்றம் சுமத்தியுள்ளது



(10.07.04)

சிறீலங்காவின் தேசிய காவல்துறை ஆணைக்குழு, பொதுமக்களின் முறைப்பாடுகள் தொடர்பாக உரிய விசாரணைகளை மேற்கொள்ளவில்லை என ஆசியன் மனித உரிமைகள் ஆணைக்குழு குற்றம் சுமத்தியுள்ளது. காவல்துறையினர் பொதுமக்கள் மீது மேற்கொள்ளும் வதை இம்சைகள் என்பவை தொடர்பான முறைப்பாடுகளை இந்த ஆணைக்குழு விசாரணை செய்யவில்லை என தெரிவிக்கும் ஆசியன் மனித உரிமைகள் ஆணைக்குழு, பொதுமக்களின் முறைப்பாடுகளை உரிய முறையில் விசாரணை செய்ய முடியாவிட்டால், காவல்துறை ஆணைக்குழுவின் தலைவர் பதவி விலக வேண்டும் எனக் கேட்டுள்ளது.

ஆசியன் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பாஸில் பெர்ணா-ன்டோ, இது தொடர்பில் சிறீலங்கா காவல்துறை ஆணைக்குழு தலைவர் ரஞ்சித் அபேசூரியவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். இலங்கையில் காவல்துறையினர் மேற்கொள்ளும் பொதுமக்கள் மீதான வதைகள் குறித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளாமையின் ஊடாக காவல்துறையினரின் வதை இம்சைகளுக்குத் தேசிய காவல் துறை ஆணைக்குழு உதவும் செயற்பாடுகளைச் செய்து வருவதாக அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறீலங்காவின் தேசிய காவல்துறை ஆணைக்குழு சிறந்த முறையில் செயற்படுமானால் அதற்குத் தாம் முழுமையான ஆதரவைத் தருவதாகத் தெரிவித்துள்ள பாஸில் பெர்ணான்டோ. பொதுமக்களைத் துன்புறுத்தும் எவ்வித நடவடிக்கைக்கும் இடம் தர வேண்டாம் என கேட்டுள்ளார்.

# கிழக்கு வன்செயல்களைக் கட்டுப்படுத்தாவிட்டால் பாரிய அச்சுறுத்தல் ஏற்படும்

## சமாதான சபை எச்சரிக்கை

(10.07.04)

கிழக்கு மாகாணத்தின் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வன்செயல்களையும் பதற்றங்களையும் நீக்குவதற்கு உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்கத் தவறும் பட்சத்தில் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை உரிய முறையில் முன்னெடுத்துச் செல்வதில் சிரமங்களை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படும் எனச் சுயாதீன தேசிய சமாதான சபை தெரிவித்துள்ளது. 2003ம் ஆண்டு ஏப்ரல் மாதம் இடை நிறுத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளை உடனடியாக மீண்டும் தொடர வேண்டிய அவசியத்தையும் சமாதான சபை வலியுறுத்தியுள்ளது இது தொடர்பில் அந்த சபை விடுத்துள்ள செய்தி குறிப்பில் நாட்டில் இன்று பதற்றமான சூழ்நிலை ஏற்படுவதற்கு அரசாங்கத் தரப்பு காரணமாக அமைந்துள்ளதாகக் கூறியுள்ளது. அரசாங்கம் தமது பொறுப்புகளில் இருந்து விலகிச் சென்றதன் காரணமாகவே இன்று அதனால் நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே குறுகிய அரசியல் நோக்கங்களைக் கைவிட்டுச் சமாதான முயற்சிகளை முன்கொண்டு செல்ல அரசு முன்வரவேண்டும் என சுயாதீன தேசிய சமாதான சபை கேட்டுள்ளது.

இதேவேளை, நாடாளுமன்றத்தில் இருந்து தமிழர்கள் வெளியேற்றப்பட வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க, தேர்தல் பிரச்சாரக் கூட்டம் ஒன்றில் கூறியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் குற்றம் சுமத்தியுள்ளார். நேற்று கொழும்பில் ஊடக மாநாடு ஒன்றை நடாத்திய அவர், சோமவன்ச அரமசிங்க போன்றவர்கள் அரசாங்கத்தில் இருக்கும் வரை இனப்பிரச்சினைக்குத் தீர்வை எதிர்பார்க்க முடியாது எனத் தெரிவித்தார். மாகாண சபைத் தேர்தல் முடிந்தவுடன் வடக்கு கிழக்குக்கு வெளியே வாழும் தமிழ் மக்கள் மீண்டும் ஒருமுறை இராணுவத்தினரின் சோதனைக் கெடுபிடிகளுக்கு உள்ளாக வேண்டியேற்படும் எனவும் அவர் எச்சரித்தார். அவ்வாறு ஒரு நிலைமை தோன்றினால் நிச்சயமாக இந்த வருட இறுதிக்குள் ஐக்கிய தேசிய கட்சி மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றும் எனவும் மகேஸ்வரன் தெரிவித்தார்.

### மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினரின் சோதனை நடவடிக்கை தீவிரம்

(10.07.04)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறீலங்காகப் படையினரின் சோதனைக் கெடுபிடிகள் அதிகரித்துக் காணப்படுவதால் பொதுமக்கள் பல அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். வவுணதீவு, பட்டிருப்பு, செங்கலடி, மண்முனைச் சோதனைச் சாவடியூடாகச் செல்லும் பொதுமக்கள் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர். தமது அடையாள அட்டைகளை எடுத்துச் செல்லாதவர்களைச் சோதனைக்கு உட்படுத்தி நீண்ட நேரம் வரை தடுத்து நிறுத்துகின்றனர்.

மட்டக்களப்பு நகர்ப் பகுதியில் மோட்டார் சைக்கிள் மற்றும் ஏனைய வாகனங்களில் செல்வோர் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர். வீதிகளில் திடீர்த் திடீரென வாகனங்களை நிறுத்தியும் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர்.

# சிறீலங்காவின் காவல்துறை மற்றும் இராணுவத்தில் தமிழர்கள் அதிகளவில் இடம்பெறச் செய்ய வேண்டும்

## – இந்திய அதிகாரி கில் கூறுகிறார்

(10.07.04)

சிறீலங்காவின் காவல்துறை மற்றும் இராணுவத்தில் தமிழர்கள் அதிகளவில் இடம்பெறச் செய்ய வேண்டும் என இந்திய பஞ்சாப் மாநில உயர் பாதுகாப்பு அதிகாரி கில் கூறியுள்ளார். அவ்வாறான நிலையிலேயே இலங்கையில் நிலவும் தமிழ் தீவிரவாதத்தைத் தோற்கடிக்க முடியும் எனவும் அவர் கூறியுள்ளார். இந்திய ஊடகவியலாளர்களுடன் இலங்கையின் தமிழ் தீவிரவாதம் என்ற தலைப்பில் கலந்துரையாடிய போது கருத்துத் தெரிவித்த அவர், 2000ம் ஆண்டு தாம் இலங்கைக்கு வந்தபோது மிகக் குறைந்த அளவிலேயே தமிழ் அல்லது தமிழ் தெரிந்தவர்கள் படைகளில் இருந்தனர் எனக் கூறியுள்ள அவர், தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்துவதற்கு மொழி அறிவு அவசியம் எனவும் தெரிவித்துள்ளார்.

சிறீலங்காவின் பாதுகாப்புப் படை முழுமையாகச் சிங்களவர்களின் ஆதிக்கத்துக்கு உட்பட்டுள்ளது. எனினும் ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு ஜனநாயக நீரோட்டத்திற்கு வந்துள்ளதாகக் கூறப்படும் தமிழ் தீவிரவாதிகள் புலனாய்வு பிரிவினர்களாகச் சிங்களப் பாதுகாப்புப் படையினருக்கு உதவியளித்து வருகின்றனர். இவர்களைப் படையில் இணைக்க முயலவேண்டும் என்றும் கில் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமானால் அங்கு தேசிய கொள்கை ஒன்று அவசியமாகும். இலங்கையில் அவ்வாறான கொள்கை இது வரையில் தயாரிக்கப்படவில்லை. இந்த கொள்கை தயாரிக்கப்படும் போதே தேசிய ரீதியான இணக்கத்தை ஏற்படுத்த முடியும் எனவும் பஞ்சாப்பின் முன்னாள் உயர் பாதுகாப்பு அதிகாரி கில் கருத்துக் கூறியுள்ளார். இலங்கையில் தேசியக் கொள்கை வகுக்கப்படாதவிடத்து நாடாளுமன்றத்தில் தமிழர்களுக்கு இருக்கும் 22 ஆசனங்கள் என்ற நிலையை அக-ற்ற முடியாது என்றம் குறிப்பிட்ட கில், இலங்கையின் இனப்பிரச்சினை உள்நாட்டிலேயே தீர்க்கப்பட வேண்டும். அதற்கு நோர்வே ஏற்பாட்டாளர் என்பது சரியான நிலைப்பாடு அல்ல என்றும் கூறியள்ளார்.

முன்னர் பஞ்சாப்பில் இருந்ததைக் காட்டிலும் இலங்கையின் தற்சமயம் இருக்கும் தீவிரவாத அமைப்பு மிகவும் வலிமை வாய்ந்தது எனபதை கில் ஏற்றுக்கொள்கிறார். இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதிகளின் பெரும் நிலப்பரப்பைப் போராளிகள் நிர்வாகம் மேற்கொள்கிறார்கள். எனினும் இது போன்ற நிலைமை பஞ்சாப்பில் ஒரு போதும் இடம்பெறவில்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியா, இலங்கையின் சமாதானத் தீர்வுக்குப் பொருளாதார ரீதியில் உதவ முடியும் எனவும் கருத்துரைத்துள்ள கில், இந்திய அமைதிப் படை இலங்கையில் நிலைகொண்டிருந்த போது சுமார் 6 மாதங்கள் வரை இலங்கையில் தங்கியிருந்து நடவடிக்கைகளை மேற்கொண்டவராவார்.



நேசன் Cash and Carry

இலங்கை, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் கடலுணவு வகைகள் உடன் மரக்கறிவகைகள் தொலைபேசி அட்டைகள் மற்றும் தமிழ் மக்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் மிக மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
இலங்கை இந்தியா பசுமையான மரக்கறி வகைகள், கடல் உணவு வகைகள், பதப்படுத்தப்பட்டுள்ள உணவுகள், பழவகைகள், V.D.O C.D க்கள் விற்பனைக்கும், வாடகைக்கும் மற்றும் உங்களுக்கு தேவையான பொருட்களையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.

217, The Broadway, Southall, Middiesex, UB1 1NB - Tel: 020 8574 4018 Fax: 020 8574 4035 Mobile: 07904100201

ஈழமுரசு
POORALAM WEEKLY

# பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டி...

சிறீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு சுமார் இரண்டரை வருடங்களுக்கு பின்னர், கொழும்பு கொள்ளுப்பிட்டி காவற்துறை நிலையத்தில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் ஒன்று நடாத்தப் பட்டிருக்கின்றது. தாக்குதல் குறித்த முடிவுகள் வெளிவருவதற்குள்ளாகவே, இது விடுதலைப் புலிகளின் நடவடிக்கைதான் என்றும் இத் தாக்குதல் சமாதான முயற்சிகளை முற்றுப்பெற வைத்துவிடும் என்றும் அச்சங்கள் வெளியிடப்பட்டன. மட்டக்களப்பில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் படுகொலைச் சம்பவங்கள் பற்றியெல்லாம் வாய் திறக்காத உள்ளூர் மற்றும் உலக சமூகம், இச்சம்பவத்தின் பின்னர் சமாதானத்தை பாதித்துவிடும் ஒரு நடவடிக்கை இது என கண்டனங்களைத் தெரிவித்து அறிக்கைகளையும் வெளியிட்டிருந்தன. இதே வேளை, இத் தாக்குதலை தாங்கள் செய்யவில்லை என்று விடுதலைப் புலிகள் மறுத்திருந்ததுடன், இது சமாதானத்தை குழப்புவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கை என்று தமது கண்டனத்தையும் தெரிவித்திருந்தனர்.

கருணா மட்டக்களப்பில் இருந்து விரட்டப்பட்டதன் பின்னர், மட்டக்களப்பில் தொடர்ச்சியாக பல படுகொலைகள் இடம்பெற்றுள்ளன. தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. இதில் பெரும்பாலானவை இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசத்தில், இராணுவத்தினரின் அதியுயர் பாதுகாப்பு பகுதிகளில் இடம்பெற்றிருக்கின்றன. இராணுவ - புலனாய்வுப் பிரிவினரின் ஆதரவுடன் கருணா குழுவினரே இந்தத் தாக்குதலில் ஈடுபடுத்தப்பட்டு வருவதாக உறுதிப்படுத்தப்பட்ட போதிலும், சிறீலங்கா அரசும் அதன் இராணுவமும் தொடர்ச்சியாக அதனை மறுத்துவருவதுடன், அவற்றை தடுப்பதற்கான எந்தவித நடவடிக்கைகளையும் ஆக்கபூர்வமாக இதுவரை மேற்கொள்ளவில்லை.

சிறீலங்கா அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர் நிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம் குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் தமிழ்க் குழுக்களிடம் இருந்து ஆயுதங்கள் களையப்பட்டிருக்க வேண்டும். ஆனால், சிறீலங்கா இராணுவத்துடன் இயங்குகின்ற தமிழ் குழுக்கள் ஆயுதங்களுடனேயே இன்றும் நடமாடுகின்றன. கடந்தவாரம் பொலநறுவை 'ஹிங்கிராங்கொட பகுதியில் உள்ள பௌத்த விகாரை ஒன்றினுள் வைத்து ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்ட கருணா குழுவைச் சேர்ந்தவர்கள் எனக் கருதப்படும் 14 இளைஞர்கள், நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு எந்தவித விசாரணைகளுமின்றி பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கின்றார்கள். சிறீலங்கா அரசினதும் அதன் இராணுவத்தினதும் இவ்வாறான நடவடிக்கைகள் சமாதானத்தை சாகடிக்கும் செயற்பாடுகளாகவே அமைந்துள்ளன.

கருணா விவகாரம் சமாதான முயற்சிகளுக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்தும் என்பதைத் தெரிந்துகொண்டும், அதற்கு உரிய தீர்வொன்றை காண முற்படாமல், சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்கப்போவதாக சிறீலங்கா அரசு கூறிவருகின்றது. பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுவதுபோல, விடுதலைப் புலிகளுடன் பேசப்போவதாகக் கூறிக்கொண்டு கருணாவின் மூலம் மட்டக்களப்பில் ஒரு பதட்டநிலையை தோற்றுவிக்க முயல்கின்றது. சந்திரிகா அரசு போடுகின்ற இந்த இரட்டை வேடம் சமாதானத்திற்குரிய தொன்றாகத் தோன்றவில்லை, யுத்தம் ஒன்றுக்கான முன்னேற்பாடுகள் என்றே எண்ணத்தோன்றுகின்றது.

கருணாவின் துரோகத்தனத்தால் கிழக்கில் விடுதலைப் புலிகள் பலம் இழந்துவிட்டதாக எண்ணுகின்ற சந்திரிகா கூட்டணி, யாழ். குடாவை பிடித்ததுபோன்று இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மட்டக்களப்பையும் முழுமையாக தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துவிடலாம் என்று கருதுகின்றது.

இந்நிலையில், மாகாணசபைத் தேர்தல்களின் முடிவுகளும் 'எரிகிற வீட்டில் எண்ணையை ஊற்றியதுபோல' சந்திரிகாவினதும் அவரது கூட்டணியினரதும் போர் வெறிக்கு தீனிபோடுவதாக அமைந்திருக்கின்றது. எனவே, அடுத்த நாடாளுமன்ற கூட்டத் தொடரில் சந்திரிகாவின் பலம் நிரூபிக்கப்படும் பட்சத்தில், மீண்டும் சந்திரிகா போரை முன்னெடுக்கவே முனைவார் என்பது உறுதி. அவருக்கு பக்கபலமாக நிற்கும் ஜே.வி.பியும், சிங்கள இனவாத அமைப்புகளும் அதையேதான் விரும்புகின்றன. எனவே இனிவரும் காலங்கள் இலங்கையை போர் மேகங்கள் சூழும் வாய்ப்புக்களே அதிகமாக உள்ளன.

அவ்வாறான ஒரு நிலை தோன்றுமாயின், அதை எதிர்கொள்ள வேண்டிய கடமை புலம்பெயர் மக்களின் கைகளிலேயே வந்துசேரும். சிங்கள இனவாதங்களின் போர் வெறியை உலக அரங்கில் அம்பலப்படுத்தி, அதனை தடுத்து நிறுத்த வேண்டியதும், தமிழர்களின் பலத்தை மேலும் அதிகரித்து சமாதானப்பாதையை உறுதியாக்க வேண்டியதும் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் கைகளிலேயே தங்கியிருக்கும்.

# 850 நாள் யுத்த நிறுத்தத்தில் 30ற்கும் அதிகமான போராளிகள் இழப்பு

(11.07.04)

`850 நாட்களாக நீடித்து வரும் யுத்த நிறுத்த காலத்தில் நாம் 30க்கும் அதிகமான போராளிகளை இழந்துள்ளோம். விடுதலைப் புலிகளை பலமான சக்திகளாக மாற்றியவர்கள் சிறீலங்கா இராணுவமும் கடற்படையும் விமானப் படையும் பொலிஸ் படையுமே. கரும்புலிகளை உருவாக்கியது அரச படைகளே' என்று சார்ள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் தளபதிகளில் ஒருவரான அமுதாப் நேற்று முன்தினம் திங்கள் இரவு, திருமலை சிவன் மைதானத்தில் கரும்புலிகள் தின நிகழ்வில் பேசும் போது தெரிவித்தார். விடுதலைப் புலிகள் இயக்கத்தில் மில்லர், அங்கயற்கண்ணி போன்று நூற்றுக் கணக்கில் கரும்புலிகள் உருவாக வேண்டுமா என்பதைத் தீர்மானிப்பது அரசாங்கத்தின் கைகளில் தான் தங்கியுள்ளது என்றும் தளபதி அமுதாப் தெரிவித்தார்.

எமது விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில் தடை நீக்கிகளாகவும் நெருப்புப் பொறிகளாவும் கரும்புலிகள் செயற்பட்டார்கள். எமது விடுதலைப் போராட்டத்தில் ஒவ்வொரு வெற்றிக்குப் பின்னும் ஒரு வரலாறு உள்ளது. 1948 இலிருந்து சிங்களப் பேரினவாதம் தமிழினத்தை அழிப்பதில்தான் ஈடுபட்டு வந்துள்ளன. 1948 இல் இருந்த தமிழன் வேறு, 2004 இல் உள்ள தமிழன் வேறு என்பதை சிறீலங்கா புரிந்து கொள்ள வேண்டும் என்றும் தளபதி அமுதாப் தெரிவித்தார்.

நாம் இரத்தத்தைக் காணவிரும்பவில்லை, பிணத்தைச் சுமக்க விரும்பவில்லை. இவ்விரண்டையும் சந்திக்க நாம் நிர்ப்பந்திக்கப்பட்டோம். 1924 இலிருந்து இதுவரை 09 ஒப்பந்தங்களை நாம் செய்துள்ளோம். சிங்கள பேரினவாதம் அனைத்தையும் குழிதோண்டி புதைத்துவிட்டது. தமிழர்களாக வாழ விட வேண்டும். இந்த நிலைமையை நாம் ஏற்படுத்த வேண்டும் என்றார்.

# டக்ளஸ் ஏற்பாட்டில் பி.பி.சியில் கருணா பேட்டி!

விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து தப்பியோடி பல்வேறு குழப்பங்களையும் சர்ச்சைகளையும் உருவாக்கியுள்ள கருணாவின் பேட்டியை பி.பி.சி. தமிழோசை கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒலிபரப்பியது.

கருணாவின் குரல் அது என்பதை சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் உறுதிசெய்தன. இந்தப் பேட்டியை

ஈ.பி.டி.பி. டக்ளஸ் தேவானந்தா ஒழுங்கு செய்து தந்தார் என பி.பி.சி. தமிழோசை தெரிவித்தது. டக்ளஸ் தேவானந்தாவால் வழங்கப்பட்டதாகக் கூறப்படும் கையடக்கத் தொலைபேசி இலக்கம் ஒன்றின் ஊடாகவே தமிழோசை கருணாவுடன் தொடர்புகொண்டது எனத் தெரிகின்றது. தாம் மட்டக்களப்புப் பிரதேசத்திலிருந்து பேட்டியளிக்கிறார் எனக் கருணா அதில் குறிப்பிட்டாலும் அவர் அங்குதான் உள்ளாரா என்பதை சுயாதீனமாக உறுதி செய்ய முடியவில்லை என தமிழோசை குறிப்பிட்டது.


# பலாலி படைத்தளத்தில் அமெரிக்க இராணுவ புலனாய்வு குழுவினர்

(11.07.04)

அமெரிக்க இராணுவ புலனாய்வுக் குழுவொன்று கடந்த வெள்ளிக்கிழமை பலாலி இராணுவ தலைமையகத்திற்கு விஜயம் செய்து பல்வேறு விடயங்கள் குறித்தும் விரிவாக ஆராய்ந்துள்ளது. பலாலி மற்றும் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு சென்ற, ஐவர் கொண்ட அமெரிக்க புலனாய்வுப் பிரிவினர் இராணுவ, கடற்படை அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்தியுள்ளனர். இந்தச் சந்திப்புக்களின் போது, இலங்கை ஊடாக சர்வதேச பயங்கரவாதிகளின் தொடர்புகள் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகள் குறித்தும், விடுதலைப் புலிகளின் சர்வதேச நடவடிக்கைகளுக்கான இரகசியத் தொடர்புகள் குறித்தும், சட்டவிரோத ஆயுதக் கடத்தல் மற்றும் இரசாயனப் பொருட்கள் கடத்தல் பற்றியும், பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு இலங்கைத்

துறைமுகம் மற்றும் விமான நிலையங்கள் பயன்படுத்தப்படுகின்றனவா என்பது குறித்தும், விடுதலைப் புலிகள் தங்கள் புலனாய்வுக்காக பயன்படுத்தும் நவீன தொழில்நுட்பங்கள் குறித்தும், இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கான பொருட்களின் ஏற்றுமதி பற்றியும், ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள் `ஸ்கான்' செய்யப்படுதல், இவ்வாறான நடவடிக்கைகளுக்கு நவீன ஸ்கானர்களைப் பயன்படுத்துதல் குறித்தும், முக்கிய துறைமுகங்களின் பாதுகாப்பை பெருமளவில் பலப்படுத்துதல் பற்றியும், சிறீலங்கா படையினருக்கு புலனாய்வுப் பயிற்சிகளை வழங்குவது குறித்தும், இலங்கையிலிருந்தும், இலங்கை ஊடாகவும் அமெரிக்காவுக்கு கப்பல்கள் மூலம் பொருட்கள் அனுப்பப்படும் முன் அவற்றை பரிசோதனைக் குட்படுத்துவது பற்றியும்,

ஆசியாவிலிருந்து அமெரிக்காவுக்குள் பயங்கரவாதம் ஊடுருவுவதை கண்டுபிடிப்பது, தடுப்பது குறித்தும் ஆராயப்பட்டதாக பலாலி இராணுவ தலைமையக அதிகாரிகள் தெரிவித்தனர்.



# நோர்வேயின் தூதுவர் ஹான்ஸ் பிறஸ்கர் கிளிநொச்சி செல்கின்றார்

(11.07.04)

சிறீலங்காவுக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிறஸ்கர் நாளை செவ்வாய்கிழமை கிளிநொச்சி செல்லவுள்ளார். தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்திக்கவுள்ள அவர், சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக முக்கிய பேச்சுக்களை நடத்துவார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை சமாதான பேச்சுக்களுக்கான நிகழ்ச்சி நிரலை உடனடியாக தயரித்து வழங்குமாறு அரசாங்கம் நோர்வே ஏற்பாட்டாளர்களை கேட்டுள்ளது. அண்மையில் கொள்ளுப்பிட்டியில் இடம்பெற்ற குண்டு தாக்குதலை அடுத்து இந்த வேண்டுகோளை அரசாங்கத்தின் சமாதான செயலக தலைவர், ஜயந்த தனபால நோர்வேயின் தூதுவர் ஹான்ஸ் பிராஸ்கரிடம் விடுத்துள்ளதாக தெரியவருகிறது. எனினும் கருணாவின் விடயத்தை முன்னிலைப்படுத்தி பேச்சுவார்த்தைகளை தமிழீழ விடுதலைப் புலிகள் தவிர்த்து வருவதில் நியாமில்லை என அவர் தெரிவித்துள்ளார். ஏற்கனவே கருணா விடயத்தை தாமே தீர்த்துக் கொள்வதாக தமிழீழ விடுதலைப் புலிகள் கூறிய போதும், தற்சமயம் அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்துவது ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் அனைத்தையும் பேசி தீர்க்க முதலில் தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை மேசைக்கு திரும்ப வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாகும் என அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதான இயல்பற்ற நிலையை போக்குவதற்காக விரையில் நோர்வே தரப்பினர் ஜனாதிபதியை சந்திக்கவுள்ளனர். இந்த தகவலை ஜனாதிபதியின் ஊடக பேச்சாளர் ஹரிம் பீரிசும் உறுதிப்படுத்தியுள்ளார். மாகாணசபை தேர்தல் முடிவடைந்துள்ள நிலையில், மக்கள் ஜனாதிபதியின் சமாதானம் தொடர்பான கொள்கைக்கு பூரண அங்கீகாரத்தை வழங்கியுள்ளதாக தெரிவித்த அவர், அடுத்த கட்டமாக சமாதான பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டியது அவசியம் என வலியுறுத்தியுள்ளார். இதன் அடிப்படையிலேயே நோர்வே ஏற்பாட்டாளர்கள் ஜனாதிபதியை சந்திக்கவுள்ளதாக தெரிவித்த ஹரிம் பிரிஸ் அது எப்போது என்ற விடயத்தை வெளியிடவில்லை. எனினும் எதிர்வரும் ஒருசில வாரங்களில் ஜனாதிபதிக்கும் நோர்வேயின் உயர்மட்டத்தினருக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த முக்கிய நிகழ்வுகளின் ஆரம்பமாகவே நேற்று போர் நிறுத்தக்கண்காணிப்பு குழுவின் தலைவர் துருண்ட் பியுறு ஹொவ்ட தமிழீழ் அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் சமாதான செயலக பிரதானி புலித்தேவன் ஆகியோரை சந்தித்துள்ளார்.

## ரி.பி.சி.வானொலி சமாதான சூழலைக் குழப்புகிறது

### - விடுதலைப் புலிகள் குற்றச்சாட்டு -


(11.07.04)

ரி.பி.சி. போன்ற வெளிநாட்டு வானொலிகள், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தைப் பயன்படுத்தி உண்மைக்குப் புறம்பாக செய்திகளை ஒலிபரப்பி தற்போதைய சமாதானச் சூழலை குழப்ப சிறீலங்கா அரசு இடமளிக்கக் கூடாதென விடுதலைப் புலிகளின் மட்டு. - அம்பாறை அரசியல்துறையினர் கோரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பாக கடந்த சனிக்கிழமை அவர்கள் விடுத்த அறிக்கையில், இலங்கை வானொலியின் தென்றல் ஒலிபரப்பு சேவை ஊடாக ஒலிபரப்பப்படும்,

ரி.பி.சி. ஒலிபரப்பு சேவை தமிழ் மக்களிடையே குழப்பத்தையும் பீதியையும் ஏற்படுத்தும் வகையில் விசமப் பிரசாரத்தை மேற்கொண்டு வருவதுடன் தற்போதைய போர் நிறுத்தத்தையும் சமாதானச் சூழலையும் பாதிப்படையச் செய்து வருகின்றது என்பதை கவலையுடன் தெரிவிக்க விரும்புகிறோம். தமிழ் தேசவிரோத சக்திகளால் இலண்டனில் இருந்து ஒலிபரப்பப்படும் ரி.பி.சி. ஒலிபரப்பினை சிறீலங்கா அரசு தனது அரச ஊடகமான தென்றல் ஒலிபரப்பு ஊடாக ஒலிபரப்பு செய்து வருவதுடன் தற்போது சமாதானத்தை பாதிக்கும் வகையில் பொய்யான செய்திகளை ஒலிபரப்புவதும் சமாதானத்தை பாதிக்கச் செய்துள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு கல்லடியில் ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட கிராம சேவகர் குஞ்சித்தம்பி சிவராசாவை விடுதலைப் புலிகள் தான் சுட்டுக் கொன்றார்கள் என ரி.பி.சி. ஊடாக பொய்யான செய்தியினை வெளியிட்டதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அண்மைக்கால படுகொலைகளும் துப்பாக்கி சூட்டு சம்பவங்களும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே இடம் பெற்றுவருகின்றன. கிராம சேவகரது படுகொலையும், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே இடம்பெற்றுள்ளது. இவ்வாறான சம்பவங்களுக்கு இராணுவமே பொறுப்பேற்க வேண்டும். இதேவேளை உண்மைக்குப் புறம்பான செய்திகளை ஒலிபரப்புச் செய்யும் ரி.பி.சி. போன்ற சேவைகளை சிறீலங்கா அரசு தமது ஊடகங்கள் ஊடாக ஒலிபரப்புச் செய்து தமிழ் மக்களை குழப்பத்தில் ஆழ்த்துவதை நிறுத்துமாறும் நாம் வேண்டுகோள் விடுப்பதுடன் தினமும் தமிழ்த் தேசியத்திற்கு குந்தகம் விளைவிக்கக்கூடிய செய்திகளைத் தென்றல் செய்தியூடாக ரி.பி.சி. மூலம் ஒலிபரப்புச் செய்வதை உடன் நிறுத்துமாறும் சிறீலங்கா அரசுக்கு கோரிக்கை விடுக்கின்றோம். இது தொடர்பாக சிறீலங்கா ஊடகத்துறை அமைச்சு கவனத்தில் எடுத்து சமாதானத்தை முன்னெடுப்பதற்கான சூழலை ஏற்படுத்துமாறும் கேட்டுக் கொள்கின்றோம், எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மேலதிக பாதுகாப்பு வழங்குமாறு சந்திரிகாவிடம் டக்ளஸ் கோரிக்கை



ஈ.பி.டி.பி கூலிக்குழுவின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா தனக்கு மேலதிக பாதுகாப்பு வழங்குமாறு சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கோரியுள்ளார். ஏற்கனவே தனக்கும் தனது அமைச்சுக்கும் மேலதிக பாதுகாப்பை டக்ளஸ் தேவானந்தா கோரியிருந்தார். இருந்த போதிலும் அக்கோரிக்கை பாதுகாப்பு பிரிவினரால் நிராகரிக்கப்பட்டிருந்தது. அண்மையில் கொள்ளுப்பிட்டியில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்

தன்னைக் குறிவைத்தே மேற்கொள்ளப்பட்டதாக கூறிக்கொள்ளும் டக்ளஸ் தேவானந்தா, தனக்கு மேலதிக பாதுகாப்பு வழங்கப்படும் விடயத்தில் ஜனாதிபதியின் நேரடி தலையீட்டைக் கோரியுள்ளார்.

## சிறீலங்காவின் பிரதி பாதுகாப்பு அமைச்சர் யாழ்ப்பாணம் பயணம்

(12.07.04)

சிறீலங்காவின் பிரதி பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க இன்று யாழ்ப்பாணம் சென்றுள்ளார். அவருடன் முப்படை அதிகாரிகளும் இந்த விஜயத்தில் இணைந்து கொண்டுள்ளனர். யாழ்ப்பாணத்தின் பாதுகாப்பு நிலவரம் குறித்து நேரடியாக ஆராயும் முகமாகவே இந்த விஜயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த விஜயத்தின் போது யாழ்ப்பாண நிலவரம் குறித்து படை உயர் அதிகாரிகளுடன் மகாநாடு ஒன்றை பாதுகாப்பு பிரதி அமைச்சர் நடத்தியுள்ளார். தொடர்ந்து அதியுயர் பாதுகாப்பு வலயங்களை பார்வையிடவுள்ளதோடு காங்கேசன்துறை துறைமுகத்துக்கும் அவர் விஜயம் செய்யவுள்ளார். இந்த விஜயம் தொடர்பாக கருத்துரைத்த பாதுகாப்பு செயலர் சிறில் ஹேரத், பதவியேற்றதன் பின்னர் பிரதி பாதுகாப்பு அமைச்சரின் உத்தியோகபூர்வ விஜயம் இதுவெனக் கூறினாார். இதன் போது அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் மீள்குடியமர்வு வியடத்துக்கும், இந்த விஜயத்துக்கும் தொடர்பில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்

## வாகனத்துள் வர்த்தகர் சடலம் வெள்ளவத்தையில் மீட்பு

(11.07.04)

கொலை செய்யப்பட்ட நிலையில் வர்த்தகர் ஒருவரின் சடலம் வெள்ளவத்தைப் பகுதியில் வாகனமொன்றில் கிடக்கக் கண்டுபிடிக்கப் பட்டது. வெள்ளவத்தை டபிள்யூ.ஏ. டி.சில்வா மாவத்தையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு முன்னால் வாகனமொன்று கடந்த வெள்ளிக்கிழமை இரவிலிருந்து தரித்து நிற்பதை பற்றிய தகவல் பொலிசாருக்குத் தெரிவிக்கப்பட்டது. அது குறித்து பொலிசார் சந்தேகம் கொண்டு காரைப் பரிசோதித்தபோதே அதனுள் நபரொருவர் சடலமாகக் கிடக்கக் கண்டனர். கிருலப்பனையைச் சேர்ந்த சரத் விமலரத்தின என்பவரின் சடலம் இதுவென அடையாளம் காணப்பட்டுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை முதல் இவரைக் காணவில்லை என இவரது மனைவி மிரிஹான பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். வியாபாரப் பிணக்குக் காரணமாகவே இந்தக் கொலை இடம்பெற்றிருக்கலாம் எனப் பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

### தமிழ் மக்களின் போராட்டத்திற்கான அடிப்படைக் காரணம்

## உலக அரங்கிற்கு முறையாகக் கொண்டு செல்லப்படவில்லை

**- தமிழ்ச்செல்வன் -**

(11.07.04)

தமிழ் மக்களின் மனித உரிமைகள் மிக மோசமாக மறுக்கப்பட்டமையே போராட்டத்தின் அடிப்படையென்றும், இவ்விடயம் கூட உலக அரங்கிற்குக் கொண்டு செல்லப்படாமையானது கவலைக்குரியது என்றும் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார். கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் இடம்பெற்ற, வடக்கு, கிழக்கு மனித உரிமை செயலகத் திறப்பு விழாவின் போது கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில், பல நாடுகளுக்குச் சென்ற போதும், பல பேச்சுவார்த்தை மேசைகளில் அமர்ந்த போதும் எமக்கெதிராக தூக்கப்படுகின்ற ஆயுதம் மனித உரிமைகளே. மனித உரிமைகளையும், ஜனநாயகத்தையும் பற்றி அதிகளவில் சிந்திக்கும் தலைவருடைய வழிநடத்தலில் நாம் செயற்படுகின்றோம். எவ்வளவு பாரிய விடயங்கள் வட, கிழக்கில் நிகழ்கின்றன. அவற்றை வெளியுலகிற்குக் கொண்டு செல்ல எவ்வித நடவடிக்கைகளை மேற்கொள்கின்றீர்களென எம்மைப் பலர் கேட்கின்றபோது, அவ்விடத்தில் நாம் மௌனிக்கின்றோம். ஆனால், இக்குறைகள் அனைத்தையும் இவ்வமைப்பு நீக்குமென நம்புகின்றேன். நாம் உலக மனித உரிமைக் கோட்பாடுகள் அனைத்தையும் கற்றுத் தெளிந்தவர்களல்ல. ஆனால், மனித நேயத்தைப் பற்றியும், மனித உரிமைகள் பற்றியும் சிந்தித்து நடப்பவர்கள். இதையும் உலகிற்கு வலியுறுத்திக் கூற வேண்டிய நிலையில் நாம் உள்ளோம். மனித உரிமை விழுமியங்கள் பற்றி எம் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். இவ்வாறான விழிப்புணர்வை எல்லா மட்டங்களிலும் முன்னெடுப்பது ஆரோக்கியமான விடயமாகும். இவ்விடயம் எமக்குக் கடினமாக அமையப் போவதில்லை. ஏனெனில், எங்கள் தலைவர் இறுக்கமான விடுதலை அமைப்பை வளர்த்துள்ளதால் மக்களும் எம் அமைப்பைப் பேணியுள்ளனர்.

நாம் இன்று பலம்பெற்றிருக்கின்றமையால் எம்மினத்தின் பிரச்சினையை சர்வதேச அரங்கில் கொண்டு செல்லக் கூடியவாறு அமையும். அதற்கும் இவ்வமைப்பு செயற்படுமென நம்புகின்றேன். பல சர்வதேச அமைப்புகள் இங்கு வந்து மனித உரிமைகள் பற்றி எதுவும் தெரியாதவர்களென எம்மைக் கணித்து பல அறிவுரைகளை கூறிச் செல்கின்றனர். ஆனால், எம் மக்களிற்கு ஏற்பட்ட மனித உரிமை மீறல்கள் வெளியில் எடுத்துச் செல்லப்படுவதில்லை. எனவே, இவ்விடயத்தையே நாம் அதிகளவில் முன்னெடுக்க வேண்டுமென்றார்.

– அதிகார பலத்தை நிருபிக்க –

# விலைபேசும் சந்திரிகாவும் விலைபோகும் தலைமைகளும்

– கொழும்பிலிருந்து ஊரோடி



சந்திரிகா

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிப்பதற்கான நடவடிக்கைகளைத் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றது. மாகாணசபைத் தேர்தலில் ஆறு மாகாண சபைகளையும் தன்வசப்படுத்தியுள்ள நிலையில் ஜனாதிபதி சந்திரிக்கா ஏனைய சிறிய கட்சிகளுடன் பேரம் பேசுகின்றார். எதிர்வரும் 20ம் திகதி நாடாளுமன்றம் கூடும் போது பெரும்பான்மையை நிருபிக்க வேண்டிய அவசியம் அரசாங்கத்திற்கு இருக்கின்றது. எனவேதான் மாகாணசபைத் தேர்தல் வெற்றியை காரணம் காட்டி நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் ஏனைய சிறிய கட்சிகளை அழைத்து அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குமாறு ஜனாதிபதி கோருகின்றார். குறிப்பாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளின் தலைவர்களை அழைத்து ஜனாதிபதி கலந்துரையாடியுள்ளார். இந்த வாரம் சிறிலங்காவின் அரசியலில் பாரிய மாற்றங்கள் ஏற்படவுள்ளன.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் ஜனாதிபதி மாளிகையில் ஒரு மணித்தியாலத்திற்கும் மேலாக அரசாங்கத்துடன் இணைவது குறித்து பேசியிருக்கின்றார். ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற குழுத்தலைவர் எல்லாவல மேதானந்த தேரருடன் ஜனாதிபதி தொலைபேசியில் கலந்துரையாடியிருக்கின்றார். சிறிலங்கா முஸ்லீம் காங்கிரசுடன் முரண்பாடுகள் இருந்தாலும் அவர்கள் அரசாங்கத்துடன் இணையும் பட்சத்தில் அந்த முரண்பாடுகள் அனைத்தும் வாபஸ் பெறப்பட்டு முஸ்லீம் காங்கிரஸ் கோருகின்ற விடயங்களும் கவனத்தில் எடுக்கப்படும் என்று ஜனாதிபதி, காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு நெருக்கமானவர்களிடம் முஸ்லீம் கூறியிருக்கின்றார். முஸ்லீம் காங்கிரசும் தற்போது அது குறித்து பரிசீலிக்கின்றது. அதன் உயர் குழுக்கூட்டம் எதிர்வரும் புதன்கிழமை நடைபெறவுள்ளது. அந்தக்கூட்டத்தில் அரசாங்கத்தில் இணைவது குறித்து ஆலோசிக்கப்படவுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமய, சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ் ஆகிய மூன்று சிறுபான்மைக்கட்சிகளைப் பொறுத்தவரை தங்கள் கட்சியை வளர்த்துக்கொள்ளவும் தங்கள் செல்வாக்கை அதிகரித்துக் கொள்ளவும் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளவேண்டிய தேவையிருக்கின்றது. அத்துடன் பெரும்பான்மைப்பலம் இல்லாத நிலையில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு மீண்டும் ஒரு பொதுத்தேர்தல் நடத்தப்பட்டால், அதனை உடனடியாக எதிர்கொள்ளக் கூடியளவிற்கு இந்த மூன்று கட்சிகளும் இல்லை. நடைபெற்ற முடிந்த மாகாண சபைத்தேர்தலில் குறைந்தது மூன்று மாகாணசபைகளையாவது ஐக்கிய தேசியக்கட்சி கைப்பற்றியிருந்தால், இந்த மூன்று கட்சிகளும் சில சமயங்களில் ஐக்கிய தேசியக்கட்சியோடு நின்று அரசாங்கத்திற்கு எதிராக செயற்பட்டிருப்பார்கள். ஆனால் எதிர்பார்த்ததற்கு மாறாக ஐக்கிய தேசியக்கட்சி படுதோல்வியை அடைந்திருக்கின்றது. இந்தவொரு நிலையிலேதான் நாடாளுமன்றத்தில் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட இந்த மூன்று கட்சிகளும் முடிவு செய்திருக்கின்றன போல் தெரிகின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் பிரதான பங்காளிக்கட்சியான ஜே.வி.பியுடன் இந்தக் கட்சிகளுக்கு முரண்பாடுகள் இருந்தாலும் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதன் மூலம் தாங்கள் தனிப்பட்ட செல்வாக்கையும் வளர்ச்சியையும் அடைந்துகொள்ள இவர்கள் விருப்பப்படுகின்றார்கள். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் கடந்தகால வரலாற்றை நோக்கும் போது பதவியிலிருக்கும் அரசாங்கத்துடன் அவர்கள் இணைந்தே செயற்பட்டு வந்திருக்கின்றனர். அவர்கள் கோருகின்ற அமைச்சுப் பொறுப்புக்கள், திணைக்களங்கள் மற்றும் அசையும் அசையா சொத்துக்கள் ஆகியவற்றை அரசாங்கம் வழங்குகின்ற பட்சத்தில், அரசாங்கத்துடன் இணைந்துகொள்ள இவர்கள் தயங்குவதில்லை. ஜாதிக ஹெல உறுமயவைப் பொறுத்தவரை இந்த இரண்டு கட்சிகளையும் விட வித்தியாசமான போக்கு ஒன்றை அரசாங்கத்துடன் இணையும் விடயத்தில் கடைப்பிடிக்கின்றது. குறிப்பாக விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை அரசாங்கம் தீவிரப்படுத்தினால் அதற்கு ஆதரவு வழங்க இந்தக்கட்சி தயாராகவே இருக்கின்றது. முற்றிலும் பௌத்த குருமாரைக்கொண்ட இந்தக்கட்சி கொழும்பில் நடைபெற்ற தற்கொலைத் தாக்குதலின் பின்னர் அவசரகாலச் சட்டத்தை மீண்டும் அமுல்படுத்தவேண்டும் என ஜனாதிபதியிடம் கேட்டிருக்கின்றது. அதற்கு ஜனாதிபதி இணங்கியிருக்கின்றார். அத்துடன் ஹெல உறுமயவில் இருந்து இராஜினாமாச் செய்த ரந்துலிய ரத்னதேரரின் விவகாரத்தில் அரசாங்கம் தலையிடுவதில்லை யென்றும் அது குறித்த வழக்குகளை வாபஸ் பெறுவது என்றும் ஜனாதிபதி உறுதியளித்திருக்கின்றார். கடந்த நாடாளுமன்ற அமர்வில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட அக்மீமன தயாரத்தின தேரரை தொடர்ந்தும் நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகிப்பதற்கும் ஜனாதிபதி சம்மதம் தெரிவித்திருக்கின்றார். ஆகவே இவர்களின் முரண்பாடுகள், சர்ச்சைகள் ஜனாதிபதியால் தீர்க்கப்பட்டிருக்கின்றன. இந் நிலையில் எதிர்க்கட்சி ஆசனத்தில் இருந்துகொண்டு அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கும் ஹெல உறுமய தீர்மானித்திருக்கின்றது.

சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுடன் ஜனாதிபதி கடந்த சில மாதங்களாக தனிப்பட்ட முறையில் முரண்பட்டிருந்தார். குறிப்பாக குமாரி என்ற பெண்ணுடன் ஹக்கீமுக்கு தொடர்பிருந்ததாகவும் அது பற்றிய விபரங்களையும் அரச தொலைக்காட்சியில் தினமும் காண்பித்து வந்தனர். தற்போது கூட நிலும் என்ற பெண்ணைப் பயன்படுத்தி ஹக்கீமின் தனிப்பட்ட வாழ்க்கை பற்றி அரசாங்கத் தொலைக்காட்சியில் அவமானப்படுத்தும் நிகழ்ச்சிகள் இடம்பெற்று வருகின்றன. ஆனால் இவற்றை எல்லாம் மறந்து அல்லது இந்த சம்பவங்களை மன்னித்து மீண்டும் ஜனாதிபதியுடன் உறவுகளை புதுப்பிப்பதற்கு ஹக்கீம் தற்போது பரிசீலித்து வருகின்றார். தமது அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்க வேண்டும் என்பதற்காகவே பலாத்காரமாகவும் அடாவடித்தனமான முறையிலும் அரசாங்கத் தொலைக்காட்சியில் குமாரி விடயத்தை ஜனாதிபதி பெரிதுபடுத்தியிருந்தார். தற்போது மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி படுதோல்வியடைந்த நிலையில் போக்கிடம் இன்றி ஹக்கீம், ஜனாதிபதி பக்கம் சாய்கின்றார் என்றே கூறலாம். அதாவது அமைச்சுப் பதவி இல்லாமல் இவர்களால் நீண்ட காலம் சீவிக்க முடியாது. இது ஏற்கனவே எல்லோருக்கும் தெரிந்த கதைதான்.

ஜனாதிபதி சந்திரிக்காவைப் பொறுத்தவரை இந்த மூன்று கட்சிகளுடனும் பேரம்பேசி வந்தாலும் தற்போதைக்கு அதாவது உடனடியாக இணைவதற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தயாராகவே இருக்கின்றது. ஆறுமுகம் தொண்டமான் தலைமையிலான காங்கிரஸ் இணைந்து கொண்டால் 106 ஆசனங்களுடன் இருக்கும் அரசாங்கம் 114 ஆசனங்களை பெற்றுக்கொள்ளும். ஜாதிக ஹெல உறுமய எதிர்க்கட்சியில் இருந்து ஆதரவு கொடுத்தால் 123 ஆசனங்களுடன் அரசாங்கத்தை ஜனாதிபதி நகர்த்த முடியும். முஸ்லீம் காங்கிரசின் ஆதரவை ஜனாதிபதி உடனடியாக கோரவேண்டும் என்ற அவசியம் இல்லை. இருந்தாலும் அவர்களின் ஆதரவை கூடிய விரைவில் பெற்றுவிட வேண்டும் என்பதே ஜனாதிபதியின் எதிர்பார்ப்பு. முஸ்லீம் காங்கிரசும் கூடிய சீக்கிரம் ஆதரவு வழங்க வேண்டும் என்பதற்கான முஸ்தீபுக்களிலேயே ஈடுபட்டு வருகின்றது. அவ்வாறு முஸ்லீம் காங்கிரசும் அரசாங்கத்துடன் இணைந்து கொண்டால் 127 ஆசனங்களை அரசாங்கம் பெற்றுக்கொள்ளும்.

ஆகவே இவற்றை எல்லாம் நோக்குமிடத்து சாதாரண பெரும்பான்மைப்பலத்துடன் ஜனாதிபதி தனது அரசாங்கத்தை கொண்டு நடத்திவிடுவார் என்று கூறிவிடலாம். ஆனால் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைக்கு இந்த அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கூட்டுக்கட்சிகள் இடம் கொடுப்பார்களா? அவ்வாறு பேச்சுவார்த்தை இடம்பெற்றாலும் இடைக்கால நிர்வாக சபை அமைவதற்கு அவர்கள் சம்மதிப்பார்களா என்ற கேள்விகளும் சந்தேகங்களும் எழுவது இயல்பானது. இடைக்கால நிர்வாகம் வழங்கக் கூடாது என்பது ஜே.வி.பியின் நிலைப்பாடு. அதனையே ஜாதிக ஹெல உறுமயவும் கொண்டிருக்கின்றது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரசைப் பொறுத்தவரை ஜனாதிபதி எந்த நடவடிக்கை எடுத்தாலும் அதற்கெல்லாம் தலையாட்டுபவர்கள். சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ் அரசாங்கத்துடன் இணையுமாக இருந்தால், இடைக்கால நிர்வாகத்தில் முஸ்லீம்களின் பங்களிப்பு குறித்து அழுத்தத்திற்கு மேல் அழுத்தம் கொடுத்துக் கொண்டேயிருப்பர். சில சமயங்களில் முஸ்லீம்களுக்கும் தனியான இடைக்கால நிர்வாகசபை கேட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. ஆகவே தான் இந்த சவால்களையும் எதிர்ப்புக்களையும் ஜனாதிபதி எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றார்..? அல்லது சமாளிக்கப் போகின்றார்?.



ரவூப் ஹக்கீம்

அந்தரத்தில் முட்டுக்கொடுத்த நிலையில் அரசாங்கத்தை ஜனாதிபதியால் கொண்டு நடத்த முடிந்தாலும், சமாதான பேச்சுவார்த்தை குறித்த விடயங்களில் சர்வதேச சமூகத்திற்கு ஜனாதிபதி பதில் சொல்லியே ஆகவேண்டும். அதற்காகவேனும் அவர் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும். அவ்வாறு தீர்வுகள் இணக்கப்பாடுகள் இன்றி பேச்சுவார்த்தையும் இழுபட்டுச் செல்வதற்கு புலிகளும் சம்மதிக்கப்போவதில்லை. இம்முறை பேச்சுவார்த்தை ஆரம்பித்தாலும் புலிகள் அந்த நிலைப்பாட்டில் கடுமையாகவே நிற்பார்கள் என்பது கண்கூடு. ஆகவேதான் ஜனாதிபதி தனது அடுத்த கட்டநடவடிக்கைகளை தீர்மானிப்பதில் பெரும் சங்கடங்களையே எதிர்நோக்கும் நிலை ஏற்படும். முரண்பாட்டிலும் சில உடன்பாட்டுடன் அரசாங்கத்தை ஒட்டிப் பொருத்தினாலும் பேச்சுவார்த்தையில் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களை ஜனாதிபதியால் ஒட்டிப்பொருத்திவிட முடியாது. அங்கே தான் அரசாங்கத்தில் வெடிப்பு ஆரம்பமாகும். அவ்வாறு வெடிப்பு ஆரம்பமாகும் என்று தெரிந்தும் ஜனாதிபதி அரசாங்கத்தைக் கொண்டு நடத்த முற்படுகின்றார். நாட்டின் தேசிய நலன், இனப்பிரச்சினைத் தீர்வு என்பதற்கு அப்பால் ஜனாதிபதி சந்திரிக்காவிற்கு அரசியல் அதிகாரத்தை கைப்பற்றி அதனை தொடர்ந்து தக்கவைக்க வேண்டும் என்ற ஆசை இருக்கும் வரை, இனப்பிரச்சினை புற்று நோயாகவே இருக்கும்.

அதேவேளை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமான், சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோருக்கும் சூடு, சுரணை, வெட்கம், மானம், ரோசம் என்றைக்கு வருகின்றதோ அன்றுதான் சிறீலங்காவின் அரசியலிலும் மாற்றங்களைக் காணமுடியும். தங்களையும் விற்று, தங்கள் சமூகத்தையும் விலை பேசி அரசியல் பிழைப்புத்தேடும் அரசியல் வாதிகள் சிறீலங்காவில் இருக்கும்வரை, 'எதுவும்' நடக்காது. விதண்டாவாதங்களும் மனச்சாட்சியை மறைத்துப் பேசுகின்ற அயோக்கியத்தனமைகளுமே அங்கு விஞ்சிநிற்கின்றன.

# தாயிடம் இருந்து கருவில் இருக்கும் குழந்தைக்கு `எய்ட்ஸ்' பரவாமல் தடுக்க புதிய மருந்து !

## – தாய்லாந்து மருத்துவ நிபுணர்களின் ஆராய்ச்சி வெற்றி –

தாயிடம் இருந்து கருவில் இருக்கும் குழந்தைக்கு `எய்ட்ஸ்' பரவாமல் தடுக்க வகை செய்யும் புதிய மருந்தைத் தாய்லாந்து மருத்துவ நிபுணர்கள் கண்டு பிடித்துள்ளனர். ஒரு தாய்க்கு எய்ட்ஸ் நோய் இருந்தால் அந்த பெண்ணிடம் தாய்ப் பால் அருந்தும் குழந்தைக்கும் எய்ட்ஸ் நோய் பரவுகிறது. தாயிடம் இருந்து கருவில் இருக்கும் குழந்தைக்கு எய்ட்ஸ் நோய் கிருமி பரவாமல் தடுக்க உதவும் மருந்தை கண்டுபிடிக்கும் முயற்சியில் மார்க் லாலிமெண்ட் தலைமையிலான தாய்லாந்து நாட்டு மருத்துவ நிபுணர் குழுவினர் ஈடுபட்டனர். அவர்கள் முயற்சிக்கு வெற்றி கிடைத்தது. தீவிர ஆராய்ச்சிக்கு பின் அவர்கள் 'நெவிராபின்' என்ற மருந்தைக் கண்டுபிடித்தனர். இது மிகவும் சக்தி வாய்ந்த மருந்து ஆகும்.

கருவுற்று இருக்கும் தாய்க்கு எய்ட்ஸ் நோய் இருந்தால் அந்த பெண்ணுக்குப் பிரசவத்தின் போதும், பிரசவம் முடிந்ததும் குழந்தைக்கும் நெவிராபின் மருந்தைக் கொடுத்தால் அந்த குழந்தைக்கு அந்த நோய் பரவாமல் தடுக்க முடியும் என்று நிபுணர்கள் கண்டு அறிந்து இருக்கிறார்கள். பரிசோதனையில் இந்த மருந்து நல்ல பலனையும் தந்துள்ளது. இந்த தகவலை `நியூ இங்கிலாந்து ஜர்னல் ஆப் மெடிசின்' என்ற பத்திரிகை வெளியிட்டுள்ளது.

உயிர்க்கொல்லி நோயான `எய்ட்ஸ்'சுக்கு இன்னும் சரியான மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. உலகம் முழுவதும் 4 கோடியே 30 இலட்சம் பேர் `எய்ட்ஸ்' நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஏற்கனவே 2 கோடி பேர் எய்ட்ஸ்சுக்குப் பலியாகி உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



தாய்லாந்தைச் சேர்ந்த 31 வயதான இந்தத் தாயிடம் இருந்து இரு குழந்தைகளுக்கும் நோய் பரவாமல் மருத்துவ சாதனை மூலம் தடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

# சென்னை அருகே கடல் நீரை குடி நீர் ஆக்கும் திட்டம்

சென்னை அருகே, ரூ.1,000 கோடி செலவில் கடல் நீரை குடி நீர் ஆக்கும் திட்டம் அமைக்கப் படுகிறது. இதுபற்றி வரவு- செலவுத் திட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: குடி நீர் விநியோகம், கிராமப்புற வீட்டு வசதி திட்டங்களுக்கு வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அனைத்து குடி நீர் திட்டங்களும், `ராஜீவ் காந்தி குடி நீர் திட்டம்' என்ற ஒரே அமைப்பின் கீழ் கொண்டு வரப்படும். நகர்ப்புற குடி நீர் திட்டங்களுக்காக 2151 நகரங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

முதன் முதலில், கடல் நீரை குடி நீராக மாற்றும் பெரிய அளவிலான திட்டம் சென்னை அருகே அமைக்கப்படுகிறது. ஏறத்தாழ ரூ.1,000 கோடி செலவில் உருவாகும் இந்த திட்டத்தின் கீழ் நாள் ஒன்றுக்கு 30 கோடி லிட்டர் கடல் நீர் குடிநீராக மாற்றப்படும். கிழக்கு கடற்கரைப் பகுதியில் இதுபோன்ற மேலும் பல குடி நீர்த் திட்டங்கள் தொடங்கப்படும்.


கிராமப்புற வீட்டு வசதியை மேம்படுத்துவதற்காக, `இந்திரா அவாஸ் யோஜனா' திட்டத்துக்கான நிதி ஒதுக்கீடு உயர்த்தப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் தாராள கடன் உதவி கிடைப்பதற்காகத் தேசிய வீட்டு வசதி வங்கி மறு முதலீட்டு கட்டணத்தைக் குறைக்க முன் வந்துள்ளது. வர்த்தக வங்கிகள் வழங்கும் கிராமப் புற வீட்டு வசதி கடன்களைத் திருப்பிச் செலுத்தும் தவணை விதிமுறைகளை எளிமையாக்கவும் வங்கி ஒப்புக்கொண்டுள்ளது. கடந்த 3 ஆண்டுகளாக ஆண்டுக்கு தலா 1 லட்சத்து 80 ஆயிரம் கிராமப்புறக் குடியிருப்புகளுக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு நிறை வேற்றப்பட்டு வந்தன. இந்த ஆண்டு இந்த எண்ணிக்கையை 2 இலட்சமாக அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# இயேசு கிறிஸ்து திரைப்படத்தை கிறிஸ்தவர்கள் மட்டுமே பார்க்க முடியும்

## - மலேசியா அரசு கட்டுப்பாடு -

இயேசு கிறிஸ்துவின் கடைசி நாளைச் சித்தரிக்கும் படம் 'தி பாஷன் ஆப் தி கிறைஸ்ட்' (The Passion of the Christ). இந்த திரைப்படத்தை கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே திரையிட மலேசியா அரசு அனுமதி அளித்துள்ளது. குறிப்பிட்ட சில திரையரங்குகளில் மட்டும் இந்தப்படம் திரையிடப்படும் என்றும், இந்தப் திரைப்படத்துக்கு வழக்கமான சுவரொட்டி விளம்பரமோ, காட்சி விளம்பரங்களோ கூடாது என்று மலேசிய அரசு கூறியுள்ளது.

கிறிஸ்தவர்களுக்கு மட்டும் திரையிட அனுமதி கொடுத்தது மலேசியாவில் எதிர்ப்பையும், சர்ச்சையையும் உருவாக்கி உள்ளது. இஸ்லாமிய மதம் பற்றிய படம் என்றால் இஸ்லாமியர்களுக்கு மட்டும்தான் அனுமதி கொடுப்பார்களா என்று சில தரப்பினர் கேள்வி எழுப்பினர். சினிமா பார்ப்பதால் மட்டும் யாரும் மதம் மாறிவிடப்போவதில்லை. அதற்குப் பதிலாக அடுத்தவர்களின் மதத்தைச் சரிவரப் புரிந்துகொள்ள படம் பார்ப்பது உதவும் என்று ஜன நாயக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தெரசா கோக் கூறினார்.




# சதாம் உசேனின் வழக்கு செலவுக்காக நிதி திரட்டப்படுகிறது

ஈராக் முன்னாள் அதிபர் சதாம் உசையின் மீதான வழக்குச் செலவிற்காக உலகளவில் நிதி சேகரிக்கப்படுகிறது. இதற்குப் பெரும் தொகை நிதியொன்றை நன்கொடையாக வழங்கப்போவதாக லிபியா அதிபர் கடாபியின் மகள் தெரிவித்துள்ளார்.




சதாம் உசேன் சார்பில் அரபு வழக்கறிஞர்களுடன் அமெரிக்க, இங்கிலாந்து வழக்கறிஞர்களையும் சேர்த்து பிரதான வழக்கறிஞர்களாக 20 பேர் உள்ளனர். மேலும் உதவி வழக்கறிஞர்கள், ஆலோசகர்கள் என 1000ற்கும் மேற்பட்டவர்கள் உள்ளனர். பிரதான வழக்கறிஞர்களில் லிபியா அதிபர் கடாபியின் மகள் ஆயிஷா கடாபியும் ஒருவர். வழக்குக்கு ஆகும் செலவுக்காக பல நாடுகள் நன்கொடை வழங்க முன்வந்துள்ளன. ஆனால் லிபியா அதிபர் கடாபியின் மூத்த மகளும், வழக்கறிஞருமான ஆயிஷா கடாபி, வழக்கு நிதியாக ஒரு தொகையை நன்கொடையாக வழங்க முன்வந்து இருக்கிறார். எவ்வளவு தொகை அவர் வழங்கப் போகிறார் என்பது தெரியவில்லை. ஆனால் அவர் நன்கொடை அளிக்கப்போவதை அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளார்.

இதேவேளை, சதாம் உசேனுக்கு ஆதரவாக வாதாடும் வழக்கறிஞர்களுக்கு ஈராக்கிலுள்ள தீவிரவாத அமைப்பொன்று எச்சரிக்கை விடுத்துள்ளது. தங்களின் எச்சரிக்கையை மீறி வழக்கில் பங்குகொண்டால் அவர்கள் கொல்லப்படுவார்கள் எனவும் அவ்வமைப்பு கடுமையாக எச்சரித்துள்ளது. வழக்கில் ஆஜராகக் கூடாது என்றும் தங்கள் அலுவலகங்களை வெடிகுண்டு வைத்து தகர்க்கப் போவதாகவும் மிரட்டல்கள் வந்து உள்ளன என்றும் வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.


NIGHT TRAVEL. நைற் ட்ரவல்ஸ்
உங்கள் விமானப் பயணத் தேவைகளை சிறந்த தரத்துடன் இலகுவாக ஆக்கிக்கொள்ள எங்களை நாடுங்கள். தரமான விலை, சிறந்த சேவை,
நிறைந்த பயன் போன்றவற்றோடு இரவுநேர ஆசனப் பதிவுகளை 21.00 மணி தொடக்கம் 01.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்களும் தொலைபேசியில் செய்து கொள்ளலாம்.
எங்கள் [illegible]பத்தை முன்னிட்டு எயர் லங்கா விமானத்தில் கொழும்பு
சென்றுவர 970 பிராங்குகள் மட்டுமே
தொடர்புகளுக்கு: 031-302 53 37, 079 - 546 45 20 e-mail:nighttravel@hispeed.ch

# சி.ஐ.ஏ. யின் தவறான தகவலே ஈராக் மீது போர் தொடுக்கக் காரணம்

## - அமெரிக்க செனட் குழு அறிக்கை

ஈராக்கிடம் உள்ள ஆயுதங்கள் தொடர்பாக சி.ஐ.ஏ. உள்ளிட்ட புலனாய்வு அமைப்புகள் அரசுக்கு சரியான தகவல்களைத் தெரிவிக்கத் தவறிவிட்டதாக அமெரிக்க செனட் குழு தனது விசாரணை அறிக்கையில் கூறியுள்ளது. பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களையும், இரசாயன ஆயுதங்களையும் ஈராக் பதுக்கி வைத்து இருப்பதாகக் கூறி அந்த நாட்டின் மீது கடந்த ஆண்டு மார்ச் மாதம் அமெரிக்கா போர் தொடுத்தது. இதனால் அங்கு அதிபராக இருந்த சதாம் உசேன் பதவியை இழந்தார். பின்னர் அவர் அமெரிக்க படையினரிடம் பிடிபட்டார்.

இதற்கிடையே ஈராக் தங்கள் கட்டுப்பாட்டில் வந்ததும் அங்கு பல்வேறு இடங்களில் அமெரிக்கப் படையினர் ஆயுத சோதனை நடத்தினார்கள். ஆனால் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களோ இரசாயன மற்றும் உயிர்க் கொல்லி ஆயுதங்களோ கண்டு பிடிக்கப்படவில்லை. இதனால் நியாயமான காரணம் இன்றி ஈராக் மீது போர் தொடுத்ததாக அமெரிக்கா மீது பல நாடுகள் குற்றம் சாட்டின.




ஜோர்ஜ் டெனட்

அதற்கு அமெரிக்க அதிபர் புஷ், புலனாய்வு துறை (சி.ஐ.ஏ.) அளி-த்த தகவலின் பேரிலேயே ஈராக் மீது போர் தொடுத்ததாகக் கூறினார். இதற்கிடையே இந்த பிரச்சினை பெரும் சர்ச்சையாக உருவெடுத்ததால், ஈராக் தொடர்பாகப் புலனாய்வுதுறை தெரிவித்த தகவல்கள் சரிதானா என்பது பற்றி புலனாய்வுதுறைக்கான செனட் குழு விசாரணை நடத்த அமெரிக்க அரசு உத்தரவிட்டது.

இந்த நிலையில் அமெரிக்க புலனாய்வு துறையின் இயக்குநர் ஜோர்ஜ் டெனட் கடந்த மாதம் தனது பதவியை இராஜினாமா செய்தார். அரசின் உத்தரவைத் தொடர்ந்து புலனாய்வுதுறைக்கான செனட் குழு சுமார் ஓர் ஆண்டு காலம் விசாரணை நடத்தி 511 பக்க அறிக்கையைத் தாக்கல் செய்துள்ளது. அதில், ஈராக்கிடம் உள்ள ஆயுதங்கள் பற்றி சி.ஐ.ஏ.யும் அமெரிக்காவின் பிற புலனாய்வுத்துறை நிறுவனங்களும் சரியான தகவல்களைத் தெரிவிக்கத் தவறிவிட்டன என்றும், இது புலனாய்வு விசாரணையில் அந்த நிறுவனங்களுக்கு ஏற்பட்ட தோல்வி என்றும் கூறப்பட்டுள்ளது. 1998க்கு பிறகு ஈராக் நிலவரம் குறித்த சரியான தகவல்களைச் சேகரித்து தெரிவிக்க அங்கு சி.ஐ.ஏ.க்கு இரகசிய முகவர்கள் இல்லை என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. ஆனால் போர் தொடுப்பதற்காக சாதகமான அறிக்கை பெற புலனா-ய்வு நிறுவனங்களை அரசு வற்புறுத்தியதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# ஐ.நா.சபையின் விதியை மீறி ஈராக்கில் இருந்த யுரேனியம் அமெரிக்கா சென்றது

ஐ.நா.சபையின் விதியை மீறி ஈராக்கில் இருந்து 2 தொன் யுரேனியத்தை அமெரிக்கா எடுத்துச் சென்றுள்ளது. ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்தபோது அங்கு சூறையாடல் சம்பவங்கள் நடந்தன. அப்போது பாக்தாத் நகரில் இருந்து 20 கிலோ மீட்டர் தொலைவில் இருந்த அணு ஆயுத கிடங்கும் இந்த சூறையாடலில் சிக்கியது. அந்த சமயத்தில் அங்கு 1.8தொன் எடையுள்ள செரிநட்டப்பட்ட யுரேனியம் இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. இவை சர்வதேச அணுசக்தி அமைப்பின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டன.

இந்த நிலையில் அமெரிக்கா அந்த 1.8 தொன் எடையுள்ள யுரேனியத்தையும் விமானம் மூலம் எடுத்து சென்றுவிட்டது. கடந்த ஜூன் 23ம் திகதி தான், அதாவது ஈராக் இடைக்கால அரசுக்கு அதிகாரம் வழங்குவதற்கு 5 நாட்களுக்கு முன்பு அமெரிக்கா இதனைக் கொண்டு சென்றுள்ளது. பாதுகாப்பு காரணங்களுக்காக இவை எடுத்துச் செல்லப்பட்டு இருப்பதாக அமெரிக்கா கூறினாலும், அதுபற்றி அணு சக்தி அமைப்புக்கு எந்த ஒரு தகவலும் கொடுக்கவில்லை. எனவே அமெரிக்காவின் இந்த செயல் ஐ.நா. விதியை மீறியதாகும் என்று கூறப்படுகிறது. "ஐ.நா. சபையின் ஒப்புதலை பெறாமல் அணு ஆயுத பொருட்களை எடுத்துச்சென்று இருப்பது சட்ட விரோதமானது" என்று சில உலக அமைப்புகள் அமெரிக்காவுக்கு கண்டனம் தெரிவித்துள்ளன.

# பீகாரில்-வங்காள தேசத்தில் வெள்ளப்பெருக்கு

## 25 இலட்சம் மக்கள் பாதிப்பு

இந்தியாவின் பீகார் மாநிலம் மற்றும் வங்க தேசத்தில் ஏற்பட்ட கடும் மழையினால் சுமார் 25 இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. பீகார் மாநில ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதால் 5 இலட்சம் மக்கள் வீடுவாசல் இழந்துள்ளனர். அசாம், பீகார் உட்பட வட மாநிலங்களில் கடந்த சில நாட்களாகப் பருவ மழை உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. பீகார் மாநிலத்தில் பெய்து வரும் கனமழையால் கங்கா, சோனே, பன்பன், காக்ரா, கான் டக், புரிகான்டக், பாக்மதி, கமலாபலன், கோசி, மகாநந்தா, அத்வாரா ஆகிய ஆறுகளில் வெள்ளம் அபாயக் கட்டத்தையும் தாண்டி அதிகரித்த வண்ணம் இருக்கின்றன. மாநிலத்தின் மற்ற பகுதிகளில் இருந்து அந்த மாவட்டம் துண்டிக்கப்பட்டுத் தீவாக காட்சி அளிக்கிறது.





தொடருந்துப் பாதைகளும் வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டதால் வாகனங்களும் செல்லமுடியாமல் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளன. இதனால் இராணுவ உலங்குவானூர்திகள் மீட்புப் பணிகளிலும், அவசர உதவிகளிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. சீதாமரி, பங்கா, சுபால், சியோகர், தர்பங்கா, பகல்பூர், மேற்கு சம்பரான், ககரியா மாவட்டங்களில் 5 இலட்சம் மக்கள் வீடு வாசல்களை இழந்திருக்கிறார்கள். வெள்ள நிலைமை மோசமாகி இருப்பதால் மீட்புப் பணிக்கு இராணுவம் வரவழைக்கப்பட்டது. வெள்ளம் சூழ்ந்த இடங்களில் படகுகளுடன் இராணுவத்தினர் மீட்புப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, வங்காளதேசத்தில் கடந்த சில நாட்களாகப் பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் வடக்கு மற்றும் வடகிழக்குப் பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. நூற்றுக்கணக்கான வீடுகள் இடிந்து தரை மட்டமாயின. ஆயிரக்கணக்கான வீடுகளில் வெள்ளம் புகுந்துள்ளது. 20 இலட்சம் மக்கள் வீடுகளை இழந்துள்ளனர்.

# 500ற்கும் மேற்பட்ட இந்தியப் படகுகள் நெடுந்தீவு கடலில் அத்துமீறிப் பிரவேசம்

யாழ்ப்பாணம் நெடுந்தீவு கடற்பரப்பிற்குள் கடந்த 9ம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 500ற்கும் மேற்பட்ட இந்திய மீன்பிடிப் படகுகள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டதாகச் சிறீலங்கா கடற்படையை மேற்கோள் காட்டி நடவடிக்கைத் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது. வியாழக்கிழமை இரவு சுமார் 400 படகுகள் இந்த கடற்பரப்பில் மீன் பிடித்துக் கொண்டிருந்ததைச் சிறீலங்கா கடற்படையினர் அவதானித்துள்ளதுடன் அப்பகுதிக்கு விரைந்தபோது படகுகள் சர்வதேச கடற்பரப்பிற்குள் தப்பிச் சென்றுள்ளதாகவும் இராணுவ தலைமையக அதிகாரியொருவர் குறிப்பிட்டார். இந்திய மீனவர்களின் அத்துமீறல் கடல் நடவடிக்கைகள் இலங்கை மீனவர்களின் மீன்பிடித் தொழிலைப் பாதிப்படையச் செய்வதுடன் கடற் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாகவும் குறிப்பிட்ட இராணுவ அதிகாரியொருவர், சிறீலங்காவிலுள்ள இந்திய அதிகாரிகளுக்கு இவ்விடயம் தொடர்பாக தெளிவுபடுத்தவுள்ளதாகவும் தெரிவித்தார்.

உங்கள் பிள்ளைகளும் சுவிஸ் நாட்டில் உயர் கல்வி பெற்று நல்ல தரமான தொழில்களை பெறமுடியும்.

சுவிஸ் நாட்டின் பிரபல மொழியியல் **ஆசிரியர் லிங்கம்** அவர்களின் நெறியாள்கையில்
பாடசாலை மாணவர்களுக்கான டொச்மொழிக்கல்வி ஆரம்பமாகின்றது.

ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10 மணிமுதல் 12 மணிவரை
5ம், 6ம் வகுப்பு மாணவர்களுக்கு
**இடம்: Breitenreinplatz -27, Bern**

புதன்கிழமைகளில் மாலை 6 மணிமுதல் 8 மணி வரை
3ம், 4ம் வகுப்பு பாடசாலை மாணவர்களுக்கு
**இடம்: Eigerplatz, Bern**

**தொடர்புகளுக்கு: Lingam master - 062 79741 64 / 079 334 47 33**

# நீலவாணி எண்டர் பிறைஸ்

## இரண்டாவது வருட பூர்த்தியை முன்னிட்டு

## பேர்ண் மாநகரில்

# மாபெரும் மலிவு விற்பனை

| உதாரணத்துக்காக மாற்றம் செய்யப்பட்ட விலை | பழைய விலை | புதிய விலை |
|---|---|---|
| உடன் இலங்கை மீன் வகைகள் 1Kg | 7.50Fr | 6.90Fr |
| உடன் இலங்கை நண்டு கணவாய் 1Kg | 9.00Fr | 6.90Fr |
| இலங்கை கீரை வகைகள் 1Kg | 9.00Fr | 6.90Fr |
| மரவள்ளி | 3.80Fr | 3.00Fr |
| இராச வள்ளி | 8.00Fr | 5.50Fr |
| வெண்டி, புடோல், பூசணி, முருங்கை | 5.50Fr | 3.80Fr |
| உள்ளி | 3.00Fr | 1.75Fr |
| சின்ன வெங்காயம் | 8.00Fr | 5.50Fr |
| தாய்லாந்து பயற்றங்காய், பாகற்காய் | 9.00Fr | 7.35Fr |
| நெஸ்டோமோல்ட் | 6.90Fr | 5.50Fr |
| விவா | 8.90Fr | 6.90Fr |
| கோர்லிக்ஸ் | 6.90Fr | 5.90Fr |
| மைலோ | 6.90Fr | 5.90Fr |
| நெல்லி ரசம் (தோலகட்டி) | 6.50Fr | 5.40Fr |
| பழரச வகைகள் | 6.50Fr | 5.40Fr |
| லெமன் பஃப் | 2.50Fr | 1.25Fr |
| டி டைம் | 3.50Fr | 2.50Fr |
| கிப்ட் செலக்ஸ்ஸன் | 6.50Fr | 4.80Fr |
| ஃபமிலி ஷசேட்மன்ட் | 4.80Fr | 3.50Fr |
| கிறிம் கிறேக்கர் | 2.50Fr | 1.70Fr |
| சீனி சம்பல் | 5.50Fr | 4.20Fr |
| ஊறுகாய் வகைகள் | 5.50Fr | 4.20Fr |
| பிரியாணி மிக்ஸ் | 5.50Fr | 4.20Fr |
| ஜாம் வகைகள் | 3.90Fr | 3.10Fr |
| தேங்காய் பால் பவுடர் 1 Kg | 13.50Fr | 9.60Fr |
| தேங்காய் பால் பவுடர் 350g | 5.95Fr | 4.50Fr |
| தேங்காய் பால் பவுடர் 150g | 3.15Fr | 2.10Fr |
| மொட்டைக் கருப்பன் அரிசி 1Kg | 2.50Fr | 1.90Fr |
| புழுங்கல் அரிசி 5Kg | 12.50Fr | 9.30Fr |
| புழுங்கல் அரிசி 1Kg | 2.50Fr | 1.90Fr |

| உதாரணத்துக்காக மாற்றம் செய்யப்பட்ட விலை | பழைய விலை | புதிய விலை |
|---|---|---|
| சம்பா 5 Kg | 13.50 Fr | 9.30Fr |
| சம்பா 1Kg | 2.50Fr | 1.90Fr |
| பசுமதி அரிசி 5Kg | 12.00Fr | 7.50Fr |
| U.S.A அரிசி 25 Kg | 35.00 Fr | 28.50Fr |
| மைசூர் பருப்பு 2Kg | 5.50Fr | 3.50Fr |
| நல்லெண்ணெய் 375 Ml | 6.90Fr | 4.90Fr |
| 750 Ml | 11.90Fr | 9.40Fr |
| வறுத்த அரிசி மா 1 Kg | 3.90Fr | 2.90Fr |
| யாழ்.மிளகாய்தூள் 900g | 9.60Fr | 7.90Fr |
| கிங்ஸ், லீலா, சூரியா 500g | 5.50Fr | 4.30Fr |
| அதி குளிரூட்டப்பட்ட கோழிக்கால் 2.5Kg | 12.90Fr | 9.90Fr |
| உடன் ஆட்டிறைச்சி பங்கு 1Kg | 9.50Fr | 8.00Fr |
| உடன் ஆட்டிறைச்சி தொடை 1Kg | 14.00Fr | 11.00Fr |
| உடன்கோழி | 6.50Fr | 5.50Fr |
| மைசூர் பருப்பு 500g | 1.90Fr | 1.20Fr |
| உழுத்தம் பருப்பு 2kg | 5.90Fr | 4.50Fr |
| உழுத்தம் பருப்பு 500g | 1.90Fr | 1.20Fr |
| கடலைப் பருப்பு 2kg | 5.90Fr | 4.50Fr |
| கடலைப் பருப்பு 500g | 1.90Fr | 1.30Fr |
| கடலை 2kg | 6.90Fr | 4.50Fr |
| கடலை 500g | 1.90Fr | 1.30Fr |
| பயற்றம் பருப்பு 2kg | 6.90Fr | 4.50Fr |
| பயற்றம் பருப்பு 500g | 1.90Fr | 1.30Fr |
| உழுத்தம் பருப்பு கோதுடன் 2kg | 5.90Fr | 4.50Fr |
| உழுத்தம் பருப்பு கோதுடன் 500g | 1.90Fr | 1.20Fr |
| அவித்து அரித்த சுத்தமான கோதுமை மா 5 kg | 14.90Fr | 12.90Fr |
| மீன் ரின் (இலங்கை) | 2.70Fr | 2.00Fr |
| பழப்புளி 400g | 2.30Fr | 1.50Fr |
| நெக்டோ 1.5 ட | 3.50Fr | 2.50Fr |
| நெக்டோ 375 ml | 2.50Fr | 1.50Fr |
| ஆடு, மாடு, கோழி கறிக்கூடு | 5.90Fr | 4.90Fr |
| ரொட்டி | 4.00Fr | 3.00Fr |

## மீன்வெட்டிச் சுத்தம் செய்து தரப்படும் இலவசம்


இங்கு குறிப்பிடப்படாத மேலும் பல பொருட்கள்
அதி குறைந்த விலையில் விற்பனை செய்கிறோம்
மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு விஷேட
கழிவு உண்டு

**வாருங்கள்! நுகருங்கள்!**
**நல் ஆதரவைத் தாருங்கள்!!!**

**Bubenbergplatz 8 - 3011 bern**
**Tel: 031 -312 17 50**
**Natel: 079-300 37 49**
**Fax: 031 - 312 17 49**
பேர்ண் பெரிய தபால் நிலையத்துக்கு அருகே

காலவரையின்றி இதுவே எமது நிரந்தர விலையாகும்
எமது ஸ்தாபனம் உங்களுக்காக 365 நாட்களும் திறந்திருக்கும்

sw-70



# வடமாகாணத்தில் 339 பாடசாலைகள் இராணுவ நடவடிக்கைகளினால் அழிவு

கடந்த யூன் 30ம் திகதி, பிரான்சைத் தலைமைச் செயலகமாகக் கொண்டு இயங்கும் தமிழர் மனித உரிமைகள் மையத்தினால், இலங்கைத் தீவின் வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் தற்போதைய சங்கடமான கல்வி நிலை பற்றியும், வடமாகாணத்தில் சிறீலங்கா அரச படைகளின் குண்டு வீச்சினால் அழிக்கப்பட்ட 339 பாடசாலைகளின் பெயர் பட்டியலுடனும் - பிரான்சில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி விஞ்ஞான கலாச்சார அமைப்பான யுனெஸ்கோ நிறுவனத்தின் இயக்குநர் நாயகம் திரு. கொய்ச்சிறோ மாற்சுற அவர்களுக்கு ஒரு விபரங்கள் அடங்கிய மனு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: சர்வதேச மனித உரிமைச் சாசனத்தின் 26வது சாரம் கூறுவதாவது 'உலகில் சகலரும் கல்வி கற்க உரிமை உடையவர். ஆகக் குறைந்தது சிரேஷ்ட தராதரம் வரை கல்வியை இனாமாகக் கற்க உரிமையுடையதுடன், கல்வி கட்டாயமானதான ஒன்றாகவும் உள்ளது. கல்வி திறமையின் அடிப்படையில் சமனாகக் கற்க சகலரும் உரிமையுடையவர். அத்துடன் வேறுபல ஐ.நா. சபையின் சாசனங்கள் கல்விக்கு முன்னுரிமை கொடுப்பதுடன் உங்கள் யுனெஸ்கோ அமைப்பு கல்வி கட்டாயமானது மட்டுமல்லாது, கல்வி ஆரம்ப பாடசாலைகளில் இனாமாகக் கற்பிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

சிறீலங்கா, உங்கள் நிறுவனத்தில் 1949ம் ஆண்டு நவம்பர் 14ம் திகதி தொடக்கம் அங்கம் வகிக்கிறது. உங்கள் நிறுவனத்தின் 2002ம் ஆண்டு புள்ளி விபரங்களின்படி, சிறீலங்காவில் வயது வந்தோருடைய எழுதும் படிக்கும் அறிவு 97 விகிதமாக உள்ளது என்று கூறியுள்ளது. இது மற்றைய நாடுகளுடன் பார்க்கும் பொழுது மிகவும் கூடிய விகிதாசாரமே என்பதில் ஐயமில்லை. ஆனால் இலங்கை தீவின் சுதந்திரத்தின் பின்னர், பதவி மோகம் கொண்ட சிங்கள அரசியல்வாதிகளினால் கல்வி, அரசியல் மயமாக்கப்பட்டுள்ளது மட்டுமல்லாது, இத்தீவில் வாழும் தமிழ் மக்களுக்குச் சம கல்வி மறுக்கப்பட்டுள்ளது.

'1957ம் ஆண்டு தனிச்சிங்களச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதிலிருந்து தமிழர்களின் தாயக பூமியான வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களுடைய கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. சர்வதேச மனித உரிமை சாசனத்தின் 26வது சாரத்திற்கு எதிர்மாறாக, இலங்கை தீவில் வாழும் தமிழ் மக்கள், 1972ம் ஆண்டு முதல் கல்வி தரப்படுத்தலுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம் திறமை அடிப்படையில் பல்கலைக்கழகம் சென்று தமது கல்வியைத் தொடரும் வாய்ப்பைத் தமிழ் மக்களுக்குச் சிறீலங்கா அரசுகள் நிராகரித்துள்ளன.

'1983ம் ஆண்டு தமிழீழ மக்களுடைய சுயநிர்ணய போராட்டம், ஆயுத போராட்ட வடிவத்தை அடைந்ததிலிருந்து ஆயிரக்கணக்கான மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள், அதிபர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் அரச படைகளினால் கொல்லப்பட்டதுடன், பல பாடசாலை மாணவிகளும் ஆசிரியைகளும் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். அத்துடன், தமிழர் தாயக பூமியில் உள்ள பெரும்பாலான பாடசாலைகள் குண்டு வீச்சினாலும், செல் தாக்குதலாலும் அழிக்கப்பட்டுள்ளன.

'வடக்கில் மட்டும் ஏறக்குறைய 339 பாடசாலைகள் இராணுவ நடவடிக்கைகளினால் நாசமாக்கப்பட்டுள்ளன. இவற்றில் 50 விகிதமான பாடசாலைகள் முற்று முழுதாக அழித்து நாசமாக்கப்பட்டும், பாதிக்கப்பட்ட 70 விகிதமான பாடசாலைகள் இதுவரையில் எந்தவித திருத்த வேலைகளும் செய்யாது அனாதரவாகவும் உள்ளன.

'1990ம் ஆண்டிலிருந்து வடமாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த பொருளாதாரத் தடை, தமிழ் மாணவ மாணவிகளின் கல்வியை மிக மோசமாகப் பாதித்திருந்தது. மின்சாரம் இல்லாத வாழ்க்கை, பாடசாலை உபகரணங்கள் இல்லாத படிப்பு, நாளாந்த உணவு இல்லாமை போன்ற காரணிகள் கல்வி வளர்ச்சியைப் பாதித்தது. வடக்கு கிழக்கில் ஏறக்குறை ஆறாயிரம் ஆசிரியர் பற்றாக்குறை இன்று நிலவுகிறது. வன்னி மாவட்டத்தில் 50 விகிதமான, ஆசிரியர்கள் இல்லாத பாடசாலைகள் உள்ளன.

இதேவேளை வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில், தேவைக்கு மேலதிகமாக 14,500 - 15,000 ஆசிரியர்கள் உள்ளார்கள். வடக்கு கிழக்கில் ஆசிரியர் தட்டுப்பாடு நிலவுவதை அரசாங்க அறிக்கைகள் ஏற்றுக்கொள்ளும் அதேவேளை, ஆசிரியர்களைத் தொண்டர்களாக வேலைக்கு அமர்த்துவதற்கான அனுமதியையும் மறுக்கிறது.

'வடக்கு கிழக்கு கல்வி நிர்வாக சேவையில் 75 விகிதமான ஊழியர் பற்றாக்குறை இன்றும் நிலவுகிறது. சில பாடசாலைகளில் ஆசிரியர்களே நிர்வாக வேலைகளையும் செய்ய வேண்டியுள்ளது. 'சிறீலங்காவின் கல்வி அமைச்சின் ஒரு பகுதியான 'தேசிய கல்வி நிறுவனம்' சிங்களத்தில் உள்ள பாடப்புத்தகங்களை இலவசமாக விநியோகிக்கின்றன. ஆனால், சிங்கள மொழியிலிருந்து தமிழுக்கு மொழி பெயர்ப்பு செய்வதற்குக் குறைந்தது இரண்டு, மூன்று வருடங்களாகின்றன. இதனால் வடக்கு கிழக்கில் உள்ள மாணவர்களுக்குத் தமது கல்வி ஆண்டுக்குரிய பாடப் புத்தகங்கள் கிடைப்பதில்லை. பாடப் புத்தகங்கள் இல்லாது தமது கல்வியை மேற்கொள்ள வேண்டியநிலை தமிழ் மாணவ, மாணவிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது.

அரசாங்கத்தால் விநியோகிக்கப்படும் சரித்திரப் பாடப் புத்தகங்கள் புதுமையானவை. இச்சரித்திரப் புத்தகங்கள் இலங்கைத் தீவைப் பற்றி ஓர் உண்மைக்கு மாறான சரித்திரத்தை எழுதியுள்ளன. மகாவம்சம் போன்ற இந்தக் கற்பனைக் கதையை, தமிழ் மாணவ மாணவிகளுக்குக் கற்பிக்கச் சிங்கள அரசாங்கங்கள் முயற்சிக்கின்றன.

இதேவேளை, தேசிய கல்வி நிறுவனத்தினால் `ஒளி` நாடாக்கள் (Video) விநியோகிக்கப்படுகின்றன. இன்றுவரை ஆறு ஒளிநாடாக்கள் மட்டுமே தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இன்னும் 90 விகிதாமான ஒளி நாடாக்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட வேண்டியுள்ளன. இதனால் தமிழ் மாணவ, மாணவிகள் இக்கல்வித் திட்டம் மூலம் பயன்பெறமுடியாமல் உள்ளனர். வடக்கு கிழக்கில் பெரும் எண்ணிக்கையான பாடசாலைகள் 'பாதுகாப்பு வலயம்' என்று பெயர் சூட்டப்பட்டு இயங்க முடியாத நிலையில் உள்ளன. வேறு பல இடங்களில் பல பாடசாலைகள் தளபாடங்கள் இல்லாத நிலையில் மூடப்பட்டும், சில பாடசாலைகள் ஆசிரியர்கள் இல்லாத காரணத்தினால் செயலற்றும் உள்ளன.

'சர்வதேச ரீதியாக, ஐ.நா. நிறுவனங்களும் சர்வதேச ஸ்தாபனங்களும் கல்வியை முதன்மைப் படுத்தி, கல்விக்கான நவீன வழிமுறைகளைக் கையாளும் இவ்வேளையில், இலங்கைத் தீவில் வாழும் தமிழ் மக்கழுடைய கல்வி, அரசியல் காரணங்களுக்காக வேறுபட்ட சிங்கள அரசாங்கங்களினால் திட்டமிடப்பட்டு மறுக்கப்படுகிறது. இந்த நிலை இலங்கைத் தீவில் மாறவேண்டுமாயின், உங்கள் நிறுவனம், மேற்கு உலகத்தின் பலம் வாய்ந்த அரசாங்கங்கள், சர்வதேச கல்வி நிறுவனங்கள், புத்திஜீவிகள் இலங்கை தீவில் வாழும் தமிழ் மக்களுடைய கல்வி நிலையை உடன் கவனத்தில் எடுத்து ஆவன செய்ய வேண்டும் என நாம் கேட்டுக்கொள்கிறோம்.

# இலண்டனில் குற்றச் செயல்களில் ஈடுபட்ட தமிழ் இளைஞர்கள் கைது

## ஸ்கொட்லான்ட் யாட் காவற்துறையினர் அதிரடி நடவடிக்கை

**– கத்திகள், கோடரிகள், பேஸ்போல் மட்டைகள், ஹொக்கி தடிகள், பெருந்தொகைப் பணம், போலி வங்கி கடன் அட்டைகள், துப்பாக்கி மீட்பு –**

பிரித்தானியா, இலண்டனில் இலங்கைத் தமிழ் சமூகத்தினர் வாழ்கின்ற பகுதிகளை கடந்த 8ம் திகதி வியாழக்கிழமை திடீரென சுற்றிவளைத்த பிரித்தானிய ஸ்கொட்லண்ட் யாட் காவற்துறையினர் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புபட்ட 13 தமிழ் இளைஞர்களைக் கைது செய்துள்ளனர். இவர்களிடமிருந்து கத்திகள், வாள்கள், கோடரிகள் மற்றும் ஒரு துப்பாக்கி, பெருந்தொகைப் பணம், ஏராளமான போலி வங்கிக் கடன் அட்டைகள் என்பவற்றையும் கைப்பற்றியுள்ளனர். இலண்டன் மாநகரத்தின் பிரெண்ட், ஹரோ, றெட்பிரிஜ், குறொய்டொன் மற்றும் நியூஹாம் ஆகிய இடங்களில் உள்ள 22 தமிழ் இளைஞர்களின் இல்லங்களைச் சுமார் 250ற்கும் அதிகமான காவற்துறையினர் அதிகாலைப் பொழுதில் திடீரெனச் சுற்றிவளைத்துத் தேடுதல்களை மேற்கொண்டனர்.

பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்துக்குரியவர்கள் தங்கியிருந்த ஒரு முகவரியை சோதனையிட்ட போது, ஐவர் கைது செய்யப்பட்டதுடன், அங்கிருந்து 3 வாள்கள், 3 கோடரிகள், பேஸ்போல் மட்டைகள், ஹொக்கி தடிகள், வங்கிக் கடன் அட்டைகள், கடன் அட்டை வாசிக்கும் கருவி என்பவற்றையும் கைப்பற்றினர்.



வீடொன்றினுள் தேடுதலில் ஈடுபட்டுள்ள ஸ்கொட்லன்ட் யாட் காவற்துறையினர்

மற்றுமொரு முகவரியிலிருந்து ஐவர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் மூவர் பண மோசடியுடனும், மற்றையவர்கள் களவு மற்றும் மோசடிகளுடனும் தொடர்புபட்டவர்கள். அதிகாலை நடவடிக்கையில் மட்டும் எல்லாமாக 11000 பவுண்ஸ் பணம், 4500 வெற்றுக் காசோலைகள், 69 கடன் அட்டைகள், 2 கணினிகள், 15 வீடியோ டெக்கோடர்கள் என்பவற்றுடன் 30,000 பவுண்ஸ் பெறுமதியான மேர்சிடஸ் உயர்ரக கார் ஒன்றும் கைப்பற்றப்பட்டன.

அத்துடன் இதன்போது 13 தமிழ் இளைஞர்களும் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட 13 தமிழ் இளைஞர்களும், 18 முதல் 25 வயதிற்கிடைப்பட்டவர்கள். 10ற்கும் மேற்பட்ட கொலைகளுடன் இவர்கள் சம்பந்தப்பட்டவர்கள் என்றும், சுமார் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான தமிழர்கள் வாழ்கின்ற பல்வேறு இடங்களிலிருந்து இவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் நகர காவற்துறை அதிகாரியான அல்பிரட் ஹிட்ச்ஹொக் தெரிவித்தார்.

இலண்டனில் வாழ்கின்ற இலங்கைத் தமிழர்களில் பெரும்பாலானவர்கள் சட்ட திட்டங்களுக்கு அமைவாக நடந்து வருவதாகவும், ஒரு சிறு குழுவினர்தான் சட்டத்திற்கு முரணாக பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவித்த காவற்துறை அதிகாரியான அல்பிரட் ஹிட்ச்ஹொக், தமது இந்நடவடிக்கை ஓர் ஆரம்ப கட்ட நடவடிக்கை எனவும், முடிவை எட்டும் வரை தமது நடவடிக்கை தொடரும் எனவும் தெரிவித்தார்.

இச்சம்பவத்தின்போது கைது செய்யப்பட்ட 13 பேரில் இருவர் போதைவஸ்து கடத்தல் தொடர்பாகவும், மற்றொருவர் நீதிமன்ற பிடியாணைக்கமையவும் கைது செய்யப்பட்டுள்ளனர். தொடர்ந்து வியாழனன்று பகல் பூராகவும் தேடுதல் நடவடிக்கையில் காவற்துறையினர் ஈடுபட்டனர். இதற்காக, மேலும் 250 காவற்துறையினர் வரவழைக்கப்பட்டு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இதேவேளை, குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் பற்றிய தகவல்களை எந்த வித அச்சுறுத்தலும் இன்றி காவற்துறையினருக்கு வழங்குவதற்காக அங்கு வாழும் இலங்கைத் தமிழர்களுக்கென விசேட தொலைபேசி வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.



# ஆறு மாகாண சபைகளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வசமாகின!

கடந்த 10ம் திகதி சனிக்கிழமை இடம்பெற்ற ஆறு மாகாண சபைகளுக்கான தேர்தலில் நிர்வாகத்தை ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தன்வசமாக்கிக் கொண்டுள்ளது. 15 மாவட்டங்களில் நுவரெலியா மாவட்டம் தவிர்ந்த ஏனைய 14 மாவட்டங்களிலும் சுதந்திர முன்னணி வெற்றியீட்டியுள்ளது. ஏற்கனவே, வட மேல் மாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்பட்டு அதிலும் ஆளும் சுதந்திர முன்னணியே வெற்றி பெற்றது. சுமார் 95 இலட்சம் வாக்காளர்கள் இருக்கும் ஆறு மாகாண சபைகள் பிரிவிலும் சரி பாதிக்கும் குறைவாகவே மக்கள் வாக்களித்திருக்கின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கோட்டைகள் என வர்ணிக்கப்படும் தலைநகர் கொழும்பு, கண்டி போன்ற மாவட்டங்களைக் கூட அக் கட்சியால் தக்கவைத்துக் கொள்ள முடியாது போயுள்ளது. ஆக நுவரெலியா மாவட்டத்தில் மட்டுமே ஐ.தே.க. முன்னணி வகித்துள்ளது. ஆளும் கட்சி சகல மாகாண சபைகளிலும் போதுமான பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டிருக்கின்றது. அதே சமயம், பிரதான கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் பலம் கொண்ட எதிர்க்கட்சியாகவே திகழ்கின்றது. இம் முறை சிறிய மற்றும் சிறுபான்மைக் கட்சிகள் எதிர்பாராத அளவுக்குப் பின் தள்ளப்பட்டிருக்கின்றன. மேல் மாகாணத்தில் மட்டும் 10 ஆசனங்களைக் கைப்பற்றுவோம் என்று தெரிவித்து வந்த முஸ்லிம் காங்கிரஸினால் 4 ஆசனங்களை மட்டுமே பெற முடிந்துள்ளது. இது தவிர, அநுராதபுரம் மாவட்டத்தில் ஒரு ஆசனத்தையும் முஸ்லிம் காங்கிரஸ் பெற்றுக் கொண்டுள்ளது. ஏற்கனவே, வட மேல் மாகாணசபைத் தேர்தலின்போது நான்கு ஆசனங்களை அக் கட்சியால் பெறமுடிந்துள்ளது. கடந்த மாகாண சபைகளின் பதவிக் காலத்தில் வடக்கு, கிழக்குக்கு வெளியே இரண்டு ஆசனங்களுடன் இருந்த முஸ்லிம் காங்கிரஸ் இம்முறை மொத்தம் 10 ஆசனங்கள் என்ற நிலைக்கு உயர்ந்துள்ளது.

மேல் மாகாண சபையில் மூன்று ஆசனங்களாவது கிட்டும் என நம்பிக்கை கொண்டிருந்த மேல் மாகாண மக்கள் முன்னணிக்கு ஆக ஒரு ஆசனத்தை மட்டுமே வெற்றி கொள்ள முடிந்துள்ளது. அதேபோல், அரசியலுக்கு முதலில் அடியெடுத்து வைத்த ஜனநாயக ஐக்கிய முன்னணி (நுஆ)வும் நான்கு ஆசனங்களை வெல்வோம். யார் ஆட்சியமைப்பதானாலும் தம்மை நாடியே தீர வேண்டி வரும் எனப் பிரசாரம் புரிந்து வந்தது. அந்தக் கட்சியாலும் ஆக ஒரு ஆசனத்தை மட்டுமே பெற்றுக் கொள்ள முடிந்தது.

ஆட்சியமைப்பதற்கும், பலமான எதிர்க்கட்சியாக இருப்பதற்கும் இரண்டு பிரதான கட்சிகளுக்கும் எவருடைய தயவும் தேவைப்படும் நிலைமை காணப்படவேயில்லை. தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திசாநாயக்கவினால் ஞாயிற்றுக்கிழமை காலையில் வெளியிடப்பட்ட மாவட்ட அடிப்படையிலான இறுதி முடிவுகளின் பிரகாரம் மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 322,653 வாக்குகளைப் பெற்று 21 ஆசனங்களைத் தனதாக்கிக் கொண்டுள்ளது. 276,759 வாக்குகளைப் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சிக்கு 18 ஆசனங்கள் கிடைத்துள்ளன. 31,184 வாக்குகளைப் பெற்றுக் கொண்ட சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இரண்டு ஆசனங்களையும், 12,219 வாக்குகளைப் பெற்ற மேல் மாகாண மக்கள் முன்னணி ஒரு ஆசனத்தையும் பெற்றுக் கொண்டுள்ளது. அதேசமயம், முதன்முதல் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட ஜனநாயக ஐக்கிய முன்னணி 6219 வாக்குகளைப் பெற்று ஒரு ஆசனத்தை தனதாக்கிக் கொண்டுள்ளது.

## ஒரே பார்வையில் தேர்தல் முடிவுகள்

| மாகாணம் | சுதந்திர முன்னணி | ஐ.தே.க. | இ.தொ.கா. | மலையக மக்கள் முன்னணி | முஸ்லிம் காங்கிரஸ் | மேல் மாகாண மக்கள் முன்னணி | ஜனநாயக ஐக்கிய முன்னணி (நு.ஆ.) |
|---|---|---|---|---|---|---|---|
| மேல் மாகாணம் | 57 | 39 | - | - | 4 | 1 | 1 |
| மத்திய மாகாணம் | 30 | 24 | - | 2 | - | - | - |
| ஊவா மாகாணம் | 19 | 12 | - | 1 | - | - | - |
| சப்ரகமுவ மாகாணம் | 25 | 15 | 1 | - | - | - | - |
| வடமத்திய மாகாணம் | 20 | 10 | - | - | 1 | - | - |
| தென் மாகாணம் | 34 | 19 | - | - | - | - | - |

ஆறு மாகாண சபைகளுக்கும் உட்பட்ட 117 தொகுதிகளில் 105 தொகுதிகளை ஆளும் சுதந்திர முன்னணி தனதாக்கிக் கொண்ட நிலையில், ஆக 12 தொகுதிகளை மட்டுமே ஐக்கிய தேசியக் கட்சியால் காப்பாற்றிக் கொள்ள முடிந்துள்ளது.

## மேல் மாகாணத்தில்

### கம்பஹா மாவட்டம்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 392,881 வாக்குகளைப் பெற்று 24 ஆசனங்களை தனதாக்கிக் கொண்டிருக்கின்றது. 218,903 வாக்குகளைப் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி 14 ஆசனங்களையும், 16621 வாக்குகளைப் பெற்ற முஸ்லிம் காங்கிரஸ் ஒரு ஆசனத்தையும் பெற்றுள்ளன.

### களுத்துறை மாவட்டம்

ஆளும் சுதந்திர முன்னணி 224 914 வாக்குகளைப் பெற்று 12 ஆசனங்களையும், ஐக்கிய தேசியக் கட்சி 141 336 வாக்குகளுடன் 7 ஆசனங்களையும், முஸ்லிம் காங்கிரஸ் 22 926 வாக்குகளுடன் ஒரு ஆசனத்தையும் தமதாக்கிக் கொண்டுள்ளன.

## மத்திய மாகாணம்

### கண்டி மாவட்டம்

ஆளும் சுதந்திர முன்னணி 16 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. அங்கு அக் கட்சி பெற்றுக் கொண்ட வாக்குகள் 244,595 ஆகும். ஐக்கிய தேசியக் கட்சி 202,264 வாக்குகளைப் பெற்று 14 ஆசனங்களை தனதாக்கியுள்ளது.

### நுவரெலியா மாவட்டம்

ஐக்கிய தேசியக் கட்சி 138, 572 வாக்குகளுடன் 8 ஆசனங்களைப் பெற்றுக் கொண்டுள்ளது. இம் மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 89,192 வாக்குகளைப் பெற்று 6 ஆசனங்களுடன் இரண்டாமிடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது. இங்கு மலையக மக்கள் முன்னணி 36,939 வாக்குகளுடன் 2 ஆசனங்களைப் பெற்றுக் கொண்டுள்ளது.

### மாத்தளை மாவட்டம்

சுதந்திர முன்னணி 92,510 வாக்குகளைப் பெற்று 6 ஆசனங்களையும், 69,309 வாக்குகளைப் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி 4 ஆசனங்களையும் தமதாக்கிக் கொண்டன.

### சப்ரகமுவ மாகாணம்

சப்ரகமுவ மாகாண சபையில் 26 ஆசனங்களை ஆளும் சுதந்திர முன்னணியும், 15 ஆசனங்களை ஐக்கிய தேசியக் கட்சியும் பெற்றிருக்கின்றன. இம் மாகாணத்தில் இரத்தினபுரி மாவட்டத்தில் இ.தொ.கா. ஒரு ஆசனத்தை வென்றெடுத்துள்ளது. இம் மாகாணத்தில் கேகாலை மாவட்டத்தில் சுதந்திர முன்னணி 11 ஆசனங்களையும், ஐ.தே.க. 7 ஆசனங்களையும், இரத்தினபுரி மாவட்டத்தில் முறையே 15 ஆசனங்களையும், 8 ஆசனங்களையும் பெற்றுக் கொண்டன.

### வட மத்திய மாகாணம்

வட மத்திய மாகாணத்தில் அநுராதபுரம் மாவட்டத்தில் ஆளும் சுதந்திர முன்னணி 14 ஆசனங்களையும், ஐ.தே.க. 6 ஆசனங்களையும், சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒரு ஆசனத்தையும் வென்றெடுத்துள்ளன. பொலநறுவை மாவட்டத்தில் சுதந்திர முன்னணி 6 ஆசனங்களையும், ஐ.தே.க. 4 ஆசனங்களையும் கைப்பற்றிக் கொண்டுள்ளன.

### ஊவா மாகாணம்

ஊவா மாகாணத்தில் பதுளை மாவட்டத்தில் போட்டியிட்ட சுதந்திர முன்னணி 12 ஆசனங்களைப் பெற்றுக் கொண்ட நிலையில், ஐ.தே.க.வினால் 8 ஆசனங்களை மட்டுமே பெற முடிந்துள்ளது. இங்கு மலையக மக்கள் முன்னணி ஒரு ஆசனத்தை வெற்றி கொண்டுள்ளது. மொனராகலை மாவட்டத்தில் சுதந்திர முன்னணி 7 ஆசனங்களையும், ஐ.தே.க. 4 ஆசனங்களையும் பெற்றுக் கொண்டுள்ளன.

### தென் மாகாணம்

தென் மாகாண சபைக்கான தேர்தலில் காலி மாவட்டத்தில் போட்டியிட்ட ஆளும் சுதந்திர முன்னணி 14 ஆசனங்களையும், ஐக்கிய தேசியக் கட்சி 9 ஆசனங்களையும் தம் வசப்படுத்திக் கொண்டுள்ளன. மாத்தறை மாவட்டத்தில் சுதந்திர முன்னணி 12 ஆசனங்களையும், ஐ.தே.க. 6 ஆசனங்களையும் பெற்றுக் கொண்டதோடு, அம்பாந்தோட்டை மாவட்டத்தில் சுதந்திர முன்னணி 8 ஆசனங்களையும், ஐ.தே.க. 4 ஆசனங்களையும் வெற்றி கொண்டுள்ளன.

குறும்பட மாலை - கோடை 2004
வில்தானூஸ் - பிரான்சு
17. 07. 2004 சனி 16.00 மணி - 19.00 மணி
0 பிரித்தானியா - அஜீவன் – அழியாத கவிதை
0 பிரான்சு - ஓசை மனோ – தாகம்
0 ஜேர்மனி - கலைக்கண் பாலராஜா – கனவுகள்
0 சுவிஸ் - அஜீவன் – எச்சில் போர்வை
0 பிரான்சு - வதனன் – விலாசம்
0 சுவிஸ் - அஜீவன் – நிழல் யுத்தம்
La salle Motricité de l'école J.B.
4 Place J.B. Clément
93430 VILLETANEUSE
Devant la Poste - Villetaneuse
BUS: 256 (Eglise de Villetaneuse), 356/354 (la Piscine)
நன்றி :
சமுவர் சினி ஆர்ட்ஸ் எஸ் ஜே ஜோசெப்,
திரைக்கலை ஆர்வலர் அஜீவன், வதனன்
மற்றும் புகலிடத் தமிழ்த்திரை வளர்ச்சியில்
அயராத ஒத்துழைப்பைத் தரும் சமூக ஆர்வலர்கள்
புகலிடத்திலும் தன் திரைப் பணியைத் தொடரும்
மூத்த கலைஞன் இரகுநாதன் கௌரவிப்பு
கலந்துரையாடல் - திரை இரசனை
சலனம் பாரிஸ் தமிழர் சினிமாக்கலை இரசனை மன்றம்
198 Avenue de la division Leclerc, 93260 Villetaneuse France
www.appaal-tamil.com
kmukunthan@hotmail.com

# இலங்கை யுத்த நிறுத்தம் நீடிக்கும்

## புதுடில்லியில் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பெற்றர்சன் தெரிவிப்பு

கடந்த வாரம் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்ட நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பெற்றர்சன், இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வார் சிங், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் டி.என்.தீக்ஷித் ஆகியோருடன் பேச்சுக்களை நடாத்தியிருந்தார். இச்சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களின் கேள்விக்குப் பதிலளித்த நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர், இலங்கையில் யுத்தநிறுத்தம் தொடர்ந்து நீடித்திருக்குமெனவும் கடந்த இரு வருடங்களாக இதன் மூலம் கிடைத்த அனுபவங்கள் சமாதானத்தின் பலாபலனை மக்கள் உணரக்கூடிய நிலையை ஏற்படுத்தியிருப்பதாகவும் நம்பிக்கை வெளியிட்டிருக்கின்றார். இலங்கை விடயங்கள் தொடர்பாக இந்திய ஊடகவியாளர்கள் அவரிடம் கேட்ட கேள்விகளுக்கு, அவர் வழங்கிய பதில்களை இங்கு தொகுத்துத் தருகின்றோம்.


**இந்த மோதலுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் இரு தரப்பினரும் தீவிரமான ஆர்வத்துடன் இருக்கிறார்கள் என்பதே அடிப்படையான உண்மை. உடன்பாடொன்றைக் காணவேண்டுமென்ற முயற்சியில் சிறீலங்கா அரசு தலைவர் சந்திரிகா குமாரதுங்கவும், விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் தீவிரமாக உள்ளனர்.**

**கேள்வி:-** இலங்கையில் சமாதானப் பேச்சுக்கள் எப்போது ஆரம்பமாகும்?

*ஜோன் பெற்றர்சன்:–* சிறீலங்கா அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தை எப்போது ஆரம்பமாகும் என்பதை இப்போது கூறுவதற்குரிய காலம் இன்னமும் வரவில்லை. இரு தரப்பினருடனும் நாம் தொடர்புகளைக் கொண்டிருக்கிறோம். மீண்டும் எப்போது தாங்கள் பேச்சை ஆரம்பிக்க ஆயத்தமாக இருக்கிறார்களென்பதை அறிவிக்க வேண்டியது உண்மையிலேயே அவர்கள் இரு சாராரையும் பொறுத்தவிடயம்.

**கேள்வி:-** இந்த சமாதானப் பேச்சுக்களில் நோர்வேயின் பங்களிப்பு எவ்வாறு இருக்கும்? பேச்சுவார்த்தை தொடர்பான விடயங்களை நோர்வே அறிவிக்குமா?

*ஜோன் பெற்றர்சன்:–* நோர்வே, அனுசரணையாளராகவே தனது பங்களிப்பினை வழங்குகின்றது என்பது புரிந்து கொண்டிருக்க வேண்டியதொன்றாகும். இரு தரப்பினருக்



நட்வார் சிங்

கும் இடையில் ஏற்பாடுகளை மேற்கொள்வதே நோர்வேயின் பொறுப்பாகும். பேச்சுவார்த்தை நடவடிக்கைகள் தொடர்பாக அவ்வப்போது கருத்துகளைத் தெரிவித்துக் கொண்டிருப்பது எமது பணியல்ல. நிலைமை என்ன என்பது குறித்து பொதுமக்களுக்கு அறிவிக்கும் பொறு-ப்பை சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் விட்டுவிடுவதே புத்திசாலித்தனமானது என்று நான் நினைக்கிறேன். கடந்த வாரம் எமது அனுசரணையாளர்களில் ஒருவர் (எரிக் சொல்ஹெய்ம்) இலங்கையில் இருந்தார். அவர் இரு தரப்பினருடனும் தொடர்பு கொண்டிருந்தார். அந்தச் சந்திப்புகள் பிரயோசனமானவை. ஆனால், இதுவரை முடிவு எதுவும் ஏற்படவில்லை.

**கேள்வி:-** இலங்கையின் கிழக்கு பகுதியில் அண்மையில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவங்கள் சமாதான நடவடிக்கைகளில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும்?

*ஜோன் பெற்றர்சன்:–* இந்த மாதிரியான விடயங்கள் குறித்து பகிரங்கமாகக் கருத்துக் கூறுவது எனக்கு ஏற்புடையதொன்றல்ல. சம்பந்தப்பட்ட இரு தரப்பினருமே இது குறித்து அபிப்பிராயம் தெரிவிக்க வேண்டியவர்கள்.

**கேள்வி:-** கருணா விவகாரத்தில் நோர்வே எத்தகைய அபிப்பிராயத்தைக் கொண்டுள்ளது? சமாதான நடவடிக்கைகளில் இதன் பாதிப்பு, அனுசரணையாளரென்ற முறையில் இந்த விவகாரத்தை எவ்வாறு அணுகுவது என்பன குறித்து நோர்வே எப்படியான யோசனையை முன் வைக்கிறது?

*ஜோன் பெற்றர்சன்:–* சம்பந்தப்பட்ட தரப்பினரிடையே நாம் செய்திகளைத் தெரிவித்து வருகிறோம். இந்த விவகாரம் உட்பட சகல விடயங்கள் குறித்தும் நாம் அவர்களுடன் கலந்துரையாடியிருக்கிறோம். சம்பந்தப்பட்ட தரப்பொன்றினால் எழுப்பப்படும் கேள்வி தொடர்பாகச் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எத்தகைய கணிப்பீட்டைக் கொண்டிருக்கிறோம் என்பது குறித்தும், மற்றும் ஆலோசனைகள், சிபாரிசுகளை வழங்கி வருகிறோம்.

**கேள்வி:-** இலங்கை விவகாரத்தில் எத்தகைய பங்களிப்பினை இந்தியா வழங்க வேண்டுமென நோர்வே விரும்புகின்றது?

*ஜோன் பெற்றர்சன்:–* இந்தியாவே இதனைத் தெரிவிக்க வேண்டும். இந்தப் பிராந்தியத்தில் மட்டுமல்லாமல் உலகின் இப் பிராந்தியத்தில் இந்தியா ஒரு முக்கியமான பங்காளி. இங்கு வந்து இந்தியத் தரப்பினருடன் விடயங்களைப் பகிர்ந்து கொள்வது எனக்கு மிக மிக முக்கியமானதொரு விடயம். நாம் இரு சாராரும் மிக மிக வேறுபட்ட பங்களிப்புகளை வழங்க வேண்டியவர்கள் என்பதை மனதில் கொண்டிருக்கிறோம். ஆதலால், இந்தியாவின் சார்பாக எத்தகைய பங்களிப்பை அது வழங்க வேண்டுமெனக் கூறுவது என்னைப் பொறுத்த விடயமல்ல. எத்தகைய பங்களிப்பை இந்தியா வழங்க விரும்புகிறதோ அதனை அது தெரிவிக்கும்.

**கேள்வி:-** இந்தியாவிடம் ஏதாவது விசேட கோரிக்கையை விடுத்தீர்களா?

*ஜோன் பெற்றர்சன்:–* புதிய அரசாங்கம் பொறுப்பேற்றபின் சாத்தியமான அளவுக்குத் துரிதமாக இந்திய தலைமைத்துவத்துடன் பொதுவாகக் கருத்துப் பரிமாறல்களை மேற்கொள்ள விரும்பினோம். இந்திய அரசாங்கத்துடன் வெளிப்படையாகத் தொடர்புகளை வைத்திருக்க நாம் விரும்புகிறோம். மிக விரைவாக அந்தச் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

**கேள்வி:-** சிங்கள கடும்போக்கு சக்திகளின் எழுச்சியானது சமாதான நடவடிக்கைகளை சிக்கலானதாக மாற்றுமா?



ஜோன் பெற்றர்சன்

*ஜோன் பெற்றர்சன்:–* உண்மையிலேயே மிகவும் சிக்கலான காரணிகளை நாம் எதிர்கொண்டு வந்திருக்கிறோம். இவற்றையும் எதிர்கொள்ள நாம் தயாராக இருக்கிறோம். இது மிகவும் சிக்கலான விடயம். சகல பிரச்சினைகளையும் எதிர்கொண்டு எமது இலக்கை எட்டுவதே எமது பணியாகும். சம்பந்தப்பட்ட தரப்பினர் கேட்டுக் கொண்டால் நீண்ட காலத்துக்கு எமது பணியைத் தொடர்ந்து மேற்கொள்ள நாம் ஆயத்தமாக இருக்கிறோம்.

**கேள்வி:-** குறிப்பிட்ட அந்த இலக்கை நோக்கிய பயணத்தில் நோர்வே ஆரம்ப கட்டத்தில் இருக்கிறதா அல்லது இறுதிக் கட்டத்தில் இருக்கின்றதா?

*ஜோன் பெற்றர்சன்:–* அதனைக் கூறுவது கடினமான காரியம். ஏனெனில், அந்தப் பக்கம் என்ன நடக்கின்றது என்பது எமக்குத் தெரியாது.

**கேள்வி:-** சமாதான நடவடிக்கையில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு இருக்கும் ஈடுபாடு குறித்து...?

*ஜோன் பெற்றர்சன்:–* இந்த மோதலுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் இரு தரப்பினரும் தீவிரமான ஆர்வத்துடன் இருக்கிறார்கள் என்பதே அடிப்படையான உண்மை. உடன்பாடொன்றைக் காணவேண்டுமென்ற முயற்சியில் சிறீலங்கா அரசு தலைவர் சந்திரிகா குமாரதுங்கவும், விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் தீவிரமாக உள்ளனர். அந்த உண்மையின் அடிப்படையிலேயே நாம் பணியாற்றுகின்றோம்?.


லாச்சப்பலில் ஒரு புதிய உதயம்

தரமான, கூடவே சுவையான
இறைச்சித் தெரிவுகளுக்கு நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்
லாச் சபலில் யாழ்ப்பாணம் இறைச்சிக்கடை

5, Rue Perdonnet, 75010 Paris.
Métro - La Chapelle / Gare du Nord
Tél: 01 40 05 92 91

எமக்கு வேறு கிளை நிறுவனங்கள் இல்லை

யாழ்ப்பாணம் இறைச்சிக்கடை
YALPPAANAM BOUCHERIE




ஆட்டு இறைச்சி - மாட்டு இறைச்சி
கோழி இறைச்சி
மான் இறைச்சி - மரை இறைச்சி
காட்டுப் பன்றி - காட்டுக் கோழி
இன்னும்...! இன்னும்...! பலவகை.



Pub-Fr

# அம்மா

காங்கேசந்துறை தேவா




`அம்மாவுக்கு எப்படி இருக்கிறது?'

அந்தமாலை நேரத்துக் குளிர்காற்று சில்லென்று முகத்திலடித்த உணர்வுகூடத் தெரியாது வீட்டிற்குள் நுழைந்தவளுக்குத் தன் கணவனின் கேள்விக்குப் பதில்சொல்லுமுன் விழியோரங்களில் கண்ணீர் முட்டுகிறது.

மெதுவாக அவள் கைகளைப் பிடித்து இருக்கையில் அமரவைக்கிறான் அவள் கணவன் முரளி. மேற்கொண்டு எதுவும் கேட்காமல் அவளுக்குத் தானே தேநீர் போட்டுக்கொடுத்து அவள் பக்கத்தில் அமர்கிறான் முரளி. `அகல்யா இதைக் குடி' என்று அன்பாகத் தேநீர் கோப்பையை எடுத்துக்கொடுத்தான் முரளி. ஒருவாய் பருகியவள் அதை வைத்துவிட்டு அவன் தோளில் சாய்ந்து விம்முகிறாள்.

`அம்மா என்னை விட்டுப் போய் விடுவாளா?'

`அப்படி ஒன்றும் நடக்காது. நீ கவலைப்படாதே அகல்யா' இன்று அவளைத் தனியாக விடுவதே நல்லது. இரவுச் சமையலைத் தானே செய்ய வேண்டுமென்று சமயலறைக்குள் நுழைகிறான் முரளி.

தனியாக டிவியில் ஓடிய காட்சிகள் எதுவும் அகல்யாவின் கவனத்தைத் திருப்பவில்லை. மெதுவாக அதை அணைக்கிறாள். அம்மாவின் நினைவு திரும்பவும் மோத இருக்கையில் கையை அணையாகக்கொண்டு சிறிது சரிகிறாள். விழியோரம் பெருகிய கண்ணீர் கையை நனைக்கிறது. அம்மா என் இனிய அம்மா. என்னை உருவாக்குவதற்காக மெழுகுவர்த்தி மாதிரி தன்னையே அழித்துக்கொண்ட கருணைத் தெய்வம். விபரம் தெரிந்தநாளில் இன்றுதான் அம்மாவை விட்டுத் தனியே இருக்கிறாள் அகல்யா. அன்பு வடிவம் என் தாய்.

`அம்மா உனக்குத் தூக்கம் வருகிறதா. இல்லை என்னையே நினைத்துக் கொண்டிருக்கிறாயா?' எண்ணித் தவிக்கிறாள் அகல்யா. ஐந்தாவது வயதிலேயே அப்பாவை இழந்துவிட்டாள் அகல்யா. அவர் முகங்கூட அவள் நினைவுக்கு வரவில்லை. படத்தில் மாலையோடு சிரித்துக்கொண்டிருக்கும் நிழல் முகந்தான் அவளுக்குத் தெரிந்த அப்பா, மற்றும்படி அவள் உலகம் பந்தபாசமெல்லாம் அவள் தாய்தான். முந்தைய இரவு தனக்கு நெஞ்சில் ஏதோ செய்கின்றதென்று அம்மா சொல்ல துடித்துவிட்டாள் அகல்யா. காலையிலேயே அவளை ஆஸ்பத்திரியில் சேர்த்துவிட்டு அன்று முழுவதும் அவள் கூடவே இருந்தாள் அகல்யா. டொக்டர்கள் எதுவும் சொல்லவில்லை அம்மா.

உன் இளமை உணர்வுகளையெல்லாம் எனக்காகத் தியாகஞ்செய்தாயே. சிறு வயதிலேயே அப்பாவை இழந்தும் உனக்கென்று இன்னொரு வாழ்க்கையை அமைத்துக்கொள்ளாமல் என் ஒருத்திக்காக இவ்வளவு காலமும் வாழ்ந்தாயே. அப்பா இல்லாத குறையே எனக்குத் தெரியாமல் உன் அணைப்பில் எத்தனை காலம் வளர்ந்தேன். நீயும் நானும் மட்டுமே ஒன்றாக ஓர் உலகமாக வாழ்ந்த அந்த வசந்த காலங்கள் எத்தனைப் பிறவிகள் எடுத்தாலும் தீர்க்க முடியாத கடனல்லவோ நான் உன்னிடம் பட்டது பல நாட்கள் வரை தன் அப்பா இறந்தது பற்றி தன் தாயிடம் அவள் கேட்டதில்லை. அகல்யாவின் பதின்மூன்றாவது வயதில் ஒருநாள் பள்ளிவிட்டு வந்ததும் அம்மா அப்பாவின் படத்தைத் துடைத்து மாலைபோட்டு சிறிது நேரம் படத்தைப் பார்த்தபடியே நிற்பதைக் கண்டாள். ஓ! இன்று சித்திரை மாதம் 3ம் திகதியல்லவா. அப்பா, அம்மாவையும் என்னையும் விட்டுப்போன நாள். அன்று முழுவதும் அம்மா எதுவும் சாப்பிடமாட்டாள். அடுத்த நாள் சனிக்கிழமை பள்ளியில்லை. அப்பாவின் நினைவில் இருந்து அம்மா ஓய்வாக இருந்த நேரம் அகல்யா அம்மாவிடம் கேட்டாள். `அம்மா இங்கே எங்கள் நாட்டுக் காரர்கள் எவ்வளவு பேர் இருந்தும் யாரோடும் ஒட்டாமல் நீயும் நானும் மட்டுமே என்று ஏன் வாழ்கிறோம்? உனக்கென்று சொந்தம் எதுவுமேயில்லையா? ஏன் யாரோடும் தொடர்பில்லை. நான் இன்னும் சின்னப் பிள்ளையில்லை. சொல்லக் கூடாதா?'



அம்மா அவளை ஆழமாகப் பார்த்தாள். பிறகு எங்கோ பார்த்தபடி.

`எல்லாம் உன் அப்பாதான் காரணம்' என்றாள்.

`அப்பாவா?'

`ஆமாம் உன் அப்பா ஒரு மனிதரேயில்லை' அகல்யா திடுக்கிட்டு அம்மாவைப் பார்க்கிறாள். `ஆமாம் அகல்யா, அவர் ஒரு தெய்வம்' அம்மாவின் கண்கள் கலங்கிவிட்டன. தேகம் நடுங்குகிறது. அகல்யா அம்மாவின் தோளைத் தொடுகிறாள். அம்மா அகல்யாவை அணைத்து அவள் நெற்றியில் முத்தமிட்டாள். அகல்யா அம்மாவின் கண்ணீரைத் துடைத்துவிட அம்மா தொடர்கிறாள்.

`நான் அவரோடு ஏழு வருடங்கள்தான் வாழ்ந்தேன். ஆனால் அவரோடு எழுபது வருடங்கள் வாழ்ந்தது போன்ற உணர்வு. அவரோடு நான் வாழ்ந்த நினைவுகளைப் போற்றிப் பாதுகாக்கவும், உன்னை அவர் நினைத்தது போல் வளர்த்து ஆளாக்கவும் எனக்கு சொந்தபந்தமில்லாத தனிமை தேவைப்பட்டது. அதுதான் இனசனமில்லாத இந்த வாழ்க்கை. இதற்காக நான் பட்ட கடன். என்னைத் தூக்கிவிட்ட அந்த நல்லவர்கள்...' அம்மா தன் நெஞ்சில் கைவைத்தபடி வார்த்தைகளைத் தேடுகிறாள்.

`அம்மா. எனக்கு அப்பாவைப் பற்றித் தெரியவேணும்' அகல்யா கேட்டாள்.

`ஆமாம். தெரியத்தான் வேண்டும். சொல்கிறேன். எனக்கும் பாரம் குறையுமல்லவா.?'

அம்மா சொல்கிறாள்.

ஆரம்பத்திலிருந்து சிவாவைச் சந்தித்ததிலிருந்து தொடங்குகிறாள்.

காலை நேரம். ஆறு மணியாகவில்லை. அந்த நேரத்திலும் அலுவலகத் துப்பரவுத் தொழிலாளர்கள் அடித்துப்பிடித்து மெத்ரோ (நிலக்கீழ் தொடருந்து) எடுத்து வேலைக்கு ஓடுகிறார்கள். சிவா மெத்ரோ ஏறுவதற்கும் கதவு மூடுவதற்கான ஒலி எழுப்புவதற்கும் சரியாக இருக்கிறது. திடீரெனத் திரும்பிப் பார்த்தவள் ஒரு பெண் கதவு மூடுவதற்குள் ஏறிவிடவேண்டுமென்றும் ஓடி வருவதைக் காண்கிறான். தமிழ்ப் பெண். என்ன தோன்றியதோ கதவு மூடாதவாறு பிடிக்க அந்தப் பெண் உள்ளே நுழைகிறாள். மூச்சு வாங்கியவாறு மெர்சி (நன்றி) என்று சொன்னவள் கதவுக்குப் பக்கத்தில் உள்ள ஆசனத்தில் அமர்கிறாள். நேர் எதிரான ஆசனத்தில் சிவா ஒரு தடவை தலை நிமிர்ந்தபோது சிவாவும் அவளைப் பார்க்க மெதுவாகப் புன்னகைக்கிறாள். சில நிறுத்தங்கள் வந்தபின் அப்பெண் இறங்கிச்சென்று விடுகிறாள். அடுத்த நாள் அதே நிறுத்தத்தில் அந்தப் பெண் ஏறுகிறாள். அங்கே சிவாவைக் கண்டபோது பார்வைகள் கலக்கின்றன. பார்வையில், சிரிப்பில் தொடர்ந்து தொடங்கி பேசுமளவுக்கு வந்துவிட்டது.

`நான் சிவா. உங்கள் பெயர்?' கேட்டான் சிவா.

`கமலா'

`கமலா. கமலம் என்றால் தாமரை. உங்கள் முகத்திறகுப் பொருத்தமாக இருக்கிறது.'

கமலா நாணினாள்.

`அப்ப விமலா என்றால் என்ன அர்த்தம்?'

`அழுக்கற்றவள் பரிசுத்தமானவள் என்று அர்த்தம்' சரிதான் பெண்களுடைய பெயருக்கு அர்த்தம் நன்றாகத் தெரியும் போலிருக்கிறது

`ஐயையோ. தப்பாக நினைக்க வேண்டாம். படிக்கிற காலத்தில் தமிழ் வாத்தியார் எல்லோருடைய பெயரையுங் கேட்டு அர்த்தம் சொன்னது இன்னும் ஞாபகம் இருக்கிறது. பெயருக்கு அர்த்தம் தெரிவதும் முக்கியம் அல்லவா?'

கமலா சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த பெண். தன் சகோதரனோடு இருந்தாள். இன்னும் இரண்டு சகோதரிகள் ஊரில். அவர்களைக் கரையேற்ற அண்ணனுக்குத் தோள் கொடுக்க வேண்டும். அவனுக்கு நிலையான தொழில் இல்லை. சிவா சொன்னான் `எனக்குப் பொறுப்புக்கள் எதுவும் இல்லை. ஒரேயொரு அக்கா. அவளும் திருமணஞ் செய்தாயிற்று. நான் கை கொடுக்கிறேன்.'

`வேண்டாம்.' கமலா சொன்னாள்.' இன்னும் சில காலம் வேலை செய்தால் எல்லாப் பொறுப்புக்களும் தீர்ந்துவிடும்.' சிவாவுக்கு அவளை நினைத்துப் பெருமிதமாக இருந்தது. இவர்கள் நட்பு அவள் அண்ணன் காதுக்கு எட்டியது. துள்ளிக் குதித்தான். கமலாவைக் கண்டித்தான். அப்பா, அம்மாவுக்குப் பதில் சொல்ல வேண்டிய தன் பொறுப்பைக் கூறினான். ஆயினும் கமலா அசரவில்லை. ஒருநாள் கமலா முகம் வாடியிருந்தாள். சிவா கேட்டபோது தன் கடைசி அக்காளுக்குக் கல்யாணம் நிச்சயம் ஆகிவிட்டது. பணம் அனுப்பவேண்டுமென்று சொன்னாள்.

`நான் தருகிறேன், கடனாக. முடியும்போது திருப்பிக்கொடு' சிவாவுக்கு இப்படிச் சொல்வதைவிட வேறு வழி தெரியவில்லை.

சிவாவின் உதவியோடு தன் சகோதரிக்குச் செய்யவேண்டிய கடமையை நிறைவேற்றி விட்டாள். சிவாவை இப்போது அவள் வேறாக நினைக்கவில்லை. தன் ஆத்மாவோடு ஒன்றிவிட்ட, முடியா பந்தமாகி விட்டான் சிவா. அவருடைய அண்ணன் சிவாவைச் சந்தித்தான். சிவா தான் கமலாவை எந்த அளவுக்கு விரும்புகிறான் என்றும் அவளைக் காலம் பூராவும் கண் கலங்காமல் பார்த்துக்கொள்வான் என்றும் அவளில்லாத வாழ்க்கையை தன்னால் நினைத்துப் பார்க்க முடியாதென்றும் சொன்னான். 'உங்களிடமிருந்து நான் பணமோ பொருளோ எதிர்பார்க்கவில்லை. எனக்கு அவள் மட்டும் போதும்' என்ற அவன் வார்த்தைகள் அவள் அண்ணனிடம் எடுபடவில்லை. தன் அண்ணனுடைய அர்த்தமில்லாத முரட்டுப் பிடிவாதத்திற்காக அவள் சிவாவை இழக்கத் தயாரில்லை. வீட்டிற்கு எழுதினாள். 'நான் உங்களுக்கு ஒரு ஆண்பிள்ளையைப்போல செய்யவேண்டிய கடமைகளைச் செய்திருக்கிறேன். எனக்கென்று என்னையே விரும்புகிற ஒரு இதயத்துக்குத் துரோகம் செய்ய நான் தயாரில்லை. இன்னும் முடிந்த அளவு என் குடும்பத்திற்கு உதவுவேன். ஒருநாள் அவரோடு வருவேன். அப்போது தெரியும் அவர் எப்படியானவர் என்று. அவரை நினைத்துக்கொண்டு இன்னொருவனோடு ஒரு நாள்தானும் வாழ என்னால் முடியாது. என்னை மன்னித்து விடுங்கள்' என்று எழுதினாள். சிவாவின் நண்பர்கள் தங்கள் தங்கையாக நினைத்துத் திருமணஞ் செய்து வைத்தார்கள். ஆகா! அற்புதமான வாழ்க்கை. நெஞ்சம் நிறைந்த கணவன். சிவா தன் மனைவியைத் தலைமேல் தாங்கினான். அவளுக்கு ஏதாவதென்றால் துடித்துப்போவான். அவள் தாயானாள். தன்னைவிட உலகில் யாரும் சந்தோஷமாக இல்லையென்று மகிழ்ந்தான். அகல்யா பிறந்தாள். அழகுப் பிம்பமாக வளர்ந்தாள். சிவா தன் மகளைத் தோள்மீது போட்டுத் தூங்க வைப்பான். உணவூட்டுவான். அவன் உயிராகிப்போனாள் மகள். ஆனந்தம் பொங்க வாழ்ந்தார்கள். இது அந்தக் கடவுளுக்கே பொறுக்கவில்லை.

(மிகுதி அடுத்த வாரம்)




பேர்ண் மாநகரில்

பாசல் ரவி கடை

2004 ற்கான அனைத்து விதமான புதிய ஆடைகளை உங்கள் விருப்பத்திற்கு ஏற்றவாறு மிக மிக மலிவாக பெற்றுக்கொள்ளலாம்.

பஞ்சாபி, டெனிம், சேட், சாறி, T.Shirt, Audio CD வகைகள், மணிக்கூடு அனைத்தும் ஒரே இடத்தில்

தொடர்புகளுக்கு: 076, 272 90 30, 061 272 09 90, 079 356 22 78



பாகம் - 2

22



# வலிகாமம் இருந்து வன்னி வரை

- கவிஞர் நாவண்ணன்

அவரைப் பொறுத்தவரையில் தான் பதவி வகித்திருந்த காலத்தில் இருந்த பொலிஸ் இலாகாவைப் பற்றிய உயர்வான கருத்துக்களையே கொண்டிருந்தார். அரசியல்வாதிகள்தான் இனத்துவேசிகளாக விளங்குகின்றனரே ஒழிய அன்றைய பொலிஸ் இலாக்காவினுள் அந்தத் துவேசம் இருக்கவில்லை. அரச நிறுவனங்களில் மிகவும் தாமதமாக இனத் துவேஷம் ஊடுருவியது பொலிஸ் இலாகாவினுள்ளேதான் என்றார்.

அதற்கு அவர் கூறிய காரணமும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்தது. ‘இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தில் இயங்கிய பொலிஸ் இலாகாவில் பணியாற்றிய மேலதிகாரிகள் எல்லோரும் வெள்ளைக்காரனிடம் பயிற்சி பெற்றவர்கள். எப்படியான சூழ்நிலையிலும் சட்டத்தின் காவலராய் கடமையாற்ற அவர்கள் பயிற்சி பெற்றிருந்தார்கள். இதன் காரணத்தால் பொலிஸ் வட்டாரங்களில் இருந்த உயர் அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் முறைத்துக்கொண்ட சம்பவங்கள் இடம்பெற்றன. தமிழருக்கெதிரான துவேச உணர்வு பொலிஸ் அதிகாரிகளுக்கிடையே இருந்தபடியால்தான் எனக்குக் கிடைத்த பதவி உயர்வுகள் கூட திறமை அடிப்படையிலே வழங்கப்பட்டன.

அப்படியிருந்தும்கூட ஒன்றிரண்டு உயரதிகாரிகள் என்னைத் தங்கள் உறவினர்களுக்குச் சாதகமாகச் செயற்படக் கேட்டபோது நான் மறுத்தேன்.'

அதனால் எனது வளர்ச்சிக்கு அவர்களால் சற்று தாமதம் ஏற்பட்டது. அந்த வேளையில் வேறு சில அதிகாரிகள் என் பக்க நியாயத்திற்காகப் பாடுபட்டதை என்னால் இன்றும் மறக்க முடியவில்லை. இந்தப் பிரச்சினையில்கூட நான் தமிழன் என்பது காரணமாக இருக்கவில்லை. ஆனால் சிங்கள அரசியல்வாதிகளின் இனத்துவேசத்தை நேரடியாகக் காணும் சந்தர்ப்பங்கள் எனக்குக் கிடைத்தன. அவற்றில் ஒரு சம்பவத்தை என்னால் மறக்க முடியாதுள்ளது. ‘தொடர்ந்தும் அவர் தனது சில அனுபவங்களைக் கூறினார்.

‘1956ஆம் ஆண்டு அவர் வெலிப்பனையில் இருந்தார். அந்த ஆண்டில்தான் ‘சிங்களம் மட்டும்’ என்ற சுலோகத்தின் கீழ் பண்டாரநாயக்கா தேர்தல் களத்தில் குதிக்கின்றார். வெலிப்பனை அவரது கடமைக்குட்பட்ட பகுதியாகையால் அவர்தான் தேர்தல் கூட்டங்களின் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருந்தார்.

`அன்று சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் பிரச்சாரக் கூட்டம். பண்டாரநாயக்க தனது சூறாவளிப் பிரச்சாரத்தை ஊரூராக செய்துகொண்டு வருகின்றார். அவருக்கு என்றே உறங்கல் இருக்கையோடு' கூடிய சொகுசு வாகனம். ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அதிலேயே அவர் பிரச்சாரப்பயணம் செய்கின்றார். ஓய்வின்றி ஒரே நாளில் பல இடங்களில் சங்கிலித்தொடரான பிரச்சாரம் ஊரூராகச் சென்று செய்துகொண்டிருக்கும் அவர் அதே சொகுசுவண்டியில் அன்றுமாலை வெலிப்பனைக்கு வருகின்றார். அந்தக் கூட்டத்திற்கும் அவரே பாதுகாப்புக்களைச் செய்திருந்தார்.

‘இறுதியில் மாத்தறையில் பிரச்சாரக் கூட்டத்தை முடித்துக்கொண்டு மாலை ஆறுமணிக்கு வெலிப்பனைக் கூட்டத்தில் கலந்துகொள்வதாக அவரது நேர அட்டவணை தயாரிக்கப்பட்டிருந்தது.

‘ஊரே’ திருவிழாக்கோலம் பூண்டிருந்தது. எங்கும் நீலமயம். பிரதான வீதியில் இருந்து கூட்டம் நடைபெறவிருந்த மேடைவரையில் நீலக்கொடிகள், வர்ணவிளக்குகள், வளைவுகள் என்று கண்கவர் அலங்காரங்கள். அன்று பிற்பகலே மக்கள் வந்து திரளத் தொடங்கினர். ஆனால் அவர்கள் போட்டிருந்த அட்டவணையின்படி பண்டாரநாயக்க ஆறு மணிக்கு வந்து சேரவில்லை. வந்துகொண்டிருக்கிறார், வரப்போகின்றார் என்ற அறிவித்தல்களே வந்துகொண்டிருந்தன.

‘நேரம் மாலை ஏழு மணியாகிவிட்டது, வரவில்லை. நேரம் மாலை எட்டுமணியானபோது அவரது ஆடம்பர வாகனத்தில் பண்டாரநாயக்க வந்துசேர்ந்தார். மக்களிடையே பரபரப்பும், சுறுசுறுப்பும். மாலைகளும் கைகளுமாக நான் முந்தி நீ முந்தி என்று வரவேற்பாளர்கள் முண்டியடித்துக்கொண்டு நின்றனர். அவரைப் பிரதான வீதியில் இருந்து ஊர்வலமாக அழைத்துச் செல்ல மக்கள் அணிவகுத்து நின்றனர்.

ஊர்வலம் ஆரம்பமாக வேண்டிய பிரதானவீதியில் அமைந்த வளைவில் அவரது வாகனம் வந்து நின்றது. வாகனத்தின் கதவு திறந்தது. பண்டாரநாயக்க அங்கு காட்சி தந்தார். வழக்கமாக அவர் அணியும் வெள்ளையுடையுடன் நீலச் சால்வை சகிதம் அதோ சிங்கள இனத்தின் இரட்சகன் காட்சிதந்தார். வாழ்த்தொலிகள் வானைப் பிளந்தன. வாகனத்தை விட்டிறங்காமல் கைகூப்பியபடி நன்றியைத் தெரிவித்துக்கொண்ட அவர், மக்கள் அமைதி பேணும் வரை காத்து நின்றார். பின்னர் பேசினார்.

`நீங்கள் எல்லோரும் என்னை மன்னிக்க வேண்டும். நான் இந்த இடத்தில் நின்றபடியே இரண்டே இரண்டு வார்த்தைகள் உங்களிடம் பேசிவிட்டு விடை பெறப் போகின்றேன். அங்கு மேடை மட்டும் வந்து பேசுவதற்கு என்னால் முடியாது. என்கால்களில் சுகமில்லை' என்றார்.


எத்தனையோ எதிர்பார்ப்புகளுடன் நின்ற மக்கள் முகங்களில் மாற்றம், ஏமாற்றத்தின் சோர்வு, அவருக்கு அண்மித்து நின்ற வெலிப்பன ஆதரவாளர்களில் ஒருவனான இளைஞன்.

`அப்படியென்றால் நான் உங்களை என் தோள்களில் சுமந்து கொண்டுபோகின்றேன் ஹாமத்துறுனி' என்று கூறியபடி அவரருகே சென்று குனிந்தான்.

அவ்வளவுதான் மறுகணம் பண்டாரநாயக்கவின் சுயரூபம் வெளிப்பட்டது. தன் அருகே வந்த அந்த இளைஞனின் நெஞ்சில் முழங்கையால் பலத்த இடி கொடுத்தார். அந்த எதிர்பாராத தாக்குதலைச் சமாளிக்க முடியாத இளைஞன் தடுமாறியபடி சற்றுத்தள்ளி தரையில் விழுந்தான். அதைத் தொடர்ந்து, நடக்கவே முடியாத அளவுக்கு தனது காலில் சுகமில்லையென்று கூறிய பண்டாரநாயக்க தனது வாகனத்தில் இருந்து ஒரே எட்டாக விழுந்துகிடந்த இளைஞனுக்கண்மையில் பாய்ந்தார். `தோ தண்ணுவாத மம கவ்த கியலா' (அடேய் நான் யாரென்று உனக்குத் தெரியுமாடா) என்று அவனைப் பார்த்துக் கர்ச்சித்தார்.

அந்த வார்த்தைகளின் வெளிப்பாடு என்ன?

பண்டாரநாயக்க படித்தவர் என்பதா? தான் ஒரு



பண்டாரநாயக்கா

நிலப்பிரபுத்துவப் பரம்பரையினனஅ என்பதா? அல்லது உயர்வர்க்கச் சிங்களவன் என்பதா? அல்லது எதிர்காலப் பிரதமர் என்பதா?

அவனருகே பாய்ந்து கர்ச்சித்த வேகத்தில் மீண்டும் நடந்துவந்து தனது வாகனத்தில் ஏறிய பண்டாரநாயக்கா. தனது இனவாதத்தைக் கக்கினார். ‘உங்களிடம் நான் இரண்டே இரண்டு வார்த்தைகளை மட்டும் பேசிவிட்டுப் போகிறேன். உங்களுக்குத் தமிழ் வேண்டுமென்றால் யூ.என்.பிக்கு வாக்களியுங்கள். சிங்களம் மட்டும் வேண்டும் என்றால் எனக்கு வாக்களியுங்கள்’.

அவர் பேசியது இரண்டே வார்த்தைகள்தான். அவை இரண்டும் பச்சை இனவாதம் கக்கின. அந்தக் கூட்டத்துக்குள் தமிழரும் இருந்தனர். அவர்களில் இவரும் ஒருவராக நின்றார். அவரது கடமை, பாதுகாப்பு அளிப்பது மட்டுமே. அதனை அவர் செய்துகொண்டிருந்தார்.

பண்டாரநாயக்காவின் இனவாதம் இதுவென்றால். யு.என்.பி.இன் இனவாதம் அதற்குச் சற்றும் குறைவானதல்ல. அதே இடத்தில், அதே தேர்தல் பிரச்சாரத்துக்கா யு.என்.பி. கட்சியின் வேட்பாளர் சில நாட்களின் பின்னர் சேர் ஜோன் கொத்தலாவல வந்தார்.

நீலக் கட்சிக்குத் தாம் சளைத்தவர்கள் அல்ல என்பதைக் காட்டும் வகையில் பச்சைக் கட்சிகளின் ஏற்பாடுகள் அமைந்திருந்தன. பண்டாரநாயக்காவைப் போலல்லாது சேர் ஜோன் கொத்தலாவல குறிப்பிட்டபடி மாலை



ஜோன் கொத்தலாவல

ஆறு மணிக்கே வந்துவிட்டார். ஆர்ப்பரிப்புகள், மாலை மரியாதைகள், வரவேற்புகள் பச்சைச்சட்டை அணிந்தவராக வந்த அவர், கைகளைக் கும்பிட்டு வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டார்.

பிரதான வீதியில் இருந்து ஆரம்பித்த ஊர்வலம் மேடையை நோக்கி நகர்ந்தது. ஊர்வலத்தில் அவர்களுக்கு முன்னே கண்டி நடனம் ஒரு புறமும், மறுபக்கம் கரகநடனமும் ஆடியபடியே கலைஞர்கள் சென்று கொண்டிருந்தனர். பொலிஸ் அதிகாரி தேவசகாயம் சேர் ஜோன் கொத்தலாவலக்கு அண்மையிலே வந்துகொண்டிருந்தார்.

கண்டிய நடனத்தைப் பார்த்து இரசித்துக்கொண்டு வந்த சேர் ஜோன் கொத்தலாவல, மறுபக்கத்தில் ஆடியபடி வந்துகொண்டிருந்த கரகாட்டக் கலைஞனைப் பார்க்கின்றார். அக்கலைஞன் தன் முழுத்திறனையும் காண்பித்து ஆடிக்கொண்டு வருகின்றான். அக்கலைஞன் ஒரு மலையகத் தமிழன். அவனைப் பார்த்த சேர் ஜோன் கொத்தலாவல தனக்குப் பக்கத்திலே வந்துகொண்டிருந்த பிரமுகரிடம் கேட்கிறார். ‘இஸ் ஹி ஏ கள்ளத்தோணி’ (இவன் ஒரு கள்ளத்தோணியா?) அவருடைய இந்த வார்த்தைகள் பக்கத்தில் வந்து கொண்டிருந்த பொலிஸ் அதிகாரியான இவரின் காதுகளில் விழத்தான் செய்கின்றன.

அந்த வார்த்தைகளைச் சொல்லக்கேட்டபோது பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுக்கொண்டு நின்ற அவருக்கு ஆத்திரமாகவும் அவமானமாகவும் இருக்கவே செய்தது.

கரகம் என்பது எவ்வளவு நுணுக்கமான தமிழரின் பாரம்பரியக் கலை. அந்தக் கலையையோ, அதன் பெருமையையோ உணராமல் அந்த கலைஞனை, ‘கள்ளத்தோணியா’ என்ற அவரது அறியாமையை, அல்லது துவேஷத்தை வெளிக்காட்டுவதாக அவருக்குத் தோன்றியது. ஆனாலும் அந்த இடத்தில் அவர்களுக்கு பாதுகாப்புக் கொடுப்பதே அவர் கடமை. தன் உணர்வுகளை அடக்கிக்கொண்டார்.

அவர் இந்தச் சம்பவங்களைக் கூறிக் கொண்டிருந்தபோது, அன்றைய தமிழரசுக்கட்சிக் கூட்டங்கள் பருத்தித்துறை பாராளுமன்ற உறுப்பினர் துரைரெத்தினம் அவர்கள் கூறிய உதாரணம் ஒன்றுதான் என் நினைவுக்கு வந்தது.

`தமிழனைப் பொறுத்தவரையில் யு.என்.பி. உம், சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் ஒன்றுதான். சிறீலங்கா சுதந்திரக் கட்சி சீறிக் கொத்தும் நாகபாம்பு. யூ.என்.பி. பதுங்கிக் கடிக்கும் புடையன்பாம்பு. நாகபாம்பு கொத்தும் முன்பே தெரியும், ஆனால் புடையன்பாம்பு தீண்டியபின்புதான் தெரியும். இரண்டும் கொடிய விசங்கள்தான்.'

துரைரெத்தினம் அவர்களின் இந்த உதாரணங்களுக்கு இங்கே பண்டாரநாயக்காவும், சேர் ஜோன் கொத்தலாவலவும் பொருத்தமாக இருப்பதை கண்டேன்.

(தொடரும்)




# தகவல் முற்றம்

- யூதர்களின் புனித நூலாகக் கருதப்படுவது `தோரா' எனப்படும் நூல்.
- ஜஸ்கட்டி சாப்பிடும்போது லேசாக கண்வலி வருவதை உணர்ந் திருக்கிறீர்களா?! பல் நரம்புக்கும் கண் நரம்புக்கும் தொடர்பு இருப்பதால்தான் இந்த வலி.
- ஒரு குயர் காகிதம் என்பது இருபத்துநான்கு தாள்கள் அடங்கி யது. உலகிலேயே அதிக அளவு காகிதம் உற்பத்தி செய்யும் நாடு கனடா.
- நொபேல் பரிசு பெற்ற முதல் இந்தியர் ரவீந்திரநாத் தாகூர்.
- திரவங்களின் அடர்த்தியைக் கண்டுபிடிக்கும் கருவியின் பெயர் ஹைட்ரோமீட்டர்.
- பைபிளை முதன் முதலில் தமிழில் மொழி பெயர்த்தவர் சீகன் பால்க ஐயர்.
- மரபியலின் தந்தை என்று அழைக்கப்படுபவர் கிரிகர் மெண்டல். தாவரவியல் துறையில் இவரது `மரபியல் வாய்ப்பாடு' மிகவும் பிரபலம்.
- செம்புடன் தகரத்தைக் கலக்கும்போது வெண்கலம் உருவாகிறது.
- விலாங்கு மீனால் மின் அதிர்ச்சியை ஏற்படுத்த முடியும்.
- மிளகு விளைச்சலுக்குப் பழங்காலத்திலிருந்தே புகழ்பெற்ற இடம் கேரளா. பண்டைய காலத்தில் ரோமானியர்களுடன் வணிகத் தொடர்பு வைத்திருந்தபோது பண்டமாற்று முறையில் தங்கத்தைக் கொடுத்து மிளகு வாங்கிச் சென்றுள்ளனர்.
- செடி-கொடிகள், சூரிய ஒளியைப் பெறுவதற்காகத்தான் மேல் நோக்கி வளர்கின்றன. அவை உணவு தயாரிக்க ஒளி தேவை யல்லவா!
- செவ்வந்தியர்கள் என அழைக்கப்படுபவர்கள் அமெரிக்காவின் ஆதி மனிதர்கள். கொலம்பஸ் அமெரிக்காவை `இந்தியா' என்று நினைத்ததால் அவர்களை `செவ்விந்தியர்' என்று அழைத்தார்.
- நிறங்களால் நம் மனதில் மாற்றங்களை உண்டுபண்ண முடியும். சிவப்பு, கோபத்தை உருவாக்கும். பளபளப்பான மஞ்சள் சோம் பலை உண்டுபண்ணும். ஆரஞ்சு நிறத்தால் மகிழ்ச்சியும் மன அமைதியும் கிடைக்கும்.
- முட்டையில் வெள்ளைக் கரு, மஞ்சள் கரு இரண்டும் இருப்பது உங்களுக்குத் தெரியும். அதில் வெள்ளைக் கரு ஜம்பத்தெட்டு சத விகிதமும், மஞ்சள் கரு நாற்பத்திரண்டு சதவிகிதமும் இருக்கும்.
- பூஞ்சைகள் பற்றி ஆராயும் தாவரவியல் பிரிவின் பெயர் மைக் காலஜி
- கடல் ஆழத்தைக் கண்டுபிடிக்க உதவும் சாதனம் - சோனார்.
- கோல்ஃப் விளையாட்டு தோன்றிய நாடு ஸ்கொட்லாந்து.

# கதை முற்றம்

## தகுதியற்ற நட்பு

பசு மாடொன்று, ஒரு வெள்ளாடு, ஒரு செம்மறி ஆடு ஆகிய மூன்றும் ஒருநாள் சிங்கம் ஒன்றுடன் வேட்டையாடச் சென்றன. ஒரு மான் இரையாக அகப்பட்டது. அவை அந்த மானைப் பங்குபோடத் தொடங்கிய பொழுது சிங்கம் பின் கண்டவாறு சொன்னது.



`நண்பர்களே முதலாவது பங்கு எனக்குரியது. ஏனென்றால் நான் உங்கள் எஜமான், இரண்டாவது பங்கும் எனக்குத்தான். ஏனென்றால் நான் உங்களி லும் பார்க்கப் பலசாலி. நான் உங்களிலும் பார்க்க வேகமாக ஓடுபவனாதலால் மூன்றாவது பங்கும் எனக்குரியதுதான். நான்காவது பங்கை எவன் தொடுகின்றானோ அவன் எனது ஜென்ம விரோதி' என்று கூறி அனைத்தையும் தானே எடுத்துக் கொண்டது சிங்கம்.

## அவா

ஒவ்வொரு நாளும் வெள்ளி முட்டை ஒன்றை இடுகின்ற ஒரு கோழி ஒரு பெண்ணிடமிருந்தது. `அதுக்கு நான் கூடச் சாப்பாடு கொடுத்தால் அது தினமும் இரண்டு வெள்ளி முட்டைகளை இடும்' என்று அப் பெண் தனக்குள் கூறிக்கொண்டாள். இதனால் அவள் கோழிக்கு அதிகளவு சாப்பாட் டைக் கொடுத்தாள்.. கூடுதலான சாப்பாட்டைச் சாப்பிட்டதனால் கோழிக்குக் கொழுப்பு மிதமிஞ்சிய துடன் அது செத்துவிட்டது.



## கடந்தவார புதிருக்கான பதில்



# மருத்துவ மேதைகள்!



↑ இங்கிலாந்து மருத்துவர் எட்வர்ட் ஜென்னர் 1796–ல் பெரியம்மைக்கு தடுப்பூசி கண்டுபிடித்தார். பலத்த எதிர்ப்புகள் எழுந்தாலும் பயப்படாமல் பயன்படுத்தினார். இன்று அது உயிர்காக்கும் தடுப்பு மருந்துகளில் ஒன்று!

கிரேக்க மருத்துவர் கலேன் (கி.பி. 130–201) அரச குடும்பத்தினருக்கும் மக்களுக்கும் மருத்துவம் செய்தவர். இவர் ஆராய்ந்து எழுதிய மருத்துவக் குறிப்புகள் 1500 ஆண்டுகளுக்குப் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன.





→ கி.மு. 1500–ல் பண்டைய எகிப்தில் நோயாளிக்குச் சிகிச்சையளிக்கப்படும்போது மதகுருமார்கள் மந்திரம் சொல்லுவார்கள். எகிப்திய மருத்துவமுறை 2500 ஆண்டுகள் பின்பற்றப்பட்டிருக்கிறது.

# அறிஞர் முற்றம்

## கவிஞர் யாழ்ப்பாணன்

ஈழத்துக் குழந்தை இலக்கிய முன்னோடிகளில் என்னுள்ளம் கவர்ந்த மற்றொருவர் கவிஞர் யாழ்ப் பாணன் என்றழைக்கப்படும் (அமரர்) வே. சிவக் கொழுந்து ஆவார். யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள புலோலி என்னும் ஊரில் வியாபாரி மூலை என்னும் கிராமத்தைச் சேர்ந்தவர். சிறந்த தமிழா சிரியர், அதிபராகப் பின்னர் பதவி வகித்தவர். கணித பாடத்திற் கைதேர்ந்தவர். பல்வேறு பாட நூல்களின் ஆசிரியர். தமது நூல்களை வெளியி டுதற்காகவே தனியாக அச்சகம் அமைத்து உழைத்தவர். குழந்தைப் பாடல்களை மட்டுமன்றிச் சிறந்த பல கவிதை நூல்களையும் படைத்தவர்.

பாலர் கீதம், கண்ணன் பாட்டு, கவிதைக் கன்னி, மாலைக்கு மாலை போன்ற நூல்கள் பல இவரது புலமைத் திறனுக்குச் சான்றாகும். பல் லாண்டு காலம் ஆசிரியப் பணியில் ஈடுபட்டு ழைத்தமை காரணமாகக் குழந்தைகளின் மன இயல்புகளை நன்கு புரிந்துகொண்டவர். இவரது குழந்தைப் பாடல்களில் இதனை நாம் நன்கு காணலாம். குழந்தை ஒன்று தனக்குக் கிடைத்த பொம்மை ஒன்றை வைத்துக்கொண்டு பாடுவதாகக் கவிஞர் பாடுகிறார்.

எனது பொம்மை
தோழா! எனக்கொரு பாப்பா உண்டு
தொட்டில் தானதன் வீடாகும்
விழாமல் அதனை அணைத்திடுவேன் - நான்
விளையாட்டெல்லாம் காட்டிடுவேன்.

கையைக் கையை ஆட்டுமடா - அது
காலை மடக்கி நீட்டுமடா
பையமெல்ல அடியெடுத்து -அது
பாரினில் நடந்து உலவுமடா

புத்தகந் தன்னைக் கிழிக்குமடா - அது
இன்பக் கதைகள் உரைக்குமடா
சின்னக் கையால் அடிக்குமடா -அது
சேர்த்துப் பின்னர் அணைக்குமடா.

சின்னக் குழந்தையின் செயல்களை வெகு நுட்பமாகக் கவிஞர் பொம்மையின் செயல்களாகப் பாடியுள்ளமை அவரது கூர்ந்து அவதானித்துணரும் ஆற்றலை நன்கு வெளிப்படுத்துகிறது. பொம்மை குறித்த என்தனை பாடல்கள் வந்த பின்னரும் இப் பாடல் இன்றும் குழந்தைகளின் நாவில் நடமிடு வதைக் காணும்போது கவிஞர் யாழ்ப்பாணனின் கவியாற்றலை நாம் போற்றாதிருக்க முடியாது.

# இந்து முறைப்படி பெண்ணையே திருமணம் செய்த பெண்



அமெரிக்காவில் வசிக்கும் இரு இந்தியப் பெண்கள், ஒருவரை ஒருவர் இந்து மதச் சம்பிரதாயப்படி திருமணம் செய்து கொண்டுள்ளனர். அமெரிக்காவில் வாஷிங்டன் மாகாணம் கிங் கவுண்டியில் வசிப்பவர்கள் மாலா நாகராஜனும் வேகா சுப்பிரமணியமும். இந்தியாவைச் சேர்ந்த இந்த 2 பெண்களும் அமெரிக்காவில் வேலை பார்க்கிறார்கள். அவர்கள் இருவரும் சமீபத்தில் இந்து மத வழக்கப்படி அய்யரை வைத்து அக்னி வளர்த்து திருமணம் செய்து கொண்டனர். திருமணத்தின்போது இருவரது குடும்பத்தினரும் கலந்து கொண்டனர்.

திருமணத்துக்கு முதல் நாள்தான் இந்த திருமணம் பற்றியே மாலாவும், வேகாவும் தங்கள் பெற்றோரிடம் தெரிவித்தனர். திருமணம் முடிந்த பிறகு, என் உறவினர்களுக்கு இந்தத் திருமணத்தைப் பற்றி என் தாயார் தெரிவித்தார் என்கிறார் மாலா. மாலாவின் தந்தை அவரது உறவினரிடம் பேசும்போது, "நம் குழந்தைகள்தான். ஆனால் அவர்கள் தலைக்கு மேலே வளர்ந்து விட்டனர். அவர்கள் செய்வது தவறு என்று தெரிகிறது. வளர்ந்து பக்குவம் அடைந்தவர்களைக் கண்டிக்க முடியவில்லை. அதற்கு நமக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? அவள் தவறு செய்தாலும் என் குழந்தை; அவளிடம் அன்பு செலுத்துகிறேன்" என்று கூறினார். மாலாவும் - வேகாவும் இந்த திருமணத்தைச் சட்டப்படி பதிவு செய்து கொள்ள முயன்றனர். இதற்கு அமெரிக்க அரசு அனுமதி மறுத்துவிட்டது. இதை எதிர்த்து இவர்கள் வழக்குத் தொடர்ந்துள்ளனர்.


# நாய்க்கு ஆங்கிலம் தெரியாததால் பிரெஞ்சு மாணவன் பாதிப்பு

நாய்க்கு ஆங்கிலம் தெரியாததால் மாணவன் ஒருவன் பாதிக்கப்பட்ட சம்பவம் கனடாவில் இடம்பெற்றுள்ளது. கனடா கியூபெக் மாகாணத்தைச் சேர்ந்த பிரெஞ்சு மாணவர் இவான் டெசீர். கண் பார்வை இல்லாத இவருக்கு உதவியாக ஒரு நாய் இருக்கிறது. இந்த வழிகாட்டி நாய்க்குப் பிரெஞ்சு மொழியில் கட்டளையிட்டால்தான் புரியும். ஆங்கிலத்தில் கட்டளையிட்டால் புரியாது. இவான் டெசீர் நிந பிரன்ஸ்விக் பல்கலைக்கழக ஆங்கில வகுப்பில் ஆங்கிலம் படிப்பதற்காகச் சேர்ந்தார்.

5 வாரம் நடக்கும் அந்த வகுப்பில் எப்போதும் ஆங்கிலத்தில் மட்டுமே பேச வேண்டும். நாய்க்கு ஆங்கிலத்திலேயே உத்தரவிட வேண்டும் என்பது வகுப்பின் விதிமுறை ஆகும். ஆனால் நாய்க்கு ஆங்கிலம் புரியாது என்பதால், அவர் பிரெஞ்சு மொழியில் நாய்க்கு உத்தரவு போட்டார். இதனால் அவர் ஆங்கில வகுப்பில் இருந்து வெளியேற்றப்பட்டார். தற்போது இதுகுறித்து மனித உரிமைகள் அமைப்பில் முறைப்பாடு செய்துள்ள மாணவன் இதற்கு எதிராக வழக்குத் தொடரப்போவதாகக் கூறினார்.

# பலதும் பத்தும்





# மகா மேளம்

சீனாவின் ஷான்ஷி மாநிலத்தில் 3.43 மீற்றர் விட்டம் உடைய மத்தளம் ஒன்று வைக்கப்பட்டுள்ளது. உள்ள இம் மத்தளம் உலகில் உள்ள மிகப்பெரிய மத்தளங்களில் ஒன்றாக கணிக்கப்பட்டுள்ளது. இதன் நிறை 1,800 கிலோ. 'வென்டியன் கூ' என பெயரிடப்பட்டுள்ள இம் மத்தளத்தை, பார்வையாளர்கள் தட்டிப் பார்கின்றனர். பெண் ஒவர் துள்ளியெழுந்து அடிப்பதையே படத்தில் காண்கிறீர்கள்.



கோடை வெயில் என்றால், இவருக்கும் குளிரான 'ஐஸ் கிறீம்' கேட்கிறதோ..?


## மணல் சிற்பத் திருவிழா


ஜேர்மனியின் லீபெக் நகரில் சர்வதேச மணல் சிற்பக் கண்காட்சி கடந்த 9ம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இக்கண்காட்சியில் 75 நாடுகளின் மணல் சிற்பக் கலைஞர்கள் தங்கள் திறமைகளைக் காட்டியுள்ளனர். கண்கவரும் வகையில், உலகின் பல்வேறு அதிசயங்களையும், சிற்பங்களையும் ஒரே இடத்தில் பார்வைக்கு கொண்டுவந்துள்ள இக் கலைஞர்களின் வடிவங்களில் இருந்து ஒருசில...


# வீதியில் இறங்கிய விமானம்!



லெபனான் பெய்ரூட் பகுதியில் உள்ள பிரதான வீதியில் விமானம் ஒன்று அவசரமாக தரையிறங்கியுள்ளது. தனியாருடைய இந்த விமானத்தை செலுத்தி வந்த பயிற்சி மாணவர், விமானத்தில் தீடீரென ஏற்பட்ட தொழில்நுடபக் கோளாறினால் அவசரமாக வீதியில் தரையிறக்கவேண்டிய நிலை ஏற்பட்டதாகக் கூறியுள்ளார்.





IMPORTAS Asian Groceries

- Importers, Distributors & Wholesalers of **Kings, Niru, Suryaa, TRS, GFT**

உங்கள் வியாபார ஸ்தாபனங்களுக்குத் தேவையான இலங்கை, இந்திய, தாய்லாந்து உணவுப் பொருட்களுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

| | | | |
|---|---|---|---|
| பறோட்டா | 36X375 | 1.00 | ஈரோ |
| Family பறோட்டா | 24X750 | 1.80 | ஈரோ |
| பாலப்பம் | 30X400 | 1.30 | ஈரோ |
| மசாலாதோசை | 30X400 | 1.30 | ஈரோ |
| இட்டலி சாம்பார் | 30X500 | 1.40 | ஈரோ |
| சப்பாத்தி | 36X400 | 1.10 | ஈரோ |
| பூரி மசாலா | 30X500 | 1.50 | ஈரோ |
| சென்ன பட்டுரா | 30X500 | 1.50 | ஈரோ |

Tobeleackerstrasse 4, 8212 Neuhausen Tel: + 41 52 672 28 38Fax: + 41 52 228 67 45

சி.புவனேஸ்வரன் (குஞ்சன்) S.J.N. Imports
Tel: 0049 -24625557

# வெற்றிக் கிண்ணத்துடன் நாடு திரும்பிய வீரர்களுக்கு பல்லாயிரக் கணக்கான கிரீஸ் இரசிகர்கள் மிகப்பெரும் வரவேற்பு



போர்த்துக்கல்லில் நடைபெற்ற ஐரோப்பிய கால்பந்து (யூரோ 2004) போட்டியில் வெற்றிக் கிண்ணத்தை வென்று நாடு திரும்பிய கிரீஸ் அணிக்கு ஆயிரக் கணக்கான இரசிகர்கள் கூடி பிரமாண்ட வரவேற்பளித்தனர். கிரீஸ் அணியைச் சேர்ந்த 23 வீரர்களும், அணியின் பயிற்சியாளர் ஓட்டோ ரெகாஜெலும் ஏதென்ஸ் திரும்பினர். ஏதென்சில் உள்ள பிரபலமான ஒலிம்பிக் ஸ்டேடியத்தில் கிரீஸ் அணி வீரர்களுக்கு பாராட்டு விழா நடத்தப்பட்டது. சுமார் 35000ற்கும் மேற்பட்ட இரசிகர்கள் கூடி கிரீஸ் அணிக்கு பிரமாண்ட வரவேற்பளித்தனர்.

அணியின் கப்டன் ஷகோராகிஸ் ஸ்ரேடியத்தில் ஐரோப்பிய கால்பந்து சாம்பியன் கிண்ணத்தை உயர்த்திப் பிடித்த போது இரசிகர்களின் ஆரவாரம் விண்ணைப் பிளந்தது. இரசிகர்கள் அனைவரும் கிரீஸ் நாட்டுக் கொடியையும், கொடியில் உள்ள வெள்ளை, நீல நிறத்திலான ஆடையையும் அணிந்திருந்தனர். கிரீஸ் அணியின் பயிற்சியாளரான ஜேர்மனியைச் சேர்ந்த ஓட்டோ ரெகாஜெலையும் வாழ்த்தி கோசமிட்டனர். அணி வீரர்கள் ஒவ்வொருவரும் கிண்ண-த்தை தூக்கி காண்பிக்கும்போதும் இரசிகர்கள் வாழ்த்தி கோசமிட்டனர். பாராட்டு விழா நடைபெற்ற அரங்கைச் சுற்றியும் ஏதென்ஸ் தெருக்களிலும் இரசிகர்கள் ஏராளமாக குவிந்திருந்தனர். இந்தப் பாராட்டு விழா சுமார் 2 மணி நேரம் நடைபெற்றது.

முன்னதாக, போர்த்துக்கல்லில் இருந்து சிறப்பு விமானம் மூலம் லிஸ்பன் வந்து இறங்கியவுடன் விமான நிலையத்தில் கூடியிருந்த இரசிகர்களின் ஆரவாரம் அடங்க நீண்ட நேரம் பிடித்தது. ஏதென்ஸ் விமான நிலையத்தில் இருந்து வீரர்கள் சிறப்பு பேருந்து மூலம் அழைத்து வரப்பட்டனர். இரசிகர்கள் வெள்ளத்தில் பேருந்து மிதந்து வந்தது. வீரர்கள் வந்த பேருந்துக்கு முன்பு கார்களிலும், மோட்டார் சைக்கிள்களிலும் இரசிகர்கள் ஏராளமானோர் வாழ்த்து கோசமிட்டபடி சென்றனர்.



அரங்கில் நடைபெற்ற பாராட்டு விழாவில் கிரீஸ் பிரதமர் காஸ்டாஸ் ரோமான்லிங், ஏதென்ஸ் மேயர் டோரா பாகோயியான்னிங் ஆகியோர் கலந்து கொண்டனர். உலகத்தில் மூலை முடுக்குகளில் இருக்கும் கிரீஸ் நாட்டினர் அனைவரும் பெருமைபடக்கூடிய நேரம் இது. சர்வதேச அளவில் அனைவரது உதட்டிலும் உச்சரிக்கப்படுகிற வார்த்தையாக, கிரீஸ் உள்ளது. இந்த மகிழ்ச்சி ஒலிம்பிக்கிலும் தொடரும் என்று ரோமான்லிங் கூறினார்.




## ரூனியை ஒப்பந்தம் செய்யுமளவிற்கு பணவசதி இல்லை!

இங்கிலாந்து கால்பந்து அணியைச் சேர்ந்த முன்னணி இளம் வீரரும், வெர்டன் அணியைச் சேர்ந்தவருமான வேய்ன் ரூனியை ஒப்பந்தம் செய்து கொள்ளும் முயற்சிகளை மான்செஸ்டர் யுனைட்டெட் எடுக்காது என்று அந்த அணியின் தலைமை நிர்வாகி டேவிட் கில் கூறியுள்ளார். ஏனெனில், ரூனியை ஒப்பந்தம் செய்ய மிகப் பெருந்தொகை செலவாகும் என்றும், அதற்கு தாங்கள் தயார் இல்லை என்றும் கில் தெரிவித்துள்ளார். `ஒரு வீரருக்காக பல நூறு கோடிக்கணக்கான டொலர்களை செலவழிக்க முடியாது' என்றும் கில் தெரிவித்தார்.

`வேய்ன் ரூனியின்' விலைமதிக்க முடியாத திறமை என்ன என்பதை யூரோ 2004 போட்டி மூலம் கால்பந்து உலகம் புரிந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. இந்தப் போட்டியில் இங்கிலாந்து அணிக்காக 4 கோல்களை ரூனி அடித்தார். இதன் மூலம் வேய்ன் ரூனியின் மதிப்பு பல நூறு கோடி டொலர்களுக்கு உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஆசிய விளையாட்டுப் போட்டியில் கிரிக்கெட், செஸ் இடம்பெற ஏற்பாடு

ஆசிய விளையாட்டுப் போட்டி வரலாற்றில் முதன் முறையாக கிரிக்கெட், செஸ் விளையாட்டுகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. ஆசிய விளையாட்டுப் போட்டிகள் 2006ம் ஆண்டு கட்டாரின் தலைநகர் டோஹாவில் நடைபெறவுள்ளன. இந்தப் போட்டியில் கிரிக்கெட், செஸ் விளையாட்டுகள் சேர்க்கப்படவுள்ளன.

இந்தத் தகவலை இந்திய ஒலிம்பிக் சங்க மற்றும் ஆசிய ஒலிம்பிக் சபை தெரிவித்துள்ளது.

கடந்த முதலாம் திகதி நடைபெற்ற ஆசிய ஒலிம்பிக் சபையின் பொதுக்குழு கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 2006ம் ஆண்டு நடைபெறவிருக்கும் ஆசிய விளையாட்டுப் போட்டி டிசம்பர் 1ம் திகதி முதல் 15ம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதில் 40 பிரிவுகளில் போட்டிகள் நடைபெறவுள்ளன. இந்தக் காலகட்டத்தில் சர்வதேச கிரிக்கெட் சபை அட்டவணையின் அடிப்படையில் ஆசியாவில் இருக்கும் முன்னணி கிரிக்கெட் அணிகள் ஆசிய விளையாட்டுப் போட்டியில் பங்கேற்பது நிர்ணயிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரெனிஸ் விம்பிள்டன்

பெண்கள் ரெனிஸ் உலகில் இவ்வாண்டு ரஷ்யாவிற்கு தனியிடம் உண்டு என்றே கூறவேண்டும். கடந்த மாதம் பிரான்ஸ் கிறான்சலத்தை வென்று முதலாவது கிறான்சலம் வென்ற ரஷ்யவீராங்கனை என்ற பெருமையைப் பெற்ற அனஸ்ரசியா மிஸ்கினாவைத் தொடர்ந்து, கடந்த வாரம் முதலாவது விம்பிள்டன் கிறான்சலம் வென்ற ரஷ்ய வீராங்கனை என்ற உயர் நிலையை 17 வயதுடைய மறியா சறப்போவா பெற்றுக்கொண்டார். கடந்த நான்கு ஆண்டுகளாக விம்பிள்டன் பெண்கள் கிண்ணத்தை தமதாக்கிக்கொண்ட வில்லியம்ஸ் சகோதரிகளின் (2000, 2001-வெனுஸ் வில்லியம்ஸ், 2002, 2003 செறினா வில்லியம்ஸ்) தொடர் வெற்றி, இம்முறை இவ்இளம் ரஷ்ய வீராங்கனையால் முறியடிக்கப்பட்டுள்ளது. அனஸ்ரசியா சறப்போவா-செறினா வில்லியம்ஸ் இடையே நடைபெற்ற இவ்வாண்டிற்கான இறுதியாட்டம் 6:1 எனும் நிலையில் முதல் செற்றை வென்ற 15வது நிலை வீராங்கனை சறபோவா இரண்டாவது செற்றில் கடுமையான எதிர்ப்பை செறினாவிடம் இருந்து எதிர்நோக்கினார். இதில் 4:2 எனும் நிலையில் முன்னணி வகித்த செறினாவை தனது பலமானதும், உறுதியானதுமான ஆட்டத்தின் மூலம் 6:4 எனும் நிலையில் வெற்றிபெற்று இவ்வாண்டு மகளிர் சம்பியன் ஆனார்.

ஆண்கள் பிரிவில் கடந்த ஆண்டு சம்பியன் றொயர்பெடறர், இரண்டாவது நிலைவீரரான அண்டிறொடிக்கை 4:6, 7:5, 7:6, 6:4 எனும் நிலையில் வெற்றிகொண்டார். இது இவரது மூன்றாவது கிறான்சல வெற்றி. இவ்வாண்டு ஜனவரியில் அவுஸ்திரேலியக்கிண்ண வெற்றிகொண்ட பெடறருக்கு வெற்றிப் பரிசுப்பணமாக 6,02,500 ஸ்ரேலிற் பவுண்ட்ஸ் வழங்கப்பட்டுள்ளது. விம்பிள்டனில் 24 ஆட்ட வெற்றியினைப் பெற்றுள்ள பெடறர், வொயன்வேர்க்கின் சாதனையை முறியடிக்க இன்னும் பதினேழு வெற்றி பெறவேண்டும்.




விசேட விலைக் கழிவு

RHYTHM


Website
rhythmentertainment.com

- Tamil, English, Hindi Movies for Sale
- Tamil, English, Hindi Movies for Rent
- Tamil, Hindi Audio Cd's, Audio Cassette

790 Harrow Road, Wembley, HA0 3EL
Tel : 02089049040
Fax: 02089049070
e-mail
info@rhythmentertainments.com

- Telephone Cards
- Party Shop
- Video Filming
- Photography









நோர்வேயில் கடந்த வாரம், தமிழீழ மாவீரர்கள் நினைவாக, நோர்வே தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினரால் நடாத்தப்பட்ட தமிழர் விளையாட்டு விழாவில் இருந்து...







# சுவிற்சர்லாந்தில் நடைபெற்ற மாவீரர் வெற்றிக் கிண்ண விளையாட்டுப் போட்டிகள்



03.07.2004 சனிக்கிழமை, 04.07.2004 ஞாயிற்றுக்கிழமை இரு நாட்களில் சுவிசின் பேர்ண் மாநிலத்தில் அமைந்துள்ள Wankdorf விளையாட்டு மைதானத்தில் மாவீரர் வெற்றிக் கிண்ணத்திற்கான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. 03.07.2004 சனிக்கிழமை காலை 08.30க்கு பேர்ண் மாநில உப பொறுப்பாளர் திரு.சுந்தரம் அவர்கள் தேசியக்கொடியை ஏற்றி வைத்ததுடன் ஈகைச்சுடரினையும் ஏற்றி வைக்க தொடர்ந்து மலர்வணக்கம் நடைபெற்றது.

தொடர்ந்து 09 மணிக்கு மாவீரர் வெற்றிக் கிண்ணத்திற்கான உதைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் ஆரம்பமாகின. சுவிசிலுள்ள 15 விளையாட்டுக் கழகங்கள் இப்போட்டியில் பங்குபற்றின. இதேவேளை 04.07.2004 ஞாயிற்றுக்கிழமை காலை 08.30க்கு ஓயாத அலைகள் 03 ல் வீரச்சாவடைந்த மேஜர் மன்மதனின் தந்தையாரான திரு. வைத்தியலிங்கம் நாகேந்திரன் அவர்கள் தேசியக்கொடியை ஏற்றி வைத்ததுடன் ஈகைச்சுடரினையும் ஏற்றி வைக்க தொடர்ந்து மலர்வணக்கம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து விளையாட்டுக்கள் நடைபெற்றன.

நடைபெற்ற போட்டிகளில் தெரிவாகிய றோயல் அணியும் - தாய்மண் விளையாட்டுக் கழகமும் இறுதி ஆட்டத்தில் மோதின. இதன்போது 2:0 என்ற ரீதியில் றோயல் அணி வெற்றி பெற்றது. இவ்வுதைபந்தாட்டப் போட்டியில் சிறந்த வீரராக றோயல் அணியின் யசி தெரிவு செய்யப்பட்டார். சிறந்த பந்துக் காப்பாளராக தாய்மண் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த சுதேந்திரன் தெரிவு செய்யப்பட்டார்.

11 வயது பிரிவுக்கிடையே நடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் 1ம் இடத்தை இளம் நட்சத்திரம் (லீஸ்) அணியும் 2ம் இடத்தை தாய்மண் (A) அணியும் 3ம் இடத்தை ஈழவர் அணியும் தட்டிக் கொண்டன. சிறந்த விளையாட்டு வீரராக இளம் நட்சத்திர விளையாட்டு வீரர் சூரியாவும் சிறந்த பந்துக் காப்பாளராக தாய்மண் விளையாட்டு (A) கழக வீரர் விலியும் தெரிவு செய்யப்பட்டனர்.

13 வயது பிரிவுக்கிடையே நடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் 1ம் இடத்தை தமிழர் இல்ல அணியும் 2ம் இடத்தை இளம் நட்சத்திரம் (லீஸ்) அணியும் 3ம் இடத்தை கரிகாலன் அணியும் தட்டிக் கொண்டன. சிறந்த விளையாட்டு வீரராகத் தமிழர் இல்ல அணி விளையாட்டு வீரர் ரஜீவும் சிறந்த பந்துக் காப்பாளராக இளம் நட்சத்திர விளையாட்டு வீரர் ராகுலும் தெரிவு செய்யப்பட்டனர்.

15 வயது பிரிவுக்கிடையே நடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் 1ம் இடத்தை இளம் நட்சத்திரம் (லீஸ்) அணியும், 2ம் இடத்தை தமிழ் இளைஞர் அணியும் 3ம் இடத்தை தமிழர் இல்ல அணியும் தட்டிக் கொண்டன. சிறந்த விளையாட்டு வீரராக இளம் நட்சத்திர அணி விளையாட்டு வீரர் நிசாந் தெரிவு செய்யப்பட்டார். சிறந்த பந்துக் காப்பாளராக தமிழ் இளைஞர் அணிவீரர் கௌதமன் தெரிவு செய்யப்பட்டார்.

17வயது பிரிவுக்கிடையே நடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் 1ம் இடத்தை கரிகாலன் அணியும் 2ம் இடத்தை தாய்மண் அணியும், 3ம் இடத்தை வானவில் அணியும் தட்டிக் கொண்டன. சிறந்த விளையாட்டு வீரராக கரிகாலன் அணி விளையாட்டு வீரர் அனீஸ்வரன் தெரிவு செய்யப்பட்டார். சிறந்த பந்துக் காப்பாளராக தாய்மண் விளையாட்டுகழக அணிவீரர் சுஜாந்தன் தெரிவு செய்யப்பட்டார்.



21 வயது பிரிவுக்கிடையே நடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் 1ம் இடத்தை சூரிச் அணியும் 2ம் இடத்தை நீல நட்சத்திர அணியும் 3ம் இடத்தை றோயல் அணியும் தட்டிக் கொண்டன. சிறந்த விளையாட்டு வீரராக நீல நட்சத்திர அணி விளையாட்டு வீரர் சுதன் தெரிவு செய்யப்பட்டார். சிறந்த பந்துக் காப்பாளராக றோயல் விளையாட்டுக்கழக அணி வீரர் நவநீத் தெரிவு செய்யப்பட்டார்.



5 பேர் கொண்ட கரப்பந்தாட்டப் போட்டியில் 1ம் இடத்தைச் செல்வா விளையாட்டுக் கழகமும் 2ம் இடத்தை ஜொலி Boys அணியும் பெற்றுக் கொண்டன. சிறந்த விளையாட்டு வீரராகச் செல்வா விளையாட்டுக் கழக வீரர் சிவகுமார் தெரிவு செய்யப்பட்டார்.

4 பேர் கொண்ட கரப்பந்தாட்டப் போட்டியில் 1ம் இடத்தை ஜொலி Boys அணியும் 2ம் இடத்தை செல்வா விளையாட்டுக் கழகமும் பெற்றுக் கொண்டன. சிறந்த விளையாட்டு வீரர் ஜொலி Boys விளையாட்டுக்கழக வீரர் தீபன் தெரிவு செய்யப்பட்டார். பெண்கள் கரப்பந்தாட்டப் போட்டியில் 1ம் இடத்தை Black Tiger அணியும், 2ம் இடத்தை சொலொத்தூண் விளையாட்டுக்கழகமும் பெற்றுக் கொண்டன.


30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கிடையே நடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் 1ம் இடத்தை பேர்ண் மாநிலத்தைச் சேர்ந்த சுவிஸ் Boys அணியும் 2ம் இட-த்தை லவுசான் மாநிலத்தைச் சேர்ந்த நீலநட்சத்திரம் விளையாட்டுக்கழகமும் 3ம் இடத்தை பாசல் மாநிலத்தைச் சேர்ந்த புதிய தமிழ் நீலப்பறவைகள் அணியும் பெற்றுக் கொண்டன. சிறந்த வீரராக நீல நட்சத்திரம் விளையாட்டுக்கழக வீரர் மத்தியூஸ் தெரிவு செய்யப்பட்டதோடு சிறந்த பந்து காப்பாளராக சுவிஸ் போய்ஸ் அணியைச் சேர்ந்த நியூட்டன் தெரிவு செய்யப்பட்டார். போட்டிகளின் நிறைவாக நடைபெற்ற போட்டிகளில் வெற்றியீட்டிய அணிகளுக்கு வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்பட்டன.

*- சுகந்தி மூர்த்தி*

உலகக் கண்

ஈராக்கின் இறைமை மீண்டும் உலகிற்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அமெரிக்காவின் ஆட்சி அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளது. சுமார் இரண்டு வருடங்களாக ஈராக்கில் நிலைகொண்டிருக்கும் அமெரிக்க அரச நிர்வாக அமைப்பின் அதிபர் திடீரென தமது நாட்டின் ஈராக் தலையீட்டை யாருமே விரும்பவில்லை என்ற குண்டைத் தூக்கிப்போட்டார். தம்மை விரும்பாத ஓர் நாட்டிற்குள் தமது படைகள் இருப்பது ஏற்றுக்கொள்ள முடியாது என்று ஏதோ கனவுலகில் இருந்து பேசுவதுபோல் பேசினார். கடந்த வருடம் ஆரம்பத்தில் ஈராக் யுத்தம் அமெரிக்க மற்றும் அதனது கூட்டுப்படைகளால் ஆரம்பிக்கப்பட்டபோது ஒரு சர்வாதிகார ஆட்சியிலிருந்து ஈராக்கிய மக்களை காப்பாற்றுவதற்காகவே இந்த யுத்தம் என்றும் சதாம்ஹுசேன் சர்வதேச ரீதியில் ஒரு பெரும் பயங்கரவாதி என்றும் கூறப்பட்டது. அமெரிக்க, இப்போது அமெரிக்க படைகள் ஈராக்கின் இறைமையை புதிய இடைக்கால அதிபரிடம் ஒப்படைத்துச் சென்றதுவரை பண மாற்றங்கள் பலவகைகளிலும் இடம்பெற்றுள்ளன.

இப்போது ஈராக்கில் இடைக்கால அதிபராக பதவியேற்றுள்ள காஜி அல் யாவர் ஒரு சிறுபான்மை சுன்னித் இன இஸ்லாமியராவார். இவரது நியமனத்திலும் அமெரிக்க இராஜதந்திரிகளின் செயற்பாடுகள் பெருமளவில் இருந்துள்ளன. இதுவரைகாலமும் அமெரிக்கா மற்றும் பிரித்தானியா போன்ற நாடுகள் சதாம்ஹுசேனுக்கு எதிரான அமைப்பொன்றினை வெளிநாடுகளில்



படைத் தளபதியுடன் ஈராக்கின் புதிய தலைவர்

# ஈராக்கின் புதிய ஆட்சிமாற்றமும் ஆயுதக் குழுக்களின் இருப்பும்

பிரித்தானிய தரப்பில் இந்த யுத்தத்திற்கான காரணங்கள் தான்தோற்றித் தனமாக வெளியிடப்பட்டன. ஈராக் யுத்தம் நீண்ட காலம் இழுபடலாம் என்றும் ஈராக்கிய அரசு தன்னை பலப்படுத்திக்கொண்டுள்ளது என்றும்



எண்ணிக்கொண்டிருக்கையில் ஒரு சில வாரங்களுக்குள்ளாகவே யுத்தம் முடிவடைந்தது. இதில் அமெரிக்க மத்திய உளவுத்துறையின் செயற்பாடுகள் மிகத் திறமையாக இருந்தன. ஆனாலும் பல விடயங்களில் மத்திய உளவுத்துறை வெளியிட்ட அறிக்கைகளை அமெரிக்க அரசு ஏற்றுக்கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஈராக்கில் படைகள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்துவதிலும் தளபதிகளிடையே முரண்பாடுகளை தோற்றுவிப்பதிலும் அமெரிக்காவின் தந்திரம் வெற்றிபெற்றது. தலைநகர் கடுமையான பாதுகாப்புடன் வைக்கப்பட்டிருக்கையில் திடீரென மிகச் சொற்பமான தாக்குதலுடன் அமெரிக்கப்படைகள் அதற்குள் நுழைந்தன. அங்கு நிலைகொண்டிருந்த படையினருக்கு என்ன நடந்தது என்ற கேள்வி எழுப்பப்பட்டது. பாக்தாத் நகரின் சுற்றுப்புறப் பகுதியில் பாதுகாப்புக் கடமைகளைப் பொறுப்பேற்றிருந்த விசேட படைகளின் தளபதி அமெரிக்காவின் பணம் நிரம்பிய பயணப் பையுடன் காணாமல் போயுள்ளார். அத்துடன் களத்தில் நின்ற படையினரிடையே குழப்பம் ஏற்பட்டது. இதனையடுத்து மிகக்குறைந்தளவான எதிர்ப்பினையே அமெரிக்க இராணுவத்திற்கெதிராக அங்கு நிலைகொண்டிருந்த படைகளால் தெரிவிக்க முடிந்தது. இறுதியில் எவ்வித இழப்புக்களும் இன்றியே அமெரிக்க படைகள் பாக்தாத்திற்குள் நிலைகொண்டன. இந்த வகையிலான துரோகத் தனங்கள் தொடர்ந்தும் இடம்பெற்றன.

நிறுவியிருந்தன. இதன் தலைவராக அகமத் ஷலாபி என்பவர் நியமிக்கப்பட்டிருந்தார். இவருக்கும் அமெரிக்க நிர்வாகத்திற்குமிடையே இருந்துவந்த தொடர்புகள் திடீரென்று முறிவடைந்தன. ஈராக்கில் இவருக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்புக்கள் மற்றும் விசேட தொலைத்தொடர்புச் சாதனங்கள் போன்றவை மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டன. இவற்றிற்கு என்ன காரணம் என்று முதலில் அறியப்படாதபோதிலும் தற்போது ஈராக்கின் தலைவர் பதவியில் ஒரு சிறுபான்மை சுன்னித் இஸ்லாமியர் இருக்கவேண்டும் என்பதில் அமெரிக்க தரப்பினிடையே உறுதியான நிலைப்பாடு இருந்துள்ளது. இதற்குக் காரணமாக தற்போது தொடர்ந்துவரும் அமெரிக்க எதிர்ப்புத் தாக்குதல்களைக் குறிப்பிடலாம். சியாத் இஸ்லாமியர் ஜனாதிபதி பதவியில் அமர்த்தப்பட்டால் அப்பிரிவு மக்களை சமாதானப்படுத்தலாம் என்பது உண்மையே. ஆனால் சியாத் மதப்பிரிவினைச் சேர்ந்த வேறு மத்தியஸ்தர்களைக்கொண்டும் அதாவது வேறு நாடுகளில் உள்ள செல்வாக்கினைப் பயன்படுத்தி ஈராக்கின் சியாத் இஸ்லாமியர்களைச் சமாதானப்படுத்தலாம்.

ஆனால் ஈராக்கில் உள்ள சுன்னித் இஸ்லாமியர்கள் ஏற்கனவே காயப்பட்டவர்கள். பதவியில் இருந்து இறக்கப்பட்டு இன்று விசாரணைகளைச் சந்தித்துவரும் சதாம்ஹுசேன் சுன்னித் இஸ்லாமியர் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது உள்ள அமெரிக்க எதிர்ப்பு ஆத்திரத்தை இவ்வகையிலான சில நடவடிக்கைகள் மூலம் முடிவுக்குக் கொண்டுவரலாம் என்பதில் அமெரிக்கா வெற்றிபெற்றுள்ளது. ஆனால் தற்போது பதவியேற்றுள்ள அதிபரின் காலம் எவ்வளவு என்பதுதான் தீர்மானிக்கப்படமுடியாத ஒன்றாக உள்ளது.

> ஈராக்கில் படைகள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்துவதிலும் தளபதிகளிடையே முரண்பாடுகளை தோற்றுவிப்பதிலும் அமெரிக்காவின் தந்திரம் வெற்றிபெற்றது.

தற்போதைய ஈராக்கை எடுத்துக்கொள்வோம். அமெரிக்கா மற்றும் நேசநாட்டுப் படைகளைச் சேர்ந்த ஒரு இலட்சத்து முப்பதாயிரம் பேர்வரை தற்போது ஈராக்கில் நிலைகொண்டுள்ளனர். தொடர்ந்தும் ஈராக் தனது சொந்தப்படைகளைக் கட்டியெழுப்புவதில் மிக வேகமாக இறங்கியுள்ளது. சதாம்ஹுசேன் காலத்தில் விட்டுச் சென்றவர்கள் மீண்டும் படைகளில் இணைந்துகொண்டு வருகின்றனர். வெகுவிரைவில் அமெரிக்க மற்றும் அதன் நேச நாட்டுப்படைகள் ஈராக்கைவிட்டு வெளியேறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்படியான ஒரு சமயத்தில் ஈராக்கின் பாதுகாப்பை உறுதிப்படுத்த பலமான ஒரு இராணுவமும் காவல்துறையும் இருக்கவேண்டும். ஆனால் தற்போதுள்ள நிலையில் அமெரிக்காவிற்கு எதிரான தாக்குதல்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் ஈராக்கிய தீவிரவாத அணிகள் வெளிநாட்டுப் படைகள் அங்கிருந்து விலகும் பட்சத்தில் ஈராக்கிய படைகளுக்கு எதிரான தாக்குதல்களையும் இவ்வணிகள் மேற்கொள்ள முயலுமா அப்படியானால் அது ஒரு மோசமான நிலையைத் தோற்றுவித்துவிடும். இப்போது அமெரிக்க எதிர்ப்பு தாக்குதல் மையமாக ஈராக் உள்ளது. இதற்காக பல வெளிநாடுகளிலிருந்தும் தீவிரவாதக் குழுக்கள் ஈராக்கில் இறக்கப்பட்டுள்ளன. அமெரிக்கப் படைகள் முற்றாக வெளியேறிவிடும் பட்சத்தில் ஈராக்கில் உள்ள வெளிநாட்டு தீவிரவாதக் குழுக்களின் எதிர்காலம் என்ன? அக்குழுக்கள் ஈராக்கிலிருந்து வெளியேறி மீண்டும் தமது நாடுகளுக்குச் சென்றுவிடுவதே உசிதமானது.

தற்போது இடைக்கால அதிபராக பதவியேற்றுள்ள ஹாஜி அல் யாவர் தற்போது அமெரிக்கப் படைகளுக்கு எதிராகச் செயற்பட்டுவரும் சகலருக்கும் வெகுவிரைவில் பொதுமன்னிப்பு வழங்க தாம் நடவடிக்கை எடுத்துவருவதாகக் கூறியுள்ளார். ஈராக்கில் செயற்படலாம் என எதிர்பார்க்கப்படும் ஐக்கிய நாடுகளின் சமாதான படைகளிடம் தங்களது ஆயுதங்களை அக்குழுக்கள் ஒப்படைக்கலாம் என்றும் கூறியுள்ள புதிய அதிபர் பாதுகாப்பு அமைச்சர் ஹாசம் ஷலானுடன் நடந்த பேச்சுக்களை அடுத்தே இவ் அறிவித்தலை ஜனாதிபதி விடுத்துள்ளார். ஆனால் தொடர்ந்தும் தாக்குதல்களில் ஈடுபடுவோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை தமது அரசு எடுக்கும் என அவர் எச்சரிக்கையும் செய்துள்ளார்.

**- உதயன்**

(அடுத்தவாரம் ஈராக் யுத்தம் வென்றவர் யார், தோற்றவர் யார்)

இந்திய அரசு இது குறித்து இதுவரை எதுவித பிரதிபலிப்புக்களையும் வெளியிட்டிருக்கவில்லை. ஆனால் அரசுகள் தாம் நேரடியாகப் பிரதிபலிப்புக்களை வெளியிடுவது சங்கடங்களைத் தோற்றுவிக்கக்கூடிய இக்கட்டான சூழ்நிலைகளில் இவ்வாறான ஓய்வுபெற்றவர்களைக் கோதாவில் இறக்குவது வழமையானது தான். வெளிப்பார்வைக்கு இதுவொரு தனிநபர், அல்லது தன்னார்வ நடவடிக்கை போலத் தோன்றினாலும் இது கூட இராஜதந்திரத்தில் ஓர் உத்தியோக பூர்வ நடவடிக்கையே.

1971ம் ஆண்டு இந்திய - பாகிஸ்தான் போரின் பின்னர், இந்தியா தனது இராணுவ முக்கியத்துவம்வாய்ந்த நிலைகள் பலவற்றைப் பானிஸ்தானிலிருந்து புவியியல் ரீதியாக வெகு தொலைவிலுள்ள தென்னிந்தியாவுக்குப் படிப்படியாக மாற்றியிருந்தது. அந்நிலைகள் ISI ன் உளவு நடவடிக்கையிலிருந்து வெகுதொலைவில் இருக்க வேண்டும் என்பதற்காகவே இந்தியப் பாதுகாப்பு விவகார நிபுணர்கள் இந்த உத்தியைப் பயன்படுத்தினர்.



## ஆராரோ...! ரோ ரோவோ !

( பேராசிரியர் இ.சிவசண்முகம் எழுதும் புதிய தொடர் )



ளைத் தனது வலைக்குள் வீழ்த்திக் கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனடிப்படையிலேயே கிழக்குமாகாண முஸ்லீம்களையும் லக்சர் இ.ரொய்பா ஆயுதமயப்படுத்திவிடக்கூடும், அது இந்தியாவின் பாதுகாப்புக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் என இராமன் அச்சம் தெரிவிக்கிறார்.

இந்தியாவின் இந்த அச்சங்கள், சந்தேகங்கள் எவற்றையுமே சிறீலங்காவின் ஆட்சியாளரோ, வெளியுறவுத்துறையோ, கொள்கை வகுப்பாளர்களோ கவனத்திலெடுத்துக் கொள்ளவில்லை என்பதுடன், கேணல் வாலியின் நியமனத்தையும் அரசு அங்கீகரித்து விட்டது. இதனை இந்தியா ஜீரணித்துக் கவனியுங்கள்.

'அமெரிக்காவை உலகம் முழுவதும் மெச்சுகிறது. நாம் அமெரிக்காவின் நிரந்தர நண்பர்களாக இருப்போம்.' (சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் - மே 2004 நடுப்பகுதியில் அமெரிக்க விஜயத்தின்போது புரூகிங்ஸ் நிலையத்தில் உரையாற்றுகையில்)

எல்லா விடயங்களிலும் இலங்கையின் உதவி பெறப்படும் (அமெரிக்காவின் பிரதி வெளிவிவகார செயலர் றிச்சட் ஆர்மிஜே மே 2004 நடுப்பகுதியில் கதிர்காமரின் அமெரிக்க விஜயத்தின் நிறைவில் பத்தரிகையாளர் சந்திப்பில்)

ஐ.நா.வின் தோல்வி வொசிங்டன் ஓர் உலகப் பொலிஸ் காரனைப் போல் தலையீடு செய்வதைத் தவிர வேறு தெரிவுகள் இல்லாத நிலையைத் தோற்றுவித்துள்ளது. (சிறீலங்காவின் தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 2003ல் ஐ.நா பொதுச்சபையில் உரையாற்றகையில்)

மேற்படி கூற்றுக்களின் அர்த்தம் என்ன? சிறீலங்காவானது அமெரிக்காவின் தென்னாசிய விஸ்தரிப்பு வலைப்பின்


# மேற்கத்தேய புலனாய்வு அமைப்புக்களின் தளமாக யாழ். குடா மாறாமல் தடுத்துள்ள புலிகளின் பிரசன்னம்

### கேணல் பஸீர் வாலி

**ஐம்பத்தெட்டு வயதுடைய வாலி 1966ல் பாகிஸ்தான் இராணுவத்தில் இணைந்து கொண்டார். 1971ல் இந்திய - பாகிஸ்தான் போரின் போது கவல்றி றெஜிமென் ஒன்றிற்குத் தலைமையேற்றுத் போரிட்டார்.**

**நீண்ட கால இராணுவ சேவையில் தேசத்திற்கு ஆற்றிய பணிகளுக்காகப் புகழ்பெற்ற கிலாப் இம்தியார் விருது வழங்கி அதிபர் முஸாரப்பினால் கௌரவிக்கப்பட்டார்.**

**இராணுவ சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின் உயர் அரச அலகொன்றின் மேலதிக செயலாளராகப் பணியாற்றியதுடன், பாகிஸ்தானின் அதியுயர் உளவு அமைப்பான ISI (Inter Services Inteligence)ன் இயக்குநராக 6 மாதங்கள் வரை கடமையாற்றினார்.**



இதனை முறியடிக்க ISI இஸ்லாமிய அடிப்படைவாத இயக்கங்களின் செயற்பாடுகளைத் தென்னிந்தியாவில், குறிப்பாகத் தமிழகத்தில் ஊக்குவித்து வந்தது. அல் உம்மா போன்ற இந்த அமைப்புக்கள் தமிழகத்தில் குறிப்பாகக் கோவை போன்ற இடங்களில் குண்டு வெடிப்புக்களையும் நடாத்தியிருந்தன. பழனிபாபா உட்படப் பலர் தமிழகக் காவற்துறையால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இமாம் அலி உட்படப் பலர் தீவிரமாகத் தேடப்பட்டும் வருகிறார்கள்.

லக்சர் இ.ரொய்பா என்பது தீவிரமான செயற்பாட்டைக் கொண்ட ஓர் இயக்கமாகும். கஷ்மீர் மாநிலத்துக்கு இந்தியாவிடமிருந்து விடுதலை கோரும் இது இடத்துக்கிடம் வெவ்வேறு பெயர்களில் இயங்குவதாகச் சந்தேகிக்கப்படுகிறது. அத்தொடு அடிப்படைவாத இஸ்லாமிய இயக்கங்களால் முன்வைக்கப்படும் உலகளாவிய முஸ்லிம் உம்மா (உலகளாவிய முஸ்லிம் சமுதாயம்) என்ற கருதுகோள் உலக முஸ்லிம்கள் அனைவரையும் ஏதோ ஒரு வகையில் தமது செயற்பாடுகளுக்குள் உள்வாங்கும் செயற்திட்டமாகும். இதனைத் தனக்கு வாய்ப்பாகப் பயன்படுத்தும் ISI ஆங்காங்கே இருக்கும் இஸ்லாமியச் செயற்பாட்டுக் குழுக்க

கொள்ளுமா? என்பதை இப்போதே கூறுவது கடினமானது.

ரணிலின் ஆட்சியின்போது, இந்தியாவின் பிராந்திய நலன்கள் குறித்து இந்தியாவுக்கே ஆலோசனை வழங்கிய லஷ்மன் கதிர்காமர்தான் தற்போது சிறீலங்காவின் வெளியுறவுத்துறை அமைச்சர் என்பதை கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

பாகிஸ்தானுக்கான சிறீலங்காவின் உயர்தானிகர் லெப். ஜெனரல் சிறீலால் வீரசூரிய தற்போதைய பாகிஸ்தான் அதி

## அங்கம் 15

பர் ஜெனரல் பர்வேஸ் முசாரப் உடன் இராணுவப் பயற்சிக் கல்லூரியில் ஒன்றாகப் பயின்றவர் என்ற காரணத்தினாலேயே அதிபர் சந்திரிக்காவினால் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டார் என்பதும் ஜெனரல் முசாரப், இந்தியாவின் கார்கில் பிரதேசத்தினை ஆக்கிரமித்த நடவடிக்கையின் சூத்திரதாரி என்பதுவும் இங்கு மனங்கொள்ளத் தக்கவை.

சிறீலங்கா, இந்தியாவின் நலனை புறக்கணித்து நடந்து கொள்வது இதுதான் முதற்தடவை அல்ல. 1977 ல் ஆட்சிக்கு வந்த ஜே.ஆரின் UNP அரசு மேற்கத்தேய- அமெரிக்க சார்புக் கொள்கையைக் கடைப்பிடிக்கத் தொடங்கியதும், இரணவில - நுரைச்சோலையில் வாய்ஸ் ஒப் அமெரிக்க - VOA- வின் ஒலிபரப்பு நிலையத்தை அமைக்க அனுமதியனித்தமை போன்ற விடயங்களே இலங்கையின்பால் இந்தியாவின் கவனம் தீவிரமடையவும் இலங்கை இனப் பிரச்சினையில் இந்தியாவின் நேரடித் தலையீட்டின் ஊடாக

**புலிகளைப் பயங்காட்டுவதற்காகச் சிறீலங்கா செய்யும் இந்தக் கைங்கரியங்கள் உண்மையில் இந்தியாவின் பிராந்திய நலன்களுக்கே ஆப்புவைக்கப் போகின்றன.**

இலங்கை- இந்திய ஒப்பந்தம் எழுதப்படவும், அதில் இந்தியாவின் பாதுகாப்புக்குக் குந்தகமான எதனையும் சிறீலங்கா செய்யமாட்டாது என்னும் சரத்து சேர்க்கப்படவும் வழிகோலின. ஆனால் இந்த ஒப்பந்தம் செத்துப் போய் விட்டதென்பதே இவ்விவகாரங்களில் சிறீலங்காவின் தற்போதைய நிலைப்பாடு போலத் தெரிகிறது.

கேணல் பஸீர் வாலியினது நியமனம் பற்றிச் செய்தி வெளியிட்ட டெய்லி மிரர் வாலி பாகிஸ்தானியப் புலனாய்வுத் துறையில் குறுகிய கால சேவையையுடையவர் எனக் குறிப்பிடுகிறது (19.06.2004 பக்கம்-01) இதனூடாக இந்தியாவின் சந்தேகங்களைத் தட்டிக்கழிக்க முற்படுகிறதோ என எண்ணத் தோன்றிகிறதல்லவா?

இனிப் பின்வரும் மூன்று நபர்களதும் உரைகளைக்

னலின் ஒரு முடிச்சாக இறுகிவிட்டது என்பதேயல்லவா?

அதுமட்டுமல்ல பாவனைக்கும் பரிமாற்றத்துக்குமான உடன்படிக்கை (Access and Cross Servicing Agreement) யினை எட்டுவதற்குச் சிறீலங்கா அமெரிக்காவுடன் தீவிரமாகப் பேசிக்கொண்டிருக்கிறது. இது அமெரிக்காவின் சிறீலங்காவிற்கான காலூன்றுதலை மேலும் திடமாகவும் சட்டரீதியானதாகவும் ஆக்கிவிடுமென்பதில் வேறு கருத்திருக்க முடியாது. புலிகளைப் பயங்காட்டுவதற்காகச் சிறீலங்கா செய்யும் இந்தக் கைங்கரியங்கள் உண்மையில் இந்தியாவின் பிராந்திய நலன்களுக்கே ஆப்புவைக்கப் போகின்றன.

சிறீலங்காவானது இந்தியாவின் பிராந்திய நலன்களுக்கு நீண்ட காலத்தில் முற்றிலும் குந்தகமான விளைவுகளைத் தரக்கூடிய நடவடிக்கைகளையே தொடர்ச்சியாக எடுத்து வருவது கண்கூடு.



மறுவழமாக ஈழத்தமிழர்களும் விடுதலைப் புலிகளும் எங்கனம் செயற்படுகிறார்கள்? விடுதலைப் புலிகளின் பிரசன்னம் அச்சுறுத்தலாக இருப்பதாலேயே யாழ். குடாநாடு மேற்கத்தேய புலனாய்வு அமைப்புக்களின் தளமாக இன்னமும் மாறாமலிருக்கிறது. என்பதுவும் இத்தளம் இந்தியாவின் மீதான புலனாய்வுத் தேவைக்கானதே என்பதும் வெளிப்படையானது. அண்மைய அமெரிக்க மேற்குலகப் படைத்தளபதிகள், இராயதந்திர புலனாய்வுத்தள நிர்மானம் பற்றிய ஆரம்பநடவடிக்கைகளே இதனைத் தவிர்ப்பதற்கு இந்தியாவுக்கு உதவக்கூடியவர்கள் ஈழத் தமிழர்களும் விடுதலைப் புலிகளுமே.

விடுதலைப் புலிகள் எக்காலத்திலும் இந்தியாவின் நலன்களுக்கு விரோதமாக, பாகிஸ்தானினதோ, சீனாவினதோ, மேற்குலகத்தினதோ, அமெரிக்காவினதோ கதவுகளைத் தட்டியிருக்கவில்லை என்பது இங்கு நோக்கத்தக்கது.

இனியாவது இந்தியா தனது நண்பர்கள் யார் தனது பிராந்திய நலன்களுக்கான கவசம் எது என்பதைத் தெளிவாகப் பகுப்பாய்வு செய்து கொள்ள வேண்டியது அவசரத் தேவையாகும்.

(இன்னும் வரும்)

சுஜி ஜுவல்லரி SUJI JEWELLERY

சுஜி ஜுவல்லரியின் தங்கநகை சேமிப்புத் திட்டம் 2004

தங்கநகை உற்பத்தியில் அனைவர் மனங்களிலும் இடம்பிடித்த சுஜி ஜுவல்லரி 2004ம் ஆண்டில் தங்கநகை சேமிப்புத் திட்டம் ஒன்றினையும் உங்களுக்கு அறிமுகப் படுத்துகிறது. எம்முடன் தொடர்புகொண்டு அங்கத்தவர்களாக சேர்ந்து கொள்ளலாம். இந்த தங்க நகை சேமிப்புத் திட்டத்திற்கு ஒவ்வொரு மாதமும் நீங்கள் செலுத்த வேண்டியது 150Sfr மட்டுமே. அதேபோல் ஒவ்வொரு மாதமும் குலுக்கல் முறையில் அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுபவர் 1800Sfr பெறுமதியான நகைகளைப் பெற்றுக்கொள்வதோடு அவர் தொடர்ந்து பணம் செலுத்தத் தேவையில்லை. மாதமொருவர் அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படும் அதேவேளை தொடர்ந்து சந்தாதாரராக இருப்போர் விசேட சலுகைகளோடு வருட இறுதியில் 1800Sfr பெறுமதியான தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ளலாம். அதிஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படுவோரின் விபரம் IBC தமிழிலும் மற்றும் ஈழமுரசு பத்திரிகையிலும் வெளியிடப்படும்.



Neuengass - Passage 3, 3011 Bern Telefon 031 311 20 49 / Mobile 079 241 59 02

# தீச்சுவாலை முறியடிப்பில் வித்தான

## கப்டன் நிலா

மாந்தை என்ற அழகிய வளங்களுடன் சேர்ந்த இடங்கள் நிறைந்த மன்னாரில் பாலுச்சாமி-சந்திரா தம்பதியினருக்கும் அருமை மகளாகப் பிறந்தாள் வினோ. வினோவை எல்லோரும் வினு என்று அன்பாக அழைப்பார்கள். இவளுக்கு இரண்டு ஆண் சகோதர்கள் மட்டும் தான் உடன் பிறப்புக்கள். தன் ஆரம்பக் கல்வியை மன்னார் மகாவித்தியாலயத்தில் கற்றாள். படிப்பிலும் சரி, விளையாட்டிலும் சரி, கலை நிகழ்விலும் சரி கடும் சுறுசுறுப்பும் கெட்டித்தனமும் சுட்டித்தனமும் உடையவள். வினோ பள்ளிப்பருவத்தை அள்ளிப்பருகிக் கொண்டிருக்கையில், 1990 காலப்பகுதியில் இராணுவக் கொடுமைகள் தாங்க மாட்டாத இவர்கள் குடும்பம் இந்தியா சென்றது. குடும்பத்துடன் சென்ற அவள் தன் கல்வியை அங்கு தொடர்ந்தாள். தாய் நாட்டைப் பிரிந்து அந்நிய நிலத்தில் வாழ்ந்ததால் எங்கள் இயல்பு நிலை எப்பிடியிருக்கும் இப்பிடியும் இருக்க வேண்டுமா என்ற தார்ப்பரியம் விளங்க 1996ம் ஆண்டு தாயகம் திரும்பி தங்கள் சொந்த ஊர் மன்னாரில் மீண்டும் வசித்தனர். சிறு பிள்ளையாக இருக்கும்போதே தேச விடுதலையை மனமேற்று நடந்தவள் வினோ. சிங்களக் காடையர்களின் அடாவடித்தனம் அவள் மனதில் அந்நியனை விரட்ட வேண்டியதன் தேவை விளங்கவைத்தது. தலைவன் அணியில் தன்னையும் இணைத்துக் கொண்டாள்.

1996.10.21...

பாசறையில் நிலா என்ற அழகிய பெயரைப் பெற்று, எல்லாப் பயிற்சிகளைத் திறம்படச் செய்தாள். இவளின் திறமை கண்ட பயிற்சி ஆசான்கள், திறமைக்கு உதாரணமாக இவளையே சுட்டிக்காட்டி கதைப்பார்கள். இவளின் திறமையான செயற்பாடு கண்டு, 50 கலிபர் இயக்கும் பிரிவுக்கு இணைத்து விட்டார்கள். அவளின் திறமை அதிலும் வளர்ந்து. 50 கலிபருடன் ஜெயசிக்குறுய் களத்தில் இவள் புரிந்த சாதனைகள் அதிகம். ஜெயசிக்குறுவில் இவளின் பாதங்கள் பட்ட மண் கரப்புக்குத்தி, விஞ்ஞானகுளம், மாங்குளம் என நீண்டு செல்லும். இப்படியிருக்க ஓயாத அலை-2 என்ற எங்கள் வீரத்தலைவனின் நேரடி நெறிப்படுத்தலிலான நடவடிக்கை ஆரம்பமானது. அப்போது L.M.G ஆயுதத்தை இயக்குபவர்களின் தேவை அதிகம் இருந்ததால், நிலா எல்.எம்.ஜி இயக்குநராகச் சென்று களமாடினாள். அங்கு காலில் விழுப்புண் அடைந்தாள். விழுப்புண் அடைந்தவள் மருத்துவமனையிலிருந்து காயத்தை மாற்றிக் கொண்டு, மீண்டும் கிளிநொச்சிக் களத்திற்கு சென்றாள். அங்கு பரவலாக நடந்த சிறு சிறு தாக்குதல்களில் எல்லாம் நிலாவின் எல்.எம்.ஜி. இயங்கி




யது. தொடர்ந்து ஓயாத அலை-3 சமர்க்களம். அச்சமர் களத்தில் எல்.எம்.ஜியுடன் நின்றாள் நிலா. அந்த தாக்குதலின் போது நிலாவின் இரண்டாவது களமுனைப் பொறுப்பாளர் காயப்பட்டபோது அந்த அணியைப் பொறுப்பேற்று நின்று செயற்பட்டவள் நிலா. அந்த நேரத்தில் நிலா மீண்டும் காலில் காயமடைந்தாள். அக்காலம் சண்டைக்குக் குறைவில்லாத காலம். காயம் மாற்றச் சென்றவளுக்காக களம் காத்திருந்தது. காயம் மாற்றியவள் பி.கே. பொறுப்பாளராக (P.K. லீடர்) தென்மராட்சி தனங்கிளப்புக்குச் சென்றாள். அங்கு நடந்த சிறு சிறு தாக்குதல்களில் எல்லாம் பங்கு கொண்டு வென்றாடினாள். எங்கு தாக்குதல் நடக்குதோ அவ்விடத்தில் பி.கே.யுடன் எங்கள் நிலாவைக் காணலாம்.

நிலா... போர்க்கள வானேறி முழங்கும் மோட்டார்களுடன் நிற்பதால் தொடர்ந்து விழுப்புண்கள் ஏற்று நின்றாள். அந்தக் களத்தில் ஏற்பட்ட காயம் அவளுக்கு ஆறுமாத ஓய்வு எடுத்து இருக்க வேண்டிய தேவையை கொடுத்து மருத்துவர்கள் ஆறுமாத கால ஓய்வு கொடுத்தனர். ஆனால் களத்தில் ஒளிவீசிய நிலா மூன்று மாத ஓய்வு முடிந்த பின் ஒருவருக்கும் தெரியாமல் களமேகி பி.கே. தான் வேண்டும் என்று பிடிவாதத்துடன் நின்றாள். பின்பு சாவகச்சேரித் தாக்குதலுக்குச் சென்றாள். அங்கும் அவள் தன் கடைமைகளை செவ்வனவே செய்து தன் அணியையும் செயற்படுத்தினாள்.

இப்படி இருக்கையில், ஆனையிறவை மீண்டும் கைப்பற்றும் நோக்குடன் சிங்களப்படைகள் அக்னிகீல (தீச்சுவாலை) போரை ஆரம்பித்தனர். களங்கள் ஏறியாடியவளின் கால்கள் தீச்சுவாலையில் வண்ணாத்திப் பாலம், அரியாலை, கனகம்புளியடி எனவும் தொடர்ந்தது... அரியாலைப் பகுதியிலும் காலில் காயம் அடைகின்றாள். இவளின் மேனி விழுப்புண்ணால் வைரம் பெற்று நின்றதென்றே கூறலாம்.

காயம் அடைந்த போது இவளின் அணித்தலைவியாள் பின்னுக்கு போகும்படி கட்டளை கிடைத்த போதும் தன் பி.கே.யை விட்டுட்டுப் போகமாட்டேன் என்று உறுதியாக நின்றாள் 50 கலிபர் துப்பாக்கியுடன் களமெங்கும் நின்றாடினாள். 25.04.2001 அன்று, தீச்சுவாலை என்ற பெயரில் பாரிய நடவடிக்கையை மேற்கொண்டு ஆனையிறவை மீண்டும் கைப்பற்றுவதற்கு எதிரி பெருமெடுப்பில் முன்னேறிக்கொண்டிருக்க, 50 கலிபரை இயக்கிக்கொண்டிருந்த தனது பொறுப்பாளர் வீரச்சாவைத் தழுவ, அவ்வாயுதத்தை எடுத்து நிலா இயக்கியபடி நின்றாள். அப்போதுதான் அந்த அதிர்வு நிகழ்ந்தேறியது. சிங்களப்படைகள் ஏவிய குண்டொன்று இவளருகில் வீழ்ந்து வெடிக்க, பளை மண்ணை முத்தமிட்டாள் கப்டன் நிலா.

*சீரான வாழ்வு*
*சிங்களரால் சிதைக்கப்பட*
*சீற்றமொடு தமிழர்*
*ஆற்றல் கொள் தலைவன் வழி*
*எழுந்தனர் ஆடினர்*
*போற்றுதற்குரிய போர்த் தெய்வங்கள்*
*ஆயினர்*
*பெயர் பொறித்து நாம் கூறும்*
*பெரு வீரம் தந்தனர்*
*சாற்றுவோம் மாவீரர் கணப்பொழுதை*
*தமிழ்ச்சரம் சாற்றி வாழ்த்துவோம்.*
*வரலாற்றின் முன் வைத்து.*

- **பூமதி** (மாலதிபடையணிப் போராளி)

# காலம்




**கந்தையா நவரேந்திரன்**

பிணக்கு எப்பொழுதும் ஏதாவது ஒரு சீர்கேட்டிற்கே வழிகோலும். நாம் ஒவ்வொருவரும் சீர்கேடுகளின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் வரைக்கும் எமது சமூக அமைப்பில் எந்த விதமான உளவியல் புரட்சியையும் எம்மால் கொண்டு வர முடியாது. நாம் ஆண்டாண்டு காலமாக துயரத்துடனும், வேதனையுடனும், ஏக்கத்துடனும், மனக்கசப்புடனும், அச்சத்துடனும், அலைந்து திரியும் அவாக்களின் நாட்டத்துடனும் தனிமையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இவையெல்லாம் காலத்திற்கு உட்பட்டவை. எனவே காலத்திற்குள் இருப்புக் கொண்ட எங்களுடன் அவை மிகவும் நன்றாகவே ஒத்துப் போய்க்கொண்டு இருக்கின்றன.

அடிப்படையில் காலம் என்பது பிளவை, நிகழ்வுகளின் தொடர்ச்சியை, சாதனையைத்தானே குறிக்கிறது? நாம் கால-த்தை எமது வசதிக்கு ஏற்றபடி 'நேற்று', 'இன்று', 'நாளை' என்று பிரித்து வைத்துள்ளோம். சூரியன் உதிப்பதும் படுவதும், நண்பன் ஒருவனைச் சந்திக்க நேரம் குறிப்பதும், ஓர் அழகிய பின்மாலைப் பொழுதில் பூரணச் சந்திரன் உதிப்பதும் எல்லாம் காலத்துக்குள் வருகின்றன. எனவே 'காலம்' என்பது ஆர்வநம்பிக்கையுடனான எமது விருப்பமேயாகும். காலம் என்பது மிகவும் சிக்கலான ஒரு விவகாரம். அதைப் புரிந்து கொள்வதற்குப் பொறுமை வேண்டும்.

பொறுமை காலமற்றது. பொறுமையின்மைக்கே காலம் தேவை. நாம் எமது வாழ்க்கையைக் காலத்தின் அசைவுக்குள் வகுத்து வைத்திருக்கின்றோம். அசைவே காலம். இங்கிருந்து அங்கு செல்ல எமக்குக் காலம் தேவை. ஒரு மொழியைக் கற்கக் காலம் தேவை. அறிவைச் சேகரிக்க - ஒன்றை அனுபவிக்க - ஏதாவது ஒரு துயரம் நிறைந்த நிகழ்வை, மனதுக்கு மகிழ்ச்சி தரும் நிகழ்வை எதிர்பார்க்கக் காலம் தேவை. நேற்றைய நினைவுகளை - ஆயிரம் நேற்றைய நினைவுகளை நினைத்துப் பார்க்கக் காலம் தேவை.

நிகழ்காலத்தைச் சந்திக்கவும், அந்த நிகழ்காலத்தை எதிர்காலத்திற்கு நகர்த்துவதற்கான மாற்றங்களைச் செய்வதற்கும் காலம் தேவை. ஒரு கீழ் நிலைப் பணியாளர் மேல் நிலைப் பணியாளராய்ப் பதவி உயர்வதற்கும், ஒரு தனித் திறமையை வளர்த்தெடுப்பதற்கும் காலம் தேவை. நாம் இங்கே குறிப்பிடும் காலமானது சடப்பொருள் சார்ந்த, உடல் சார்ந்த (Physical) நேரமாகும்.



நாம் இக்கணத்தில் `எவ்வாறு உள்ளோமோ` (What is) அந்நிலையிலிருந்து முற்றுமுழுதாகவே வித்தியாசமான வேறு ஒருவராக மாறமுடியாது. இம்மாற்றம் கூட காலத்தின் நகர்வுக்கூடாகவே நிகழவேண்டும். நினைவு என்றால் காலம். காண்பான் இறந்த காலம். காலம் அடிப்படையில் பிளவு ஏற்படுத்தும் தன்மை கொண்டது. புறத்துச் செயற்பாடுகளுக்குச் சடப்பொருள் சார்ந்த காலம் அவசியம். ஒரு விதை ஒரு பெரிய மரமாக வளர்வதற்குக் காலம் தேவை. அமெரிக்காவிலுள்ள கலிபோனியா என்ற இடத்தில் 5000 வருடங்களாக ஒரு மரம் நிற்கிறது! இத்தனை வருடங்கள் வளர்ந்து நிற்பதற்கு அம்மரம் எத்தனை எத்தனை மழைகளையும் புயல்களையும் இடி முழக்கங்ளையும் கண்டிருக்க வேண்டும். இம்மரத்தின் வளர்ச்சிக் காலத்தில் தானே இவையெல்லாம் நிகழ்ந்தன? எனவே எமது புறம் காலத்திலிருந்து தப்பமுடியாது. அத்தகைய காலத்தை முடிவுக்குக் கொண்டு வர முயல்வது முட்டாள்த் தனமானது.

நாம் மரணிக்கும் போதுதான் எங்களது சடப்பொருள் சார்ந்த காலம் முடிகிறது.

அப்படி யானால் 'உளவியல் நேரம்' என்று ஒன்று உளதா என்று பார்ப்போம்.

நான் யொறாமையுடையவனாக இருக்கின்றேன். நான் வன்முறையாளனாக இருக்கின்றேன். நான் என்னுள் இருக்கும் பொறாமையை - வன்முறையை முடிவுக்குக் கொண்டு வர எனக்குக் காலம் தேவை. அதாவது நான் `என்னவாக இருக்கின்றேனோ` அந்நிலையிலிருந்து நான் `என்னவாக இருக்கப் போகின்றேனோ', அந்த நிலைக்கு வர எனக்குக் காலம் தேவைப்படுகிறது என நினைக்கின்றேன். இதற்கும் காலம் தேவையென்ற கோட்பாட்டு ரீதியான கருத்து வரையறைக்குள் நான் தள்ளப்பட்டிருப்பதாலேயே இம்முடிவை முடிந்த முடிபாக எடுத்து அதனை நோக்கிச் செயற்பட விழைகின்றேன். எங்களுக்குள் இந்த மாற்றத்தைக் கொண்டு வர நாங்கள் சில நடைமுறைகளை-சடங்குகளைக் கடைப்பிடிக்க வேண்டுமெனத் தந்துவங்களும் புனித நூல்களும் எங்களுக்குப் போதிக்கின்றன. அதாவது அவை கூறும் தெய்வங்களுக்கு அருகில் வரவேண்டுமானால் அவை எடுத்துரைத்த, காலாகாலம் கடைப்பிடித்து வரப்படும், நடைமுறைகளையும் சடங்குகளையும் நாமும் பின்பற்றியே ஆகவேண்டுமென வற்புறுத்தப்படுகின்றன. அப்படிச் செய்யாவிட்டால் எமக்கு மீட்சியே இல்லை என்றும் அவை போதிக்கின்றன. காலத்தால் தீண்டவே முடியாத-அணுகவே முடியாத-எந்த அளவு முறைக்கும் அப்பாற்பட்ட அந்த உண்மையான அனுபவத்தை அனுபவிக்கக் காலமென்னும் ஊடகமே எமக்குள்ள ஒரே வழியென அவை போதிக்கின்றன. நாங்களும் ஒழுங்காகக் கிரமம் தவறாது முடிக்கி விடப்பட்ட இயந்திர மனிதர்களைப்போல் செயற்பட்டுக் கொண்டு இருக்கின்றோம்.

உடல் சார்ந்த காலம் பிளவை ஏற்படுத்தும் என்பதைப் புரிந்து வைத்திருக்கும் நாங்கள், அதே பிளவைத்தான் உளவியல் காலத்திற்குள்ளும் எங்களின் அறியாமையால் காண விழைகின்றோம்.

(தொடர்ச்சி 28ம் பக்கம்)

# மாவீரர் நினைவு
## மெய்வல்லுனர் போட்டிகள் 2004

தமிழீழ விடுதலைப் புலிகள் பிரெஞ்சுக் கிளை
நடாத்தும்
மாவீரர் நினைவு மெய்வல்லுனர் போட்டிகள் 2004



எதிர்வரும் 17–07–2004 அன்று STADE GUIMIER - Chemin Marais du Souci, 93270 Sevran - RER:B Station Sevran - Livry என்னும் இடத்தில் தெரிவுப்போட்டிகளும்,

18–07–2004 அன்று STADE POISSONNIERS - 02, Rue Jean Cocteau, 75018 Paris என்னும் இடத்தில் மெய்வல்லுனர் இறுதிப்போட்டிகளும் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம். போட்டிகள் காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகும்.

மேலதிக தொடர்புகட்கு, 01 43 58 11 42 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.





INDIAN ASTROLOGER

# சாய்பாபா

# Laxmi Kanthswamy

**பிரபல இந்திய ஜோதிடர் கைரேகை நிபுணர்
இந்தியாவிலிருந்து இங்கே வருகை தந்துள்ளார்.**

எம்மிடம் வருவதால் உங்கள் சகல பிரச்சனைகளும் தீர்த்து வைக்கப்படும். 99 வீதம் சரியாக கணித்துச் சொல்லப்படும். உங்கள் நிகழ்காலம், வருங்காலம், வியாபாரம், கல்வி, குடும்ப விபரங்கள், தேகசுகம் எல்லாம் சரியாக கணித்துச் சொல்லப்படும். அத்துடன் சாந்தி பூஜா, இலட்சுமி பூஜா பிரார்த்தனைகளும் செய்து தருவோம்.கண் திருஷ்டி, சூனியம் அகற்றுதலும் செய்து தருவோம்.

**சந்திக்குமிடம்:**
**(West London) South hall**
**Contact:**
**Tel: 07932724065 / 07939613067**

# பூபாளம் கணினிச் சேவைகள்

*Ours is not a business, its our profession*

**இது வியாபாரமல்ல; எங்கள் தொழில்**

**கணினித் துறையில் கல்விசார் தகமையும், தொழில்நுட்ப அனுபவமும் வாய்ந்த தொழில்நுட்பவியலாளரால்**



1. உங்கள் தேவைகளைச் சொல்லுங்கள், உங்கள் தேவைகளுக்கேற்ப, கணினிகளைப் புதிதாகத் தயாரித்துத் தருகின்றோம்.
2. திருத்த வேலைகள் எதுவானாலும் (Desktops or postable compeuters) அவற்றைச் சிறந்தமுறையில் சீர் செய்து தருவோம்.
3. Cyber cafe கட்குத் தேவையான வலையத் தொடர்புகள், உங்கள் இல்லங்களுக்குத் தேவையான வலையத் தொடர்புகள், இணைய வலையத் தொடர்புகள் போன்றவற்றை ஏற்படுத்தியும் தருவோம்.

**4. கணினி**










1. உதிரிப்பாகங்களையும்






2. அச்சு உபகரணங்களுக்குரிய மை வகைகளையும்









3. Video audio CD களையும்



4. DVD (Digital Versatile device - பலதிறன்கொண்ட சாதனம்) போன்ற பதிவு செய்யக்கூடிய CD களையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.



**5. கணினிகள் சம்பந்தமான ஆலோசனைகள்**

எங்களது தகைமையும், அனுபவமும் வாய்ந்த தொழில் நுட்பவியலாளரின் சேவையை நீங்கள் பெற்றுக்கொள்ளக் கீழ்க்காணும் விலாசத்துடன் நேரிலோ, தொலைபேசிமூலமோ தொடர்பு கொள்ளுங்கள்

***22, Rue Perdonnet, 75010 Paris - Tél: 01 40 05 95 15 / 06 62 23 36 86***

தமிழர்களப் பிரிக்கக் கூடியளவில பிரிச்சுவிட்டாத்தான் தன்னால இராச்சியம் நடத்தலாம் எண்டது சிங்கள அரசின்ர நோக்கம். தமிழ் பேசும் மக்களை இலங்கைத் தமிழர், இஸ்லாமியத் தமிழர், தமிழ் பேசும் முஸ்லீம் எண்டு பிரிச்சு வைச்சினம். சோனகர் மூர்ஸ் எண்டால் இவை வட ஆபிரிக்காக் கண்டத்தில் வாழ்ந்த பெர்பர் (Berber) இனத்தின் கலப்புச் சந்ததியே மூர்ஸ் என்பதற்கும் காமாசோமாண்டு ஆதாரம் தருது அரசு.

# ஏ மாறியது எப்படி? - 20

## பொடியள் எப்பிடிச் செய்து முடிக்கப் போறாங்களோ...?

ஆனா நாங்கள் கொஞ்ச நஞ்சமா ஏமாறேல்ல. இப்ப நீங்கள் ஒருக்கா ஒரு வெள்ளிக்கிழமை மத்தியானம் வவுனியாவுக்குப் போங்கோ, பள்ளிவாசல்ல மத்தியானந் தொழுகை துவங்கச் சகல கடையளும் மூடுப்படுது எப்பில தப்பில ஒவ்வொருகடை திறக்குது.

ஒட்டுமொத்தமா வவுனியாவுக்க கிடந்த தமிழற்ற கடையெல்லாம் எங்க. முறைக்கு முறை ஆமியும் பொலிசும் கொளுத்திப் போட்டுப் போக கடை நடத்த முடியாமப் போச்சு. பொடியளையும் இஞ்ச வச்சிருந்து என்ன செய்யிறது. பிடிச்சு வெளியில அனுப்பிப் போட்டன் எண்டு சொல்லுறார் எங்கட பழைய எஸ்.கே கடை முதலாளி. ஆளுக்கு கண்ணும் சரியாத் தெரியேல்ல. நாங்கள் வழமையாச் சாமான் வாங்கின மீரான் சாஹ் கடை இன்னும் இருக்கு. காதிரியா ஓட்டல், வேற பேரில இருக்கும். இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள்ள தமிழர்களின்ர வாக்குப்பலத்தைக் குறைக்க பாரிய சதி நடக்குது. காதும்காதும் வச்சமாரி நடக்குது. இதுகள் காணாதெண்டு

எங்களின்ர குட்டிக்கெல்லே பின் கதவால குண்டெறிஞ்சவங்களாம் ம்...

அழவாறம் அழவாறம் தன் கரைச்சல் திருவன்பெண்டிலுக்கு கட்டியழ ஆளில்லயாம்.

என்னவோ போங்கோ ராசமணியின்ர கோலமும் குறைஞ்சு நிறமும் மாறிப்போனாள். அவளுந்தான் என்ன செய்யிற இருக்கிற நிவாரணத்தில அரை வயிறு கால் வயிறு சாப்பாடு. மருமோன் வட்டக்கச்சியால வந்து தேங்காய்ச் சாக்க அவிட்டு வச்ச களையில்லாமக் கதை சொல்லுறான். அப்பதான் பாத்தன் இளையவள் துர்க்கா ஆரோ ரெண்டு பொடியளக் கூட்டிக் கொண்டு வாறாள். ஆராக்கள் எண்டுநான் யோசிக்க, வந்தவன் என்னம்மா யோசிக்கிறியள்? நாங்கள் வீதி நாடகம் போட வந்தனாங்கள். தங்கச்சிதான் தேத்தண்ணி தாறனென்டு கூட்டிக் கொண்டு வாறாள் என்றான்.

ஏடி விசரி - நூறுகிராம் சீனி வாங்கியா எண்டு விட.... அதுக்கும் விருந்து கூட்டிக்கொண்டு வாறாள்... ம்... வாங்கோ எண்டு உள்ளுக்க கூப்பிட்டன் எத்தின பேருக்குத் தம்பி தேத்தண்ணி?

``எங்கள் ரெண்டு பேருக்கும்தான்

``மற்றவை...``

``ஒரே வீட்டுக்கு எல்லாரும் வந்தா கஷ்டமெண்டு ரெண்டு ரெண்டு பேரா இவ்வொரு வீடுகளுக்கும் பிரிஞ்சு போகினம்.

``என்ன செற்றப்பப்பா? அப்ப சாப்பாடு.

``நீங்கள் ஒராளுக்கு தாங்கோ...

நாடகம் பாக்க வரேக்க கொண்டு வாங்கோ.... மற்றவீட்டுக்காரரும் தருவினம். இப்ப மெய்யே இஞ்சயொருக்கா.. எண்டு ராசமணி இழுக்க... மருமோன் எழும்பி உள்ளுக்க போக... அங்கே கிசுகிசுப்பது எங்களுக்கும் கேட்டது.


என்ன பத்தடிக்குப் பதினைஞ்சடி குச்சு. இதுக்க என்ன ரகசியம்.

``ஆ.... அம்மா முருங்கையிலச் சுண்டல் திண்டு எவ்வளவு காலம். எனக்குத் தாங்கோ. நான் வந்து சாப்பிடுறன் என்றான் ஒருவன். மற்றவன் எட்டி ஓமம்மா பெரிசா ஒண்டும் தேட வேண்டாம். நாங்கள் இந்த மண்வாசியள்தானே. எங்களவும் கனடா யேமனியால வந்தநாங்களே.... ம்... நேரம் போகுது`` என்றவாறே தேத்தண்ணியைக் குடித்தபின் புறப்பட்டார்கள்.

பெரிய மடுச்சண்டையோட சண்டை கொஞ்சம் டம்மிட்டுப்போய்க் கிடக்கு. அப்பப்ப வீட்டுக்கு மேலால போற கிபிரும், வண்டும் (வேவு விமானம்) போய்க் கொண்டும் வந்து கொண்டு மிருந்தன. எங்க போறான் எதில போடுறான் எண்டது தான் தெரியேல்ல. நாள் முழுக்க ரேடியோ கேக்க பெற்றறி இல்ல. உந்தசைக்கில் சில்லில டைனமோ மூட்டிக் கையால சுத்தித்தான் கேக்கவேணும். செய்தியக் கேப்பம் அதுகும் அவன்ர புளுகுணிச் செய்தி, வெரித்தாஸ் செய்தி, பிபிசி. அவனுமெங்க இப்ப... இலங்கை மீட்டரில பிபிசி கேக்கத் துவங்கின பிறகு அவனும் கதிர்காமமற்ற தம்பி கணக்கிலான் அவுட்டு விடுறான். புலிகளின் குரல் எண்டு ஒரு சேவை புலியள் நடத்துகினம். என்னத்த ஏரியல உயத்திக் கட்டினாலும் அங்கின கறபிறகறபிறண்டு விட்டுவிட்டுக் கேக்கும்.

நெடுங்கேணி வேலாயுதத்தார் மோனோட ரெலிபோன் கதைக்க வவுனியாவுக்குப் போனவர். அவற்ற பெறாமோனாமட. குஞ்சியய்யா கஷ்டமெண்டு சொன்னாப்போல உண்டியல்ல காசு அனுப்பினவனாம். அதில ஒரு நல்ல ரேடியோ வாங்கிக் கொணந்தவர். அதில ஒருமாதிரி புலிகளின் குரல் இழுக்குது. பின்ன எல்லாரும் அங்கபோய் செய்திய மட்டும் கேப்பம். பின்ன பேப்பர் எண்டது மருந்துக்கும் கிடையாது. சாமான் கட்டிவாறதும் சொப்பிங்பாக் எண்டு சொல்லுற பொலித்தீன் பையிலதான். ஆனா இந்த சொப்பிங் பை தமிழுருக்குச் செய்த சேவையப்போல ஆர்செய்தது. உதைப்பற்றிச் சொல்லுகில் நான் ஏனைன் ரோட்டின்ர பாறணிப்பும் சொல்லத்தான் வேணும்.

1990, வன்னிக்குப் பொருளாதாரத்தடை போட்டாச்சு. லொறியள்ள சாமான் வாறதுக்கும் பாதையில்ல வவுனியா



ரோட்டு ஏனைன் பாதையில பிறவுண் கொம்பனி வரைக்குந்தான். இஞ்சால நொச்சிமோட்டைப் பாலத்தடி புலியளின்ர கட்டுப்பாட்டில. யாழ்ப்பாணம் மன்னார் வன்னிச் சனமெல்லாம் சாப்பாட்டுக்கே ஆலாப்பறக்குதுகள். என்ன..? விவசாய நிலங்களெல்லாம் ஆமி வரவும் போகவும் மாயிருக்க சனம் ஓடினதோ பயிர்செய்ததோ, அரிசி தட்டுப்பாடு. மண்ணெய் அறவேயில்லை. சவுக்காரம் கண்டு கனகாலம். பனங்காய் களியில உடுப்ப ஊறப்போட்டு தோய்க்கிறது தென்னம் பொச்சுச் சாம்பல்ல, வெடுக்கு நாறி மரத்தை எரிச்சு அந்தச் சாம்பல் இதுகள்ள உடுப்புத்தோய்க்கிறது. குளிக்கிறது களிமண் பூசி. சன் லைட் 2ம். 2லீ. லாம்பெண்ணை, 2லீ.தேங்காய்நெய், அரிசி 2 கிலோ, சீனி 2 கிலோ இப்பிடித்தான் கொண்டுவரலாம். பிறகு ஒரு கொஞ்ச நாளால என்ன நினைச்சாங்களோ. சைக்கில்ல சுமக்கிற அளவு சாமானக் கொண்டு போகலாம் எண்டு சொன்னாங்கள்.

யாழ்ப்பாணத்துக்கு கப்பலால கொஞ்சம் சாமான் வந்தாலும் அதுகும் நிவாரணச் சாமான்தான். ஒரு சைக்கில் எவ்வளவு சாமானச் சுமக்கும் நீங்கள் சொல்லுங்கோ... தமிழீழத்துச் சைக்கிள் எவ்வளவு சுமந்தது. கரியரில ஒரு மூடை சீனி, பாரில ஒரு மூடை மா, கரியர் ரெண்டு பக்கமும் சில்ல அண்டினாப்போல ஒருபக்கம் ஆறுலீட்டர் மண்நெய் தாங்கமாட்டாம ஆமியே கேப்பான். உதென்ன சைக்கிலோ லொறியோண்டு. மூண்டு நாலுகட்டைக்கு உருட்டித்தள்ளிக் கென்டுவந்து இஞ்சால எங்கட எல்லைக்க வரும் சாமான் பாத்தான்... உதுகும் பிழை. போட்டான் மற்றச்சட்டம். என்ன? சைக்கில் கொண்டு வர ஏலாது. உள்ளுக்கு நாளாந்தம் அவன் எடுக்கிற சனமே அறுநூறு எழுநூறு பேர்தான். காலம பதினொரு மணியோட போறவை சரி. பின்நேரம் நாலரைக் கிடையில வாறவை சரி.

சனம் நூற்றுக் கணக்கில எங்கட எல்லைக்கும் அவங்கட எல்லைக்கு மிடையில சைக்கிலப் போட்டிட்டு வவுனியா நகரத்துக்க போகும். தலைச்சுமையாக சாமானுகளைக் கொண்டு வந்து அவங்கட எல்லை தாண்டின பிறகு சைக்கில்ல கட்டிக் கொண்டு போவினம். பாழ்படுவார் ஒருநாள் ஹெலி ஹெப்பில வந்து அந்தப்பக்கம் ஒரு குண்டப் போட்டிட்டாங்கள். அது வெடிச்சுப் புல்லில மண்டிக் கடவுளே சனத்தின்ர சைக்கிலுகள் எல்லாம் எரிஞ்சு போச்சு. ரையருகள் ரியூப்புகள் எல்லாம் எரிஞ்சு பெயின்ருகளும் கருகி ஒரு போர்க்களமாக் கிடந்த சைக்கிள் நிலையத்தில சனம் கதறியழுதது இண்டைக்கும் மறக்கேலாது.

காலமை வெள்ளணக் கருகல்ல எழும்பி தேத்தண்ணி குடிச்சமோ இல்லையோ எண்ணைக் கானுகளக் கொண்டு சைக்கில்ல இருவத்தியாறு கட்டை (45Km) ஆனைக்காட்டுக்கால பயந்து பயந்து ஓடி கல்மடுரோட்டுக்கு வர சாடையா விடியும். பிறகும் அந்தாபிடி இந்தாபிடியெண்டு ஓடி முன்னுக்கு வரிசையில நிண்டாத்தான் உள்ளுக்கு (நகரத்துக்கு) போகலாம். பிந்தினாச் சில நேரம் திரும்பி வரவேண்டியதுதான். ஒண்டுவிட்டொருநாள் பயணம். ஆந்த ஆறு லீட்டர் எண்ணையக் கொணந்து இஞ்சால ஒரு பத்து மடங்கு விக்கலாம். என்ன? எட்டுரூவாக்கு பீயெஸ் கடையில எண்ணெய் வாங்கி இஞ்சால இவளவு கஸ்டப்பட்டுக் கொணந்து எண்பது ரூபாக்கு விக்கலாம். அதிலதான் சாப்பாட்டுச் சிலவு போகுது. ஓயில் பெற்றோல் சொட்டும் கொண்டு வர ஏலாது. அதையும் ஆரோ கானில கடத்திப் போட்டாங்கள். அதோட கானும் கொண்டுவரப்படாது என்டாங்கள். கொண்டுவாற சாமனுகளத் திறந்து செக்பண்ணவும் பயம். என்ன செய்வான், ஆமிக்காறன் பாவம். போட்டான்; எண்ணெய்க்கான் வேண்டாமெண்டு. அதுக்கயும் அந்த நாளையில சக்கை (வெடி மருந்து) வைக்கிறவங்கள் பொடியள்.

எங்கட சனத்துக்கு இவன்ர சட்டம் தூசு. அவன் தடுக்கில நுழைஞ்சா நாங்கள் கோலத்துக்க நுழைவம் எண்டு தெரியாதோ. டபுள் சொப்பிங் பாக் எண்ணெய்க்கானா மாறிச்சு. சொப்பிங் பாக்கில எண்ணெயக் காவுறதுக்கு தனித்திறமை வேணும் கையுளையுது எண்டு எங்கயும் கீழ் வைக்கேலுமோ, ஏழெட்டுக் கட்டைக்கு கைவிடாமக் கொணந்து எங்கட எல்லைக்கு வந்து தான் கலனுக்கு மாறும். அரிசி, சீனி, மா, பருப்பு எல்லாம் எல்லாம் சொப்பிங்பைதான். பின்நாளில் ஆயிரக்கணக்கான போராளிகளுக்கு அன்றாட உணவுக்கும் சொப்பிங் பைதான். ஆனா நாங்கள் அதுக்குமுதல் வாழையிலை, தாமரையிலை எண்டு பாவிச்சனாங்கள் தான். எங்கட மண்ணுக்க பார்க்குமிட மெங்கும் நீக்கமற நிறைஞ்சிருக்கிறது, இப்ப பொலித்தீன் தான்.

உங்கின ஒரு சொப்பிங்பை கிடந்தா எடுங்கோ சாப்பாடு கட்டுறதுக்கு. பாட்டுக் கேக்கிது நாடகந்துவங்கப் போறாங்கள் போல.``என்ற ராசமணி, தானே பைதேடி சாப்பாட்டைக் கட்டினாள். முருங்கையிலையோட கோழிக்கூட்டுக்க கிடந்த முட்டையும் சேர்ந்திட்டுபோல மணக்குது.

நாடகத்தோட நடந்த கூட்டத்தில அண்டைக்கொரு நல்ல செய்தி வந்தது. எனக் கெண்டா கையுமோடேல்ல காலுமோடேல்ல. உதை பொடியள் எப்பிடிச் செய்து முடிக்கப் போறாங்களோ...? செய்திடுவாங்கள். புலியா கொக்கா...?

**- தமிழ்க்கவி**




*புத்திசிகாமணியாரே! கிழக்கில் தொடரும் படுகொலைகளும் வன்செயல்களும் மீண்டும் போர் வெடிக்குமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து உங்கள் கருத்தென்ன?*

**மா. தங்கரத்தினம் – சூரிச், சுவிஸ்.**

உண்மையிலேயே கருணாவின் வெளியேற்றத்துடன் போர் ஆரம்பித்துவிட்டது. ஆனால் அந்த யுத்தம் விடுதலைப்புலிகள் மீது அரச படைகள் மேற்கொள்ளும் பிரகடனப்படுத்தப்படாத ஒருதலைப்பட்ச யுத்தமாக தொடர்ந்தவண்ணம் இருக்கிறது. கடந்த சில மாதங்களில் மட்டும் 22 போராளிகள் கிழக்கில் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். இதுவரை புலிகள் உச்ச பட்சமான பொறுமையைக் கடப்பிடித்துள்ளார்கள். இனியும் பொறுமை காக்க முடியாது என்ற நிலையில் மீண்டும் பெரும்போர் வெடிக்க வாய்ப்பிருக்கிறது.

*எங்கட டக்ளஸ் தேவானந்தா ஐயா ஜனநாயகம் போதிக்கும் வாத்தியாராக, அதுவும் கருணாவுக்கு ஜனநாயகம் போதிக்கும் வாத்தியார் ஆற்றலை எப்போது பெற்றுக்கொண்டார் புத்திசிகாமணியாரே?*

**த. கணநாதன் – பாரிஸ், பிரான்ஸ்**

ஓ! அதுவா, பல வருடங்களுக்கு முன்பே பல இயக்கத்தவர்களும் தமிழ் நாட்டில் தங்கியிருந்த வேளை, சூளைமேட்டில் தங்கியிருந்த டக்ளஸ் ஐயா அயலவர்களுடன் ஏற்பட்ட சிறு தகராற்றில் தன்னிடம் இருந்த துப்பாக்கியைத் தூக்கி அந்த அப்பாவி மக்களை நோக்கி கண்மூடித்தனமாக சுட்டுத்தள்ளினார். அதில் சிலர் இறந்தார்கள். அன்று கையில் தூக்கிய டக்ளசின் ஜனநாயகம் இன்றுவரை கண்மூடித்தனமாக போலித்தனமாக, தேசத் துரோகமாக மக்கள் விரோதமாக இன்றுவரை தொடர்ந்த வண்ணமே இருக்கிறது.

*தீவிர அரசியலில் குதிக்கப்போவதாகத் தெரிவித்திருக்கும் நடிகர் விஜயகாந்தின் எதிர்காலம் எப்படி இருக்கப்போகிறது!*

**த. சஞ்சீவன் – பாரிஸ், பிரான்ஸ்.**

தமிழ் நாட்டைப் பொறுத்தவரை எம்.ஜி. ஆர் அவர்களைத் தவிர, சினிமாவில் இருந்து அரசியலுக்கு வந்து பிரகாசித்ததாக எவரும் இல்லை. ஜெயலலிதாவைப் பொறுத்தவரை எம்.ஜி.ஆர் கொடுத்த பிச்சையிலேயே தற்போதுவரை அரசியல் நடத்திக்கொண்டிருக்கிறார். ராஜேந்தர், பாக்கியராஜ், சிவாஜி, நெப்போலியன், ராதிகா இறுதியாக ரஜனிவரை சினிமாவிலிருந்து அரசியலுக்குத் தாவி மூக்குடையப்பட்டவர்கள்தான். இந்நிலையிலே விஜயகாந்தின் அரசியல் பிரவேசமும், கட்சி தொடங்கும் முயற்சியும் அவரையும் சூனியத்திற்குள் தள்ளிவிட வாய்ப்பிருக்கிறது. ஆனாலும் கலப்படமற்ற மதுரைத் தமிழர், நீண்டகால உறுதியான ரசிகர் மன்றங்களை கொண்டமைந்தவர் என்றவகையில் வெற்றிகரமாக அரசியலில் முன்நகர வாய்ப்பிருப்பதையும் மறப்பதற்கில்லை.

*அமெரிக்காவின் இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் வட-கிழக்கு இராணுவ முகாம்களுக்குச் சென்று அங்குள்ள இராணுவ அதிகாரிகளுடன் இரகசிய சந்திப்புகளை மேற்கொண்டு வருவதன் நோக்கம் என்ன?*

**த. சக்தியபாலன் – பாரிஸ், பிரான்ஸ்.**

தன்னை ஒரு சமாதான தூதுவன் போல் காட்டிக் கொண்டு மறுபுறத்தே சிறீலங்காவிற்கு ஆயுத தளபாடங்களை வழங்கியும், இராணுவ ஆலோசனைகளை வழங்கியும், புலனாய்வுச் சந்திப்புகளை ஏற்படுத்தியும் சிறீலங்காப்படைகளை மற்றொரு யுத்தத்திற்கு தயார்படுத்தியும் உஷார்படுத்தியும் வருகிறது அமெரிக்கா. முக்கியமாக விடுதலைப்புலிகளின் இராணுவ பலத்தைச் சீர்குலைத்து அவர்களைப் பலவீனப்படுத்தி சிறீலங்காவில் தன்னாதிக்கத்தையும் செல்வாக்கையும் பெற்றுக்கொள்வதே அதன் முக்கிய நோக்காக உள்ளது. ஆனால் அதுவே அமெரிக்காவின் நோக்காக இருந்தால் உலகில் வேறெங்கும் பெற்றிராத புதிய பாடங்களை ஈழத்தில் அமெரிக்கா பெற்றுக்கொள்ளும் என்பது மட்டும் உண்மை.

**ராஜீவ் கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட 26 பேரில் ஒருவரான பேரறிவாளனின் தாயின் உண்மைக் கதையை மிகவும் உணர்வு பூர்வமாகவும் சிறந்த நாவலுக்கான அம்சங்களோடும் பதிவாக்கியிருக்கின்றார் பூங்குழலி.**

*கருணா புதிய கட்சி ஒன்றை ஆரம்பிக்கப்போகிறாராமே?*

**த. கனகலிங்கம் – பொந்துவாஸ், பிரான்ஸ்.**

கொலையாளிகள், கொள்ளைக்காரர்கள், சமூகவிரோதிகள், தேசத் துரோகிகள் எல்லாம் சரணடையும் கூடாரமாக 'கட்சிகள்' மாறிவருவது மிக மிக ஆபத்தான ஒரு நிலையாகும். இந்தக் கருணா பேர்வழிகள் ஜனநாயக முகமூடிக்குள்ளும் கட்சிக்குள்ளும் மறைய முற்படுவதானது தம்மை முன் தற்பாதுகாத்துக்கொள்ளும் முயற்சியேயன்றி வேறொன்றுமல்ல. இவர்கள் எதற்குள் மூடி மறைந்தாலும் இவர்கள் யாரென்பது மக்களுக்குத் தெரியும்.

*புத்திசிகாமணியாரே! நீங்கள் அண்மையில் வாசித்துச் சுவைத்த புத்தகம் எது?*

**த. செல்வநிதி – பாரிஸ், பிரான்ஸ்.**

நான் அண்மையில் வாசித்து நெகிழ்ந்த புத்தகம் பழ.நெடுமாறன் அவர்களின் மகள் பூங்குழலி எழுதி தற்போது வெளிவந்திருக்கும் 'தொடரும் தவிப்பு' என்கின்ற புத்தகமாகும். ராஜீவ் கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட 26 பேரில் ஒருவரான பேரறிவாளனின் தாயின் உண்மைக் கதையை மிகவும் உணர்வு பூர்வமாகவும் சிறந்த நாவலுக்கான அம்சங்களோடும் பதிவாக்கியிருக்கின்றார் பூங்குழலி. தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட மூவரில் ஒருவராக தற்போதுவரை இருந்துவரும் பேரறிவாளன் கைது செய்யப்பட்ட நாளில் இருந்து தற்போதுவரை அவரின் அற்புதத் தாயார் படும் மன உளைச்சல்களும் அந்த வழக்கோடு சம்பந்தப்பட்ட பல்வேறு நிகழ்வுகளும் கதையாக விரிகின்றது. ஒவ்வொருவரும் வாங்கி வாசிக்கவேண்டிய புத்தகம் `தொடரும் தவிப்பு'

*அண்மையில் கொழும்பில் நடைபெற்ற தற்கொடை குண்டுத் தாக்குதல் சம்பவம் எதனை வெளிப்படுத்துகிறது?*

**சி. சந்திரபாலா – இவ்றி, பிரான்ஸ்.**

அக்குண்டுத்தாக்குதலை நடத்தியவர்கள் யாரென்பது இதுவரை தெரியாத போதிலும் எதிர்காலத்தை முன்னறிவிக்கும் அபாய சங்கொலியாகவே அத்தாக்குதல் அமைந்துள்ளதெனலாம். கிழக்கில் தொடர்ச்சியாக அரச படைகள் தமிழ் கைக்கூலிகளை வைத்து நடாத்திவரும் உளவியல் யுத்தம் மறுபுறத்தே புலிகளாலும் நடாத்தப்படுமேயானால் அதை அரசினால் தாங்கிக் கொள்ள முடியாத சூழலே ஏற்படும். அத்துடன் மீண்டும் போர் அபாயத்திற்கான புறச்சூழலையும் அது தோற்றுவித்துவிடும் என்பதே யதார்த்தமாகும்.

# தமிழீழத் தமிழரின் வாழ்க்கையுடன் போராட்டமும் பின்னிப்பிணைந்துள்ளது

## - தமிழீழ மகளிர் அரசியல்துறை பொறுப்பாளர் -

(12.07.04)

தமிழீழத் தமிழரின் வாழ்க்கையுடன் போராட்டமும் பின்னிப்பிணைந்துள்ளது. இவ்வாறு தமிழீழ மகளிர் அரசியல்துறை பொறுப்பாளர் தமிழினி அவர்கள் தெரிவித்தார். போரும் வாழும் எமது மக்களுடன் கலந்துள்ளது. தமிழ் மக்களுக்கு வாழ்க்கையே போராட்டமாகி விட்டது. படைப்பாக்கங்களுக்குரிய கருப்பொருட்கள் எமது அன்றாட வாழ்நாளிலேயே இருக்கிறது. உள்ளதை உள்ளபடியே படைக்கும் போது அது எல்லோர் மனதிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். இப்படைப்பாக்கங்களை உருவாக்கிய நம் எழுத்தாளர்களை கௌரவிப்பதில் நாம் பெரும் மகிழ்வு அடைகின்றோம். கப்டன் வானதி தமது போராட்ட வாழ்க்கையின் பல துன்பங்களையும் மக்கள் படும் அவலங்களையும் சந்திக்கின்றார்.

தனது இறுதிக்கணத்தில் இவ்வாறு எழுதிச்செல்கின்றார். `எழுதுங்களேன் நான் எழுதாது செல்லும் என் கவிதையை எழுதுங்களேன்' அவர் கூறிச்செல்வது படைப்பிலக்கியங்களை மட்டுமல்ல, தான் இந்த மக்களுக்காக போராடி இடையில் விட்டுச்செல்லும் பணிகளையும் ஆகும். இவ்வாறு தமிழீழ மகளிர் அரசியல்துறை பொறுப்பாளர் தமிழினி அவர்கள் நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்ற கப்டன் வானதி வெளியீட்டகத்தால் நடாத்தப்பட்ட மூத்த பெண் படைப்பாளிகளைக் கௌரவித்தலும் இலக்கியப் போட்டி 2004 பரிசளிப்பு விழாவில் ஆற்றிய சிறப்புரையில் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை 10.00 மணியளவில் கிளிநொச்சியில் அமைந்துள்ள மாவட்ட பண்பாட்டு மண்டபத்தில் கப்டன் வானதி வெளியீட்டகத்தின் தமிழவள் அவர்களின் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன. முதலில் பொதுச்சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் அவர்கள் ஏற்றினார். தமிழீழ தேசியக் கொடியினை 2ம் லெப் மாலதி படையணிப் போராளி மலைமகள் அவர்கள் ஏற்றிவைத்தார். தொடர்ந்து அரங்கினுள் நிகழ்வுகள் ஆரம்பமானது. கப்டன் வானதியின் திருவுருவப் படத்திற்கான ஈகைச்சுடரினையும் மலர்மாலையினையும் தமிழீழ மகளிர் அரசியல்துறை பொறுப்பாளர் தமிழினி அவர்கள் அணிவித்தார். காலை நிகழ்வாக இளம் பெண் எழுத்தாளர்களுக்கான படைப்பாக்கக் களம் இடம்பெற்றது. இதில் யாழ் பல்கலைக் கழகத்தினைச் சேர்ந்த திரைப்பட விமர்சகர் ஜெசுராசா அவர்களும் எழுத்தாளர் செம்மணச்செல்வன் அவர்களும் படைப்பாக்க கலை தொடர்பான வகுப்புகளை எடுத்தனர். இதில் எழுத்தாளர்கள் எழுதும்போது எவற்றைக் கவனித்தல் வேண்டும் எனவும் கலந்துரையாடல்களை மேற்கொண்டனர்.

பிற்பகல் நிகழ்வுகள் 3.30 மணியளவில் ஆரம்பமானது. அகவணக்கத்துடன் நிகழ்வுகள் ஆரம்பமாகியது. தலைமையுரையினைத் தொடர்ந்து சிறப்புரையினை தமிழீழ மகளிர் அரசியல்துறை பொறுப்பாளர் தமிழினி அவர்கள் நிகழ்த்தினார். தொடர்ந்து தமிழீழ மூன்று பெரும் பெண் படைப்பாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. படைப்பாளர் திருமதி தாமரைச்செல்வி, போராளிப் படைப்பாளர் திருமதி தமிழ்க்கவி, படைப்பாளர் ஆதிலட்சுமி சிவகுமார் ஆகியோருக்கான கௌரவத்தினை 2ம் லெப் மாலதி படையணி சிறப்புத்தளபதி கேணல் விதுஷா அவர்கள் வழங்கிக் கௌரவித்தார்.

# கொழும்பில் கெடுபிடி அதிகரிப்பு......

(01ம் பக்கத் தொடர்ச்சி)

மோட்டார் சைக்கிள் படையணிகளும் ரோந்து நடவடிக்கையைத் தீவிரப்படுத்தியுள்ளன. இராணுவப் பொலிஸ் மோட்டார் சைக்கிள் படையணிகள் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. பழைய வீதிச் சோதனை நிலையங்களும் தற்போது புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் படையினரும், பொலிசாரும் நிறுத்தப்பட்டு கண்காணிப்புப் பணிகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலைய தற்கொலைக் குண்டுதாரி புறக்கோட்டை டாம் வீதியிலுள்ள விடுதி ஒன்றிலிருந்தே வந்துள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்ததால் தற்போது விடுதிகளிலும் பொலிஸ் கெடுபிடி அதிகரித்துள்ளது. விடுதிகளில் தங்குவோர் பற்றிய பூரண விபரங்களைப் பதிவு செய்யுமாறு அவற்றின் உரிமையாளர்கள் பணிக்கப்பட்டுள்ளனர். சகல விடுதிகளுக்கும் செல்லும் பொலிசார் இந்தப் பணிப்புரையை விடுப்பதுடன் அங்கு தங்குவோர் பற்றிய விபரங்களையும் கோரியுள்ளனர். இதைவிட கேந்திர முக்கிய நிலைகளினதும் அமைச்சுகளினதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

# கண்காணிப்புக் குழுத் தலைவர் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

(11.07.04)


யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் துருண்ட் பியூறு ஹொவ்ட கடந்த ஞாயிற்றுக் கிழமை கிளிநொச்சிக்கு விஜயம் செய்து தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் பேச்சு நடத்தினார். யுத்த நிறுத்த ஏற்பாடுகள், மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இடம்பெறும் சம்பவங்கள் மற்றும் பொதுவான அரசியல் நிலைமைகள் ஆகியவை குறித்து இருவரும் ஆழமாகக் கலந்துரையாடினர் என விடுதலை புலிகளின் தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

தமிழ்ச்செல்வனோடு சமாதானச் செயலகப் பொறுப்பாளர் புலித்தேவனும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டார். ஞாயிறு காலை 9.30 மணியளவில் உலங்குவானூர்தியில் கிளிநொச்சிக்கு சென்ற கண்காணிப்புக்குழுத் தலைவர், காலை 10.30 மணிமுதல் 11.30 மணிவரை விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் தமிழ்ச்செல்வனைச் சந்தித்து பேசினார்.

# பாரிசில் பெண் மீது வன்முறை சாட்சிகளைக்கோரும் பொலிசார்

(12.07.04)

பாரிசின் புறநகர் பகுதியில் கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற சம்பவம் ஒன்று தொடர்பாக பொலிசார் சாட்சிகளை கோரியுள்ளனர். இதுவரை சாட்சிகளுக்கு எவரும் முன்வரவில்லை என்றபோதிலும் தொடர்ந்தும் ஊடகங்களின் வாயிலாக அறிவித்தல்கள் விடுக்கப்பட்டுவருகின்றன.



பரிசின் புறநகர்ப் பகுதியில் தொடருந்து ஒன்றில் பயணம் செய்துகொண்டிருந்த பெண்மணி ஒருவர் ஆறு இளைஞர்களால் பல நிமிட நேரங்களுக்கு உடல் ரீதியான சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இச்சம்பவத்தில் பாலியல் வல்லுறவு முயற்சிகள் எவையும் இடம்பெறவில்லை என்றபோதிலும் மத ரீதியான அத்துமீறல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. பத்திரிகைகளுக்கு தரப்பட்டுள்ள செய்திகளை அடிப்படையாகக்கொண்டு பார்க்கும்போது கடந்த 09ம் திகதி வெள்ளியன்று காலை 9.30 மணியளவில் லூவர் என்ற இடத்தில் இருந்து இரண்டு மாடி தொடருந்தில் (RER D) ஒரு இளம்பெண் ஏறியுள்ளார். இவரது கைகளில் குழந்தையொன்றும் இருந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. தொடருந்தின் கீழ்ப்பகுதியில் இவர் பயணம் செய்துகொண்டிருந்தவேளை வட ஆபிரிக்க பூர்வீகத்தை கொண்டவர்கள் எனக்கருதப்படும் நான்கு இளைஞர்களும் பின்னர் கறுப்பு இன இரண்டு இளைஞர்களும் அப்பெண்ணின் கைப்பையை பிடுங்கி ஆராய்ந்துள்ளனர். அதில் காணப்பட்ட ஓர் முகவரியை கொண்டு அவர் ஒரு யூத இனத்தவர் எனக்கூறி அவர் மீது பலாத்காரத்தை மேற்கொண்டுள்ளனர். பலாத்காரத்தை மேற்கொண்ட இளைஞர்களின் கைகளில் கத்திகள் காணப்பட்டதாக சொல்லப்படுகிறது. இவர்கள் அப்பெண்ணின் கூந்தலையும் அறுத்துள்ளனர் என்றும் உடைகளைக்கீறி நாசம் செய்தனர் என்றும் கறுப்பு நிற அடையாளமிடும் பேனையினால் அவரது வயிற்றில் அடையாளங்களையும் இட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவம் பற்றி சாட்சிகள் விளக்கங்கள் அளிக்க விரும்புபவர்கள் *01 39 24 71 93* என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு பாதுகாப்புத்துறையினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.


# வெளியீட்டு விழா




நிரு - இசை பாவன்னா - உரை சுதன்ராஜ் - நாடகம்


## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



*அன்னை மடியில்:* *10.02.1965* *ஆண்டவன் அடியில்:* *16.06.2004*

### அமரர் கிருஷ்ணபிள்ளை உதயராஜன்

எமதன்புத் தெய்வத்தின் மரணச் செய்தியறிந்து நேரிலும் தொலைபேசி, கடிதம் மூலமும் தொடர்புகொண்டு அனுதாபம் தெரிவித்த உள்நாட்டு, வெளிநாட்டு உறவினர், நண்பர்களுக்கும் ஈமக்கிரியையில் கலந்துகொண்டு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி, இறுதி யாத்திரைவரை கலந்து உதவிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் அவரது இல்லத்தில் 16.07.04 வெள்ளிக்கிழமை நடைபெறும். மறுநாள் அவரது இல்லத்தில் மதியம் 12.00 மணிக்கு நடைபெறும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதன் பின் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

தகவல்: அன்பு மனைவி, பிள்ளைகள், சகோதரசகோதரிகள்

**தொடர்புகளுக்கு: 0031-433617066, 0031 629500212**


உங்கள் வீட்டில் நிகழும் விசேட வைபவங்களுக்கான உணவு வகைகளும் சிற்றுண்டி வகைகளும் குறைந்த விலையில் நிறைந்த சுவையுடன் வாங்கி உண்டு மகிழ்ந்திட நாடுங்கள்

**RESTAURANT ROYALTANDOURI**

***Métro: Bellville***

**தொடர்புகளுக்கு: 01 43 14 67 49 - 06 64 00 66 62 - 06 10 59 37 44**


## மரண அறிவித்தல்



*மலர்வு:*
**06.03.1998**

### கணேஸ் ரவீந்திரா

*உதிர்வு:*
**11.07.2004**

ரவீந்திரா சுமதி தம்பதிகளின் செல்வப் புதல்வன் கணேஸ், சுகயீனம் காரணமாக 11.07.2004 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

இவர் மன்னார் விடத்தல்தீவைச் சேர்ந்த காலஞ்சென்ற சோமசுந்தரம் - மனோன்மணி, நீர்வேலி வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற கருணாகரன்-யோகேஸ்வரி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இவரது இறுதிக்கிரிகைகள் 15.07.2004 வியாழக்கிழமை 8.30 மணிக்கு Hopital St-Louis (M°-Goncourt) முகவரியில் நடைபெற்று, 11.00 மணிக்கு Griny Centre இல் உள்ள Nouveau Cemetire மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

16, Rue des Sablons (porte 196) 91350 Grigny, France.

*தொடர்புகளுக்கு: ரவி – 01 69 02 35 06 06 10 34 57 98*
*சுந்தர் – 01 69 24 57 62 06 62 46 24 69*
*மனோ – 06 61 70 65 78*

தற்போது அவுஸ்திரேலியாவில் வாழ்ந்துகொண்டிருக்கும் கலாநிதி முருகர் குணசிங்கம் அவர்களின் 'இலங்கைத் தமிழ்த் தேசிய வாதமும் அதன் ஆரம்பத் தோற்றம் பற்றியதோர் ஆய்வும்' என்கின்ற வரலாற்று நூல் பலரின் மிகுந்த கவனத்திற்குரியதாகியுள்ளது.

ஏற்கனவே ஆங்கிலத்தில் வெளிவந்திருந்த இந்நூல் தற்போது தமிழ் வடிவம் பெற்று இவ்வருட ஆரம்பத்தில் தாயகத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டு தற்போது ஐரோப்பிய நாடுகளிலும் அறிமுகவிழா நடைபெற்று வருகிறது.

08.08.2004இல் பாரிசில் இந்நூலுக்கான அறிமுக விழா நடைபெறவிருக்கும் இவ்வேளையில் அந்நூல் குறித்தான ஆழமான மதிப்புரை ஒன்றை ஈழநாதம் இதழில் இருந்து மீள் பிரசுரம் செய்கிறோம். இந்த வரலாற்று நூலில் நீங்கள் இலகுவாக நுழைந்துகொள்ள இக்கட்டுரை உதவும் என நினைக்கின்றோம். *(ஆ–ர்)*

# இலங்கைத் தமிழர் தேசியம்

## அதன்தோற்றம் பற்றிய ஆய்வு

*ஆக்கியோன்: முருகர் குணசிங்கம்    வெளியீடு: எம். வீ பிரசுரம், சிட்னி    மொழி ஆங்கிலம் (அவுஸ்திரேலியா)*

*`தமிழ் மக்களாகிய நாம் ஒரு தேசிய கட்டமைப்பைக் கொண்டவர்கள். வரலாற்று ரீதியாக நாம் ஒரு தேசியமாகவே வாழ்ந்து வந்தோம். தேசியமாகவே வாழ்ந்து வருகிறோம். தேசியமாகவே வாழப் போகிறோம்'*

**— தமிழீழத் தேசியத் தலைவர்**
**வே.பிரபாகரன் அவர்கள்**

தமிழன் கண்விழித்த நாட்தொட்டு அவனுடைய தேசியம் பற்றிய ஆய்வுப்பணி நடைபெறுகின்றது. உலகின் அரசறிவியலாளர்களைக் கவர்ந்த ஆய்வுப் பொருளாகத் தமிழர் தேசியம் நிலவுகின்றது. திரு. முருகர் குணசிங்கத்தின் நூல் ஈழத் தமிழர் தேசியம் பற்றிய ஆய்வுக்கு முக்கிய பங்களிப்புச் செய்கின்றது.

தமிழர் தேசியம் அண்மைக் காலப் பயிர் என்ற கூற்றை ஆசிரியர் மறுத்துரைப்பதோடு அதனுடைய தொன்மையை சான்றாதாரங்களுடன் நிரூபித்துள்ளார். அவருடைய ஆய்வுத் திறன் போற்றுதற்குரியது. தனது புலமை முக்கியத்துவத்தினாலும் மதியறிவினாலும் பிற ஆய்வு நோக்கர்களின் கவனத்தை அவர் ஈர்த்துள்ளார்.

ஈழத் தமிழர்களின் பல்வேறுபட்ட தேசிய வரலாறு பற்றிய நூல்களில் முன்னோடியாகத் திகழ்வது 1923 இல் முற்றுப்பெற்று 1926 இல் அச்சு வாகனம் ஏறிய `பண்டைய யாழ்ப்பாணம்' என்ற முதலியார். செ. இராசநாயகம் எழுதிய நூலாகும். அதற்கு அணிந்துரை வழங்கிய டாக்டர் எஸ். கிருஸ்ணசாமி அய்யங்கார், `இந்த நூல் பெரும் உழைப்பையும் பரந்த ஆராய்ச்சித் திறனையும் உள்ளடக்கியது. இதை எவ்வித தயக்கமுமின்றி என்னால் உறுதிப்படுத்த முடியும் யாழ்ப்பாணத்திற்கு வெளியே அறியப்படாத பல வரலாற்று மூலகங்கள் இந்த நூல் மூலம் வெளிவந்துள்ளன' என்று சான்று வழங்கினார்.

முதலியார் நூலின் வரிசையில் 1999 இல் வெளிவந்த முருகர் குணசிங்கத்தின் நூலுக்கு முன்னுரை எழுதிய பேராசிரியர் ஏ.ஜே.வில்சன், `ஈழத் தமிழர் தம் சுயநிர்ணய கோரிக்கை பற்றிய புதிய பாதை திறக்கும் முன்னோடி முயற்சியை டாக்டர் முருகர் குணசிங்கம் நிறைவேற்றியுள்ளார். அவர் கையாளும் ஆதாரச் சுவடிகள் முதன் முறையாக வெளிச்சம் காண்கின்றன' என்று கூறியுள்ளார்.

எஸ்.ஜே.வி செல்வநாயகத்தின் மருகரான வில்சன் தமிழர் தேசியம் பற்றிய கற்கை நெறிக்கு உதவும் இரு முக்கிய நூல்களை வழங்கியுள்ளார். இலங்கையின் உடைவு (பிரசுரம் 1988), எஸ்.ஜே.வி. செல்வநாயகமும் இலங்கைத் தமிழர் தேசியமும் 1947-1977 (பிரசுரம் 1994)


1926-1999 காலப்பகுதியில் வெளியிடப்பட்ட பல்வேறு ஈழத் தமிழர் வரலாற்று நூல்களை பட்டியலிடுவது மிகவும் கடினம். தமிழ் அறிஞர்கள் வரிசையில் எத்தனையோ பேர் இருந்துள்ளனர். அவர்கள் யாவரும் தமிழ் மக்களுக்கான அறிஞர்களல்லர். தமிழ் மக்களுக்கான அறிஞர்கள் பலர் இருந்துள்ளனர். அவர்கள் யாவருமே தமிழர்களல்லர்.

வரலாற்று நூல்கள் இரு திறத்தன என்கிறார் இனிய நண்பர் அமரரான பேராசிரியர் க. கைலாசபதி. செல்லத்துரை குணசிங்கம் படைத்த `கோணேஸ்வரம்' என்ற நூலுக்கு அவர் வழங்கிய அணிந்துரையில் இக்கருத்து விரிவுபடுத்தப் படுகின்றது. `அகல நோக்கு நூல்கள் ஒருவகை, ஆழ நோக்கு நூல்கள் இன்னுமொரு வகை' என்று கூறும் கைலாசபதி, `முன்னவற்றிலே எடுத்துக்கொண்ட பொருள் மிகப் பரந்த அளவிலே விரிவகல்வான முறையிலும் தொலை நோக்கிலும் ஆராய்ந்து எழுதப்படும். பின்னவற்றிலே, எடுத்துக்கொண்ட விடயத்தின் நுணுக்க விவரங்களும் சிறுதிறச் செய்திகளும் மிக நுட்பமான முறையில் நோக்கி எழுதப் படும்' என்கிறார்.

இத்தொடர்பில் அவர் விதிக்கும் பிறிதோர் குறிப்பையும் பதிவது பயன்தரும் `அகலநோக்கு நூல்களில் போதியளவு நுண் ஆய்வு இன்மையும், ஆழநோக்கு நூல்களில் முழுமையாகக் காணும் திறன் அருகியிருத்தலும் அடிக்கடி காணப்படும் குறைபாடுகளாகும்'

டாக்டர் குணசிங்கத்தின் ஈழத் தமிழர் தேசியம் பற்றிய நூல் எந்த வகையைச் சார்ந்தது? அது இரண்டாம் வகையது என்பது ஆய்வு நோக்கர்களின் முடிவு. சான்று குறைவான சூழ்நிலையில், ஆழ நோக்குடன் துழாவிப் பொருள் தேடியுள்ளார் என்று அவருடைய நூலை சுருக்கமாக மதிப்பீடு செய்யமுடியும்.

ஈழத் தமிழர் வரலாறு என்பது யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை மட்டக்களப்பு அடங்கலான கிழக்கு என்ற மூன்று பகுதிகளையும் உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும். டாக்டர் குணசிங்கம் தனது ஆய்வுக்களத்தை யாழ்ப்பாணத்துடன் நிறுத்திக்கொள்கிறார். தனது நூலின் தலைப்பை யாழ்ப்பாணத் தமிழர் தேசியம் என்றிருந்தால் மிகவும் பொருத்தமாக இருந்திருக்கும். ஆசிரியர் மேல் பழி சுமத்துவதாக எண்ணலாகாது. தொடர்ச்சியாக எழுதப்பட்ட ஈழத் தமிழர் யாபேரையும் உள்ளடக்கிய வரலாறு இல்லாத வெற்றிடம் முழுமையான பரந்த ஆய்வுக்குத் தடங்கலாக இருக்கின்றது.




சில காத்திரமான ஆய்வுரைகள் சுட்டிக் காட்டுவது போல மட்டக்களப்பு, வன்னி தொடர்பான வரலாற்று ஆய்வுகள் இதுவரை தோன்றவில்லை. உள்ளவை கர்ண பரம்பரைக் கதைகள் நூல் வடிவம் பெற்றவையாகும். மட்டக்களப்பு மான்மியம் விதிவிலக்காக அமைகின்றது. புறநிலையான ஆய்வுகள் மிகவும் வேண்டற்பாலது.

ஆய்வாளர் சேரனை டாக்டர் குணசிங்கம் தனது நூலின் பக்கம் 24 இல் விரிவாக மேற்கோள் காட்டுகிறார். `தமிழர் தேசிய மறுமலர்ச்சிக்கு யாழ்ப்பாணம் மையமாக இருந்தது' என்று ஆர்.சேரன் தனது ஆய்வுக் கட்டுரையில் தெரிவிக்கின்றார். *(R. CHERAN CULTURAL POLITICS OF TAMIL NATIONALISM -ASIA BULLETIN VOL 12, 1992)* இதே கட்டுரையில் தமிழர் தேசிய எழுச்சிக்குப் பண்பாட்டு அடிப்படைகள் முக்கிய காரணங்களாக இருந்தன என்றும் சேரன் வாதிடுகிறார்.

இலங்கை வாழ் தமிழினத்தின் பண்பாட்டு மொழியியல் உணர்வுகளை முதன்முதலாக தர்க்க ரீதியாகவும் ஆய்வு நோக்குடனும் பரிசீலனை செய்த பேராசிரியர் க. கைலாசபதியின் *`CULTURAL AND LINGUISTIC CONSCIOUSNESS OF THE TAMIL COMMUNITY* என்ற கட்டுரையின் மையக் கருத்து பின்வருமாறு அமைகின்றது.

இலங்கைத் தமிழர்களின் பண்பாட்டு மற்றும் மொழியியல் உணர்வுகளின் வளர்ச்சியை தனித்து ஆய்வு செய்ய முடியாது. அப்படியான உணர்வுகளுக்கு அடிப்படையாக அமைந்த அரசியல் மற்றும் பொருளாதாரக் காரணிகளைத் தள்ளிவைக்க முடியாது. அப்படியான உணர்வுகளின் வளர்ச்சிக்கு இவை இன்றியமையாததாக நிலவுகின்றன.

கைலாசபதியின் இந்த நிலைப்பாட்டை ஆமோதிக்கும் ஆசிரியர் முருகர் குணசிங்கம் அதைத் தனது ஆய்வின் முக்கிய அங்கமாக ஏற்றுக்கொண்டுள்ளார். அடுத்ததாக மேற்கூறிய கட்டுரையில் கைலாசபதி பிறிதோர் விளக்கக் கருத்தையும் முன்வைத்துள்ளார். அதாவது பொதுவாக இந்தியாவில் நடைபெறும் அரசியல் மற்றும் கலாசார நிகழ்வுகள், குறிப்பாகத் தமிழ் நாட்டின் அப்படியான நிகழ்வுகள் இலங்கைத் தமிழினத்தின் பண்பாட்டு மற்றும் மொழியியல் உணர்வுகளை வளர்க்க உதவின, அல்லது தட்டியெழுப்பின.

கைலாசபதியின் மேற்கூறிய இரு கருத்துக்களையும் ஆசிரியர் குணசிங்கம் விரிவுபடுத்தி இந்த நூலைப் படைத்துள்ளார். *`HOWEVER, BOTH OF HIS ABOVE MENBTIONED CLAIMS PLAY A VERY SIGNIFICANT ROLE IN THE CURRENT RESEARCH* பக்கம் 23. இந்த ஆராய்ச்சி நூலில் அவருடைய இருவிதக் கருத்துக்களும் முக்கிய பங்கு வகிக்கின்றன என்பதே இந்த ஆங்கில வாக்கியத்தின் பொருள். ஆசிரியர் குணசிங்கத்தின் பங்களிப்பு யாதெனில் அவர் 19ம் நூற்றாண்டுத் தமிழர் வாழ்வுடன் தொடர்புபட்ட அரிய தரவுகளைத் திரட்டி அவற்றை புதிய கோணத்தில் மதிப்பீடு செய்யும் திறனாகும்.

ஆசிரியர் குணசிங்கம் குறிப்பிடும் பிறிதோர் முன்னோடி ஆய்வாளராக டாக்மார் ஹெல்மன் -இராசநாயகம் இடம்பெறுகிறார். இவர் ஜேர்மனைத் தாய்மொழியாகக் கொண்டவர், தமிழறிவு நிரம்பியவர். இவர் எழுதிய `தமிழ்ப் புலிகளின் தேசிய அடையாளத்திற்கான ஆயுதப் போர்' *(THE TAMIL TIGERS ARMED STRUGGLE FOR IDENTITY)* என்ற நூல் முழுக்க முழுக்க புலிகளைப் பற்றிய மதிப்பீடாகும். புலிகளை இவர் `அவர்கள் உண்மையானதோர் தேசிய இயக்கம்' என்று குறிப்பிட்டுள்ளார். *(THEY ARE A TRUE NATIONALIST MOVEMENT)* டாக்மார் ஹெல்மன் -இராசநாயகம் *(DAGMAR HELLMAN.- RAJANAYAGAM)* எழுதிய நீண்ட கட்டுரை `ஆறுமுகநாவலர்: மதச் சீர்திருத்தவாதியா, ஈழத் தேசியத் தலைவரா?' *(ARUMUGANAVALAR: RELIGIOUS REFORMER OR NATIONAL LEADER OF EELAM)* என்ற தலைப்புடன் காணப்படுகின்றது. இவருடைய நாவலர் பற்றிய கணிப்பீடு பிற ஆய்வாளர்களின் கண்ணைத் திறந்துள்ளதாக குணசிங்கம் தெரிவிக்கிறார். 1850-1879 காலப்பகுதியில் நாவலர் நடத்திய மத, மொழி, பண்பாட்டு நடவடிக்கைகள் தமிழர் விழிப்புணர்வுக்கும், தேசிய எழுச்சிக்கும் அடிகோலும் என்பது டாக்மாருடைய நிலைப்பாடு.

**`இந்த நூல் பெரும் உழைப்பையும் பரந்த ஆராய்ச்சித் திறனையும் உள்ளடக்கியது. இதை எவ்வித தயக்கமுமின்றி என்னால் உறுதிப்படுத்த முடியும் யாழ்ப்பாணத்திற்கு வெளியே அறியப்படாத பல வரலாற்று மூலகங்கள் இந்த நூல் மூலம் வெளிவந்துள்ளன'**

தனது ஆராய்ச்சி நூலில் நாவலரும் அவருடைய நடவடிக்கைகளும் இணைபிரியாத இடம் வகிக்கின்றன என்று குணசிங்கம் குறிப்பிடும் அதேவேளை யாழ். தமிழர்களின் சமகால சமூக-கலாசார பின்னணி, அவர்களுடைய நாவலர் காலப் பொருளாதார -கல்வி வளர்ச்சி, நாவலர் தோன்ற வேண்டிய உடனடிக் காரணம் என்பனவற்றை கணக்கில் எடுக்க டாக்மார் தவறிவிட்டார் என்பதைச் சுட்டிக்காட்டுகிறார், ஆர்.சேரன் போன்றோரும் டாக்மாரின் இக்குறைபாட்டை அவதானித்துள்ளனர்.

தமிழர்களின் தேசிய எழுச்சியுடன் பின்வரும் விடயங்கள் தொடர்புபட்டுள்ளதாக ஆசிரியர் குணசிங்கம் அடையாளங் கண்டுள்ளார். இவை ஒவ்வொன்றும் தனித்தும் ஒருமித்தும் தமிழ் தேசியமாக உருப்பெற்றுள்ளன:

1. போத்துக்கேய - ஒல்லாந்தர் ஆட்சி காலத்தில் சிதைவுற்ற தமிழர் பண்பாட்டின் மறுமலர்ச்சி.

*(தொடர்ச்சி 28ம் பக்கம்)*

## நூல் அறிமுக விழா

*கலாநிதி முருகர் குணசிங்கம் எழுதிய*

**இலங்கை தமிழ் தேசியவாதமும் அதன் ஆரம்பதோற்றம் பற்றியதோர் ஆய்வும்**

**காலம்:-** *08.08.2004 ஞாயிற்றுக்கிழமை*

**நேரம் :-** *பி.ப. 3.30 மணி*

**இடம்:-** *பாரிஸ் முத்துமாரியம்மன் ஆலயம்*
**22, Rue de Département,**
**75018 Paris.**
**M°: La Chapelle**

# இலங்கைத் தமிழர்...

(27ம் பக்கத் தொடர்ச்சி)

2. தமிழ் மொழி வளர்ச்சி, உரைநடை உருவாகுதல் தொல்காப்பியம் போன்ற தமிழ் நூல்களின் அச்சுப்பதிப்பு.
3. கிறிஸ்தவ மதமாற்றங்களுக்கு தமிழினத் தலைவர்கள் காட்டிய எதிர்ப்பும் சைவமதம் மீது கிறிஸ்தவ மதகுருமார் நடத்திய தாக்குதல்களும்.
4. பிரிட்டிஷ் அரசு படிப்படியாகப் புகுத்திய அரசியல் மாற்றங்கள் தமிழர் நலனுக்குப் பாதகமானவை என்ற உணர்வு.
5. 1920 ஆம் ஆண்டிற்குப் பின் தோன்றிய சிங்கள தமிழ் முரண்பாடுகள்.

தமிழ் தேசியத்தின் தோற்றம் பற்றிய தனது ஆய்வை அவர் மேற் கூறிய ஐந்து நிலைகளில் இருந்து ஆராய்ந்துள்ளார். தேசிய உணர்வின் தோற்றத்திற்கு பூர்வீக வரலாறுதான் முக்கிய காரணம் என்ற நிலைப் பாட்டை எடுக்காமல் விட்டதற்கு ஆசிரியரைப் பாராட்ட வேண்டும். ஒரு இனம் ஒரு தேசமாக எழுச்சியடைவதும், சுயநிர்ணய உரிமைக்கான நியாயப்பாடுகளை முன்வைப்பதும் பூர்வீக ஆதாரங்களால் அல்ல. ஒடுக்கு முறைகளுக்கு எதிரான போராட்டம் அவ்வினத்தை ஒரு தேச மாகப் பரிணமிக்க வைக்கின்றது. `ஒரு மொழிக்கு அது எதிர்கொள்கின்ற நெருக்கடிகள் மிகுந்த காலமே அதன் பொற்காலமாகத் திகழ்சின்றது' என்று மொழி வளர்ச்சி பற்றிய விமர்சகர்கள் கூறுவர்.

முருகர் குணசிங்கத்தின் நூல் கூறும் செய்திக்கு நேர் முரணான நிலைப்பாட்டைக் கொண்டதாக அம்பலவாணர் சிவராஜாவின் இலங்கைத் தமிழர் தேசியம் என்ற நூலைக் குறிப்பிட முடியும் (POLITICS OF TAMIL NATIONALISM IN SRI LANKA BY AMBALAVANAR SIVARAJAH. SOUTH ASIA PUBLISHERS, NEW DELHI, 1997) ஈழத் தமிழர்களின் தேசிய எழுச்சியை சிறுபான்மை, பெரும்பான்மை இனங்களுக்கிடையிலான மோதலாக இந்த நூல் சித்தரிக்கின்றது. தமிழர்கள் வரலாற்று ரீதியாக ஒரு தனித் தேசியம் என்பதே ஏற்றுக்கொள்ளப்பட்ட செய்தி.

# என்னோடு நான்

(22ம் பக்கத் தொடர்ச்சி)

பிணக்கை (conflict) முடிவுக்குக் கொண்டு வருவதற்கான மார்க்கமாக நாங்கள் காலத்தையும், காலத்தால் உருவாகும் பிளவையும் பிணக்கையும் ஏற்றுக் கொண்டிருக்கும் வரை எங்களால் உளவியல் நேரம் பற்றி விளங்கிக் கொள்வது கடினமாகவே இருக்கும்.

நான் பொறாமை உள்ளவன். இதுவே யதார்த்தம். இதுவே எனது யதார்த்த நிலை.பொறாமை அற்றவனாக- வன்முறை அற்றவைனாக- அச்சம் அற்றவனாக-துயரம் அற்றவனாக இருப்பது எனது இப்போதைய யதார்ததமான நிலையல்ல. எனது உள்ளமையல்ல. நான் வன்முறையற்றவன் என்பது ஒரு கருத்தியல் கோட்பாடே- அது வெறுமனே எனது எண்ணத்தின் கட்டுமானமே. இந்தக் கோட்பாட்டால், எண்ணத்தின் கட்டுமானத்தால் எவ்வித புரிந்துணர்வையும் .ஏற்படுத்த முடியாது. இக்கோட்பாட்டு ரீதியான அணுகு முறை ஒரு மாயத்தோற்றமே.


இப்பொழுது நான் என்னதாக உள்னேனோ அதுவே எனது உண்மையான யதார்த்த நிலை. `வன்முறை' `பொறாமை' போன்றவை என்னுள் உள்ளவை. இந்தப் பொறாமையை- வன்முறையை உடனடியாக - இக்கணத்தில் என்னால் முடிவுக்குக் கொண்டு வர முடியுமா?

நான் பொறாமையுடையவன் - வன்முறையாளன் என்பன எனது யதார்த்த நிலை. பொறாமையற்றவன் - 'வன்முறையற்றவன்' என்பன எனது கற்பனை நிலை. நான் அடைய விரும்பும் நிலை. ஒன்றாக இருந்து இன்னொன்றாக மாற விரும்பும் போது, அந்த மாற்றம் காலத்தினாலேயே ஏற்பட வேண்டியதொன்றாகிவிடும். இந்த இடைப்பட்ட கால அவகாசத்தில் நான் பொறாமைக்கான - வன்முறைக்கான விதைகளையே மேலும் விதைக்கத் தொடங்கிவிடுவேன். எனவே பொறாமையை - வன்முறையை என்னால் உடனடியாக முடிவுக்குக் கொண்டு வரமுடியுமானால் தான் நான் பொறாமை - வன்முறை நீங்கியவனாக ஆவேன். இன்னொரு விதத்தில் சொல்வதானால் `நான் பொறாமை உள்ளவன்` என்ற நிலையிலிருந்து `நான் பொறாமை நீங்கியவன்` என்ற புதிய நிலைக்கு மாறவேண்டுமானால் இந்த இரண்டு நிலைகளுக்கும் இடையே உள்ள கால இடைவெளி மறையும் போது - காலத்தின் அசைவு இல்லாதபோது தான், உண்மையான, பூரணமான அடிப்படை மாற்றம் ஏற்பட்டதாகக் கொள்ள முடியும்.

'வன்முறை' என்பது வெறுமனே கோபம் மட்டும் அல்ல.

இன்னொருவருக்கு ஊறு விளைவிப்பது, மூர்க்கத்தணமாகக் கண்டனம் தெரிவிப்பது, உடல், உள ரீதியாகக் காயம் ஏற்படுத்தல் போன்ற வேறு பலவற்றின் அசைவுகளைக் கொண்ட ஒட்டு மொத்த அசைவே வன்முறையாகும். இந்த ஒட்டுமொத்த கால அசைவும் முடிவுக்கு வரும் போதுதான் வன்முறை நீங்கும். வன்முறை என்பது ஓர் உணர்வு ரீதியான எதிர் வினையாகும். நீங்கள் ஊறு விளைவித்தால் நான் காயப்படுகிறேன். ஏனெனில் என்னைப் பற்றிய எனது விம்பம் ஊறு படுகிறது. நான் ஓர் அறிஞன், நான் ஒரு பெரிய மனிதன் என்றெல்லாம் என்னைப் பற்றி நானே சில விம்பங்களை உருவாக்கிவைத்துள்ளேன். எனது அந்த விம்பங்கள்தான் ஊறுபடுகின்றன. நானே என்னைப் பற்றிய விம்பங்களை உருவாக்கும் முயற்சிக்கு நானே எனக்குக் கால அவகாசம் கொடுக்கின்றேன். நான் எனது மனைவியை - நண்பனை - நிலவை - ஆற்றை - மரத்தைப் பார்க்கும் போது எப்படிப் பார்க்கின்றேன்? நான், எனது மூளைக்குள் சேமித்து வைக்கப்பட்ட நினைவுகள் ஊடாகவே பார்க்கின்றேன். நினைவு (Memory) காலத்தின் விளைவு. நினைவு எமது பார்வையை மாசு படுத்தும். புற வாழ்க்கைக்குப் பேருதவியாக இருக்கும் நினைவு நாம் உருவாக்கிய விம்பங்களுடன் ஒட்டுறவாட உதவும். ஆனால், ஒன்றை அல்லது ஒருவரை உள்ளது உள்ளபடி பார்க்க நினைவு உதவாது. காலம் எப்படி கூறுபோடும் இயல்பைக் கொண்டதோ அதுபோலவே எண்ணமும் கூறுபோடும் தன்மையைக் கொண்டது. காண்பான் இல்லாமல் காணும்போது, காண்பானும் காணும் பொருளும் ஒன்றாகும். காண்பவனுக்கும் காணப்படும் பொருளுக்கும் இடையிலான உடல் ரீதியான இடைவெளியும், சடப்பொருள் சார்ந்த காலமும் இல்லாமற் போகும். அது போலவே என்னுள் உள்ள பொறாமையையும் வன்முறையையும் உளவியல் காலத்தின் அசைவுகள் இன்றிப் பார்க்க என்னால் முடியுமானால் பொறாமையும் வன்முறையும் தானாக மறையும். இங்கே காண்பவனாகிய நானும் என்னுளிருக்கும் பொறாமையும், வன்முறையும் ஒன்றென்ற நிலை இருக்கும். இந்த யதார்த்த நிலையில் தேவைப்படுவது கணப்பொழுதுக்கான ஓர் உடனடிச்செயற்பாடே ஆகும். இந்த உடனடிச் செயற்பாட்டில் காலத்தின் குறுக்கீட்டுக்கு அவகாசமே இல்லை.

* * *




`ஐயோ! இந்த வில்லை ஒடிச்சாதான் உங்க பெண்ணோடு கல்யாணமா?'
`அப்படியெல்லாம் எதுவுமில்லீங்க... பொண்ணு வில்லுப்பாட்டு பாடிக்காட்டப் போகுது... அவ்வளவுதான்!'

☯ ☯ ☯

`இந்த மணமக்களோட பொருத்தத்தைப் பார்த்து நான் மெய் மறந்துட்டேன்'
`இதுதான் சாக்குனு 'மொய்' மறந்து நேரா பந்திக்குப் போயிடாதீங்க!'

☯ ☯ ☯

`பொய்க்கால் குதிரைக்கு லாடம் கட்டியதாகக் கணக்குக் காட்டியிருக்கிறார் மன்னா!'

☯ ☯ ☯

`தலைவருக்கு விரலை காணிக்கையாகக் கொடுத்தேன்...
`தலைவர் என்ன சொன்னார்...?'
`விரல்ல இருந்த மோதிரம் எங்கேன்னு கேக்கறார்.'

☯ ☯ ☯

`புலவரே! என்ன துணிச்சல், என் எதிரே அமைச்சரைப் புகழ்ந்து பாடுகிறீர்?'
`மன்னிக்க வேண்டும் அரசே! அண்மையில் வெளியான பணக்காரர்கள் பட்டியலில் அமைச்சரின் பெயர் முதலிடத்தில் இருக்கிறதே!'

☯ ☯ ☯

`நகரச் சோதனைக்குப் போன அரசர் `மூட்டை' யோட திரும்பி இருக்காரே? எப்படி?'
`ஏரியா ரவுடின்னு கருதி, ஜனங்க கொடுத்த மாமூலாம்!'

☯ ☯ ☯

`எதுக்கு டொக்டர் சத்திரசிகிச்சை செய்யும்போது என்கிட்டே ஒரு கத்தியைக் கொடுக்கறீங்க?'
`நான் நிராயுதபாணியா யாரையும் கொல்லமாட்டேன்.'

☯ ☯ ☯

`அந்த அலுவலகத்திலை பயங்கரமா இலஞ்சம் தலைவிரிச்சு ஆடுதுன்னு நினைக்கறேன்...!'
`எப்படிச் சொல்றீங்க?'
`ஐந்தில் வளையாதது ஐம்பது ரூபாயில் வளையும்னு எழுதி வைச்சிருக்காங்களே..!'

☯ ☯ ☯

`குடிக்கிறதை நிறுத்துறதுக்காக ஒரு மருந்தைக் குடிக்கச் சொன்னீங்களே....'
`ஆமாம்.. அதுக்கென்ன?'
`அந்த மருந்தை, ஊறுகாயைத் தொட்டுக்கிட்டு குடிக்கலாமா டொக்டர்..?.'

☯ ☯ ☯

## கொஞ்சம் சிரியுங்கோ..!

`இந்தப் படம் முழுக்க எல்லோரும் இருக்கை நுனியில்தான் உட்கார்ந்திருக்கணும்!'
`அவ்வளவு 'த்ரில்லிங்' படமா?'
`நீங்க வேற... இந்தத் 'தியேட்டர்ல' எல்லா இருக்கையும் கிழிந்து தொங்கும்!'

☯ ☯ ☯

`சே எதுலதான் இலவச இணைப்புக்கு அலையறதுனே இல்லாம போச்சு!'
`ஏன்?'
`டொக்கடர் ஸீட் கொடுத்தேன். கொசுறா காம்பவுண்டர் ஸீட் ஒண்ணு கிடைக்குமாங்கறான்!'

☯ ☯ ☯

`மன்னா! நம் கலைத்துறை அமைச்சர் ஊழல் புரிந்துவிட்டார்!'
`எப்படிச் சொல்கிறீர்?'

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ரொனால்ட் ரீகன் காலமானார். அமெரிக்காவிற்கும் சோவியத்திற்கும் இடையே இருந்த பனிப்போர் முடிவடைந்ததற்கு இவர்தான் காரணம் என்று ஒரு புறம் தம்பட்டம் அடிக்கின்றனர். இதை விட பெரிய பொய் உலகத்தில் கிடையவே கிடையாது என்று வாதிடுபவர்களும் உண்டு. ஆனால் அவர் சிறந்த நகைச்சுவை உணர்வு உடையவராக இருந்தார் என்பதில் யாருக்கும் ஐயம் இல்லை. அவர் குண்டடிப்பட்டு மருத்துவமனையில் தீவிர சத்திரசிகிச்சையில் இருந்தபோது மருத்துவர்களைப் பார்த்து “நீ ங்கள் ரிபப்லிகன் கட்சியை ஆதரிப்பவர்கள்தானே” என்று கேட்டார்.

* * *


நாய்களுக்கு மொழியைப் புரிந்து கொள்ளும் அறிவு உண்டு. நாய்களுக்குக் கிட்டத்தட்ட மூன்று வயதுக் குழந்தைக்கு உள்ள அறிவுக்கு இணையான மொழியறிவு உண்டு என்று கண்டு பிடித்திருக்கிறார்கள். ஆகையால், இனி நாய்கள் இருக்கும் இடத்தில் 'பக்கம் பார்த்து' பேசவும்.

* * *

மார்கன் ச்பர்லாக் என்பவர் காலை, மாலை, இரவு என்று மூன்று வேளையும் 'மெக் டொனால்ட்ஸ்' உணவையே சாப்பிட்டு வந்தார். இதனால் இவருடைய உடம்பில் கொழுப்புச் சத்து ஏகத்துக்கும் ஏறி, லிவர் (ஏதோ ஒரு ஈரல்) கெட்டுப் போய், உடல் கனமாகித் துன்பப்பட்டார். இதையே 'Super Size Me' என்ற துண்டுப் படமாக எடுக்க, அந்த படம் ஓஹோ என்று ஓட, ஆறரைக் கோடி டாலர்கள் இலாபம் ஈட்டியுள்ளார்.

– குண்டலகேசி

# அமைதி முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படும் வாய்ப்பு இல்லை நம்பிக்கையைச் சீர்குலைக்கும் போக்கு மேலும் நீடிப்பு



தேர்தலில் வாக்களிக்கும் ரணில் விக்கிரமசிங்க

(10.07.04)

மாகாணசபைத் தேர்தல்கள் இன்று முடிவுற்றாலும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான அமைதி முயற்சிகளில் இப்போதைக்கு முன்னேற்றம் ஏற்படுவதற்கான வாய்ப்பு ஏதுமில்லை. சமாதான நடவடிக்கைகள் முன்நகர்வதற்கான அறிகுறியே தென்படவில்லை என்று விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன. அதேசமயம் சிறீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பரஸ்பர நம்பிக்கை சீர்குலைவதற்கு வழிசெய்யும் சம்பவங்கள் தொடர்ந்து அரங்கேறும் சூழ்நிலை உருவாகி வருவதாகவும் அவ்வட்டாரங்கள் குறிப்பிட்டன. அமைதி முயற்சிகளை முன்னெடுக்கும் விடயத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பெரும் கருத்து வேறுபாடு நிலவுகின்றது. அதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இடம்பெற்றிருக்கும் பங்காளிக் கட்சிகள் இடையேயும் இது விடயத்தில் ஒற்றுமைப்பட்ட நிலைப்பாடு இல்லை. இழுபறிதான் நீடிக்கின்றது.

எனினும், இன்றைய மாகாண சபைத் தேர்தலைத் தொடர்ந்து இந்த விவகாரம் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தீர்க்கமான முடிவுகளை எடுப்பார். நேரடிப் பேச்சுக்கள் ஏற்படுவதற்கான சூழ்நிலை தோன்றும் - அமைதி முயற்சிகள் முன்நகரத் தொடங்கும் - என்றெல்லாம் பலதரப்புகளிலும் பேச்சுக்கள் அடிபட்டன. பலத்த எதிர்பார்ப்பும் இருந்தது. ஆனால், அவை ஒன்றும் இப்போதைக்குச் சரிப்பட்டுவராதென்பது தற்போது தெளிவாகத் தெரியத் தொடங்கியிருக்கின்றது.

மீண்டும் சமாதானப் பேச்சை ஆரம்பிப்பதற்கு அவசியமான அடிப்படை அம்சங்கள் என்று விடுதலைப் புலிகள் வலியுறுத்தியுள்ள விடயங்களுக்கு ஆரம்பத்தில் கொள்கை அளவில் இணக்கம் தெரிவித்துப் பச்சைக் கொடி காட்டிய சந்திரிகா குமாரதுங்க, பின்னர் அவற்றைச் செயற்படுத்த - அவற்றுக்கு எழுத்தில் ஒப்புதல் தெரிவிக்க - மறுத்துவிட்டார். அதனால், சமாதான முயற்சிகள் முன்நகராமல் தடைப்பட்டுப் போயின. விவகாரம் கிடப்பில் போடப்பட்டது.

எனினும், இன்று நடைபெறும் மாகாண சபைத் தேர்தல்கள் முடிந்த கையோடு சமாதான முயற்சிகளை முன்நகர்த்தத் தூண்டும் வகையில் ஆக்கபூர்வமான - தீர்க்கமான - முடிவுகளை எடுத்து நடைமுறைப்படுத்த இலங்கை அரசுத் தரப்பின் தலைவியான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்வருவார் எனப் பலரும் எதிர்பார்த்தனர். ஆனால், அத்தகைய சூசக அறிகுறிகள் ஏதும் தென்படவேயில்லை என்று சமாதான முயற்சிகளில் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

மாறாக, திரைமறைவில் இடம்பெறும் காய் நகர்த்தல்கள், சம்பவங்கள், பதில் நடவடிக்கைகள் என்பன இரு தரப்பிற்கும் இடையில் பரஸ்பர நம்பிக்கையைக் கட்டி வளர்ப்பதற்குப் பதிலாக, முரண்பாடுகளைத் தீர்க்கமாக்கி, மோசமான கட்டத்தை நோக்கி நிலைவரத்தை நகர்த்தி வருகின்றன என விடயமறிந்த வட்டாரங்கள் எச்சரிக்கை வெளியிட்டுள்ளன.

## மட்டு - கொழும்பு சம்பவங்கள் சமாதான பேச்சுக்கு அச்சுறுத்தலாக அமையக்கூடும்: போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர்

(10.07.04)

மட்டக்களப்பில் இடம்பெற்று வரும் தொடர்ச்சியான தாக்குதல் சம்பவங்கள் மற்றும் கொழும்பில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் போன்றன சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அச்சுறுத்தலாக அமையக்கூடுமென போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் துருண்ட் பியுறு ஹொவ்ட தெரிவித்துள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், சிறீலங்கா அரசாங்கத்துக்கும் அனுப்பி வைத்துள்ள கடிதங்களிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கொள்ளுப்பிட்டி சிறீலங்கா பொலிஸ் நிலையத்தில் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்ற சில மணிநேரத்தில் தாம் அக்கடிதங்களை எழுதியதாகத் தெரிவித்துள்ள ட்ரொன் புரு ஹொவ்டே, மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்று வரும் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாகவும், கொழும்பில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல் தொடர்பாகவும் தனது அதிருப்தியைத் தெரிவித்திருந்ததாக கூறியுள்ளார்.

இதேவேளை, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ட்ரொன் புரு ஹொவ்டே சிறீலங்கா அரச தரப்பினருக்கு எழுதிய கடிதம், சிறீலங்காவிற்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கரைச் சந்தித்த அரசாங்கத்தின் சமாதானச் செயலாளர் ஜயந்த தனபாலவிடம் கையளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சந்திப்பு முன்னர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒன்றெனத் தெரிவித்துள்ள சமாதான செயலக வட்டாரங்கள், சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்த பல்வேறு விடயங்கள் தொடர்பாக இங்கு ஆராயப்பட்டதாக தெரிவித்துள்ளன. கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாகவும், ஹான்ஸ் பிரஸ்கரைச் சந்தித்த அரசாங்கத்தின் சமாதானச் செயலாளர் ஜயந்த தனபால கலந்துரையாடியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, சிறீலங்கா அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் எனப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அதிகாரி திஸா பெனபொகா தெரிவித்துள்ளார்.

## கன்னன்குடாவில் தமிழீழக் காவல்துறையினர் குற்றத் தடுப்புக் கருத்தரங்கு

(10.07.04)

தமிழீழக் காவல்துறையினர் கன்னன் குடாப் பகுதி மக்களுக்கான சந்திப்பொன்றினை மேற்கொண்டிருந்தனர். நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சந்திப்பில், சட்டம் - ஒழுங்கு நிலைநாட்டுவது பற்றியும் குற்றங்கள் தொடர்பான விழிப்புணர்வும் குற்றச் செயல் நடைபெறாமல் தடுப்பது தொடாபாகவும் உயிர் கொல்லிகளான கசிப்பு உற்பத்தி, கஞ்சா உற்பத்தி இல்லாதொழிப்பது பற்றியும், பாடசாலைச் சிறார்களை எக்காரணம் கொண்டும் படிப்பை இடையில் நிறுத்தி விடாமல் தொடர்ந்து படித்து ஓர் ஆரோக்கியமான சமுதாயம் உருவாக வழிவகுப்பது போன்ற கருத்துரைகளும் வழங்கப்பட்டன.

பழைய மண்டபத்தடி என்னும் இடத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் காவல்துறையின் தாண்டியடிப் பிரதேசப் பொறுப்பாளர் சி.ஜெயானந்தன், காவல்துறையினரின் முதன்மைப் பேச்சாளர்களான க.இளையராஜா, இ.புவிராஜன் ஆகியோரும், பழைய மண்டபத்தடி கிராம சேவகர் த.விஜேந்திரன், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் த.சுப்பிரமணியம் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். இதுபோன்ற சந்திப்புக்களைக் கிராமம் கிராமமாகச் சென்று மேற்கொள்ளவுள்ளதாகவும் தமிழீழக் காவல்துறையினர் தெரிவித்துள்ளர்

## ஏறாவூரில் சிறீலங்கா அதிரடிப் படையினன் மீது இளைஞர் குழு கூரிய ஆயுதங்களால் தாக்குதல்

(10.07.04)

சிறீலங்கா அதிரடிப்படையினன் ஒருவர் இளைஞர் குழுவொன்றினால் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டுப் படுகாயமடைந்த நிலையில் கொழும்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஏறாவூர் அஷ்ரப் பாடசாலைக்கு முன்பாக கடந்த வியாழக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஏறாவூரைச் சேர்ந்த ஜமால்தீன் சுபைதீன் என்ற அதிரடிப்படையினனே படுகாயமடைந்தவராவார். இரு இளைஞர் குழுக்களுக்கிடையே ஏற்பட்ட தகராறைத் தீர்த்து வைக்க முற்பட்ட போதே இந்த அதிரடிப்படையினன் கூரிய ஆயுதங்களான கத்தி, கோடரியால் தாக்கப்பட்டுள்ளார். மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுப் பின் மேலதிக சிகிச்சைக்காகக் கொழும்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.


சூரிச் மாநகரில் ஓர் அழகு நகைமாடம்

N.S.Jewellery

(பழைய தமிழரசி நகைமாடம் அமைந்திருந்த இடம்)

உங்கள் நகைத் தேவைகள் எதுவாயினும்
உங்கள் விருப்புக்கேற்றவாறான பல வண்ணத் தெரிவு
22 கரட் தரம் குறையாத தங்க ஆபரணங்கள்
ஏராளமான, பல புதிய டிசைன்களில் இப்போது
இறக்குமதி செய்துள்ளோம்.

சம்பிரதாய முறைப்படி பொன் உருக்கி தாலி செய்து தரப்படும்.

N.S.Jewellery
Neugasse 58
8005 Zürich

Telefon: 01 440 60 50
01 440 60 51
Natel: 079 230 80 04

# வடக்கு – கிழக்கு மனித உரிமைகள் செயலகம் கிளிநொச்சியில் திறப்பு




(10.07.04)

வடக்கு-கிழக்கு மனித உரிமைகள் செயலகம் கிளிநொச்சியில் நேற்று வெள்ளிக்கிழமை இயங்க ஆரம்பித்துள்ளது. ஏ-9 வீதியில் கரடிப்போக்குச் சந்தியில் அமைந்துள்ள இந்தச் செயலகத்தின் ஆர -ம்ப நிகழ்வு நேற்று முற்பகல் 10 மணிக்கு இடம்பெற்றது. விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், நீதி, நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் கலந்து சிறப்புரையாற்றினர்.

இந்தச் செயலகத்தை இயக்கும் குழுவின் தலைவராக வண.எம்.எஸ்.கருணாகரன் செயற்படுவார். இக்குழுவில் இடம்பெற்றுள்ள கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், திருகோணமலை சட்டத்தரணி சிவபாலன், செல்வி சிறி அருளானந்தன், திருமதி ந.மாலதி ஆகியோர் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டனர். இந்தக்குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.ஜி.கஜேந்திரகுமார், யாழ். மருத்துவ பீடாதிபதி எஸ்.சிவபாலன் ஆகியோரும் அங்கம்பெறுகின்றனர்.

# சமாதானத்துக்காக அரசு இதயசுத்தியுடன் செயற்படவில்லை தமிழ்கூட்டமைப்பினர் அமெரிக்காவில் வைத்து குற்றச்சாட்டு

(10.07.04)

இலங்கையின் நிரந்தர சமாதானத்திற்காகத் தற்போதைய அரசு இதயசுத்தியுடன் செயற்படவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த இரா சம்பந்தனும் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் தெரிவித்துள்ளனர். அமெரிக்க தலைநகர் வோஷிங்டனில் சிறீலங்காவுகக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவர் ரெறிசிற்றா சபரின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும் பொழுதே இந்தக் கருத்தினை அவர்கள் வெளியிட்டனர்.

தற்போதைய சிறீலங்கா அரசும் அதனைச் சார்ந்தவர்களும் கிழக்கு மாகாணத்தில் ஸ்திரமற்ற நிலைமையை உருவாகியுள்ளதாகவும் இதன் காரணமாக யுத்த நிறுத்த ஒப்பந்ததத்திற்கு குந்தகம் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். சமாதான நடவடிக்கை மூலம் நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டுமானால் தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக் கால நிர்வாகப் பிரேரணையை ஏற்று பேச்சுவார்த்தைகளைத் தொடர்வதே உரிய செயல் என இரா சம்பந்தன் தனது உரையில் தெரிவித்தார். 2 முக்கிய கட்சிகளுக்கிடையே ஏற்பட்டுள்ள பதவிப் போட்டி காரணமாகத் தற்போதைய அரசிற்கு சமாதான நடவடிக்கைகளில் இதய சுத்தியுடனான ஈடுபாடு இருப்பது குறித்துத் தமக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனது உரையில் தெரிவித்தார்.


சிறீலங்காவின் முன்னாள் அமெரிக்கத் தூதுவர் ரெறிசிற்றா சபரின் உடன் இரா.சம்பந்தனும் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும்

அரசு சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தாலும் அதற்கு அரசுடன் இணைந்து தொழிற்படும் ஜே.வி.பி.யினர் ஆதரவு தருவார்களா என்பது சந்தேகம் எனவும் அவர் தெரிவித்தார். அதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது அமெரிக்க விஜயத்தின்போது அமெரிக்க ராஜாங்க உதவிச் செயலர் கிறிஸ்ரினா றொக்காவையும் வெளிவிவகார அமைச்சின் செயலர் டொனால்ட் ஹான்டட்டையும் சந்தித்து உரையாடியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# அரசாங்க அமைச்சர்கள் 4 பேருக்கு எதிராக எதிர்கட்சி சபாநாயகரிடம் முறைப்பாடு

(09.07.04)

அரசாங்க அமைச்சர்கள் 4 பேருக்கு எதிராக எதிர்கட்சியினர் கூட்டுச் சேர்ந்து இன்று சபாநாயகரிடம் முறைப்பாடு ஒன்றை செய்தனர். கடந்த இறுதி நாடாளுமன்ற அமர்வின்போது, குறிப்பிட்ட அமை -ச்சர்கள் நடந்து கொண்ட விதம் தமது நாடாளுமன்ற சிறப்புரிமையை மீறியதாக இந்தக் குற்றச்சாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜாதிக ஹெல உறுமயவின் பௌத்த பிக்குமாரை அவமதித்த செயலானது ஏற்றுக்கொள்ள முடியாததாகும். எனவே குறிப்பிட்ட 4 அமைச்சர்களுக்கும் எதிராக சபாநாயகர் நாடாளுமன்ற நிலையியற் கட்டளைச் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனச் சபாநாயகரிடம் எதிர்கட்சிக் கூட்டணி கோரியுள்ளது. எதிர்கட்சியின் குற்றச்சாட்டுக்கு விளையாட்டுத்துறை அமைச்சர் ஜீவன் குமாரதுங்கவும் உட்பட்டுள்ளார்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினரின் சோதனை நடவடிக்கை தீவிரம்

(10.07.04)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறீலங்காகப் படையினரின் சோதனைக் கெடுபிடிகள் அதிகரித்துக் காணப்படுவதால் பொதுமக்கள் பல அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். வவுணதீவு, பட்டிருப்பு, செங்கலடி, மண்முனைச் சோதனைச் சாவடியூடாகச் செல்லும் பொதுமக்களைத் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர். தமது அடையாள அட்டைகளை எடுத்துச் செல்லாதவர்களைச் சோதனைக்கு உட்படுத்தி நீண்ட நேரம் வரை தடுத்து நிறுத்துகின்றனர்.

மட்டக்களப்பு நகர்ப் பகுதியில் மோட்டார் சைக்கிள் மற்றும் ஏனைய வாகனங்களில் செல்வோர் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர். வீதிகளில் திடீர்த் திடீரென வாகனங்களை நிறுத்தியும் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர்.

# இரவு வேளைகளில் கடற்படையினர் துப்பாக்கிச் சூட்டுப் பயிற்சி கடற்றொழிலாளர் பெரும் அச்சம்

(10.07.04)

யாழ்-குருநகர் மற்றும் கொழும்புத்துறை ஆகிய பிரதேசக் கடற்பரப்புக்களில் கடற்படையினர் இரவு நேரங்களில் துப்பாக்கிச் சூட்டுப் பயிற்சிகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரியவருகிறது. திடீரென மேற்கொள்ளப்படும் இத்தகைய சூட்டுப் பயிற்சிகள் காரணமாகக் கடற்றொழிலாளர்கள் தொழிலுக்குச் செல்ல அச்சம் தெரிவிக்கின்றனர். தற்போதைய சமாதானச் சூழ்நிலையிலும் கடற்படையினரால் மேற்கொள்ளப்படும் இவ்வாறான நடவடிக்கைகள் அப்பகுதி மக்களின் இயல்பு நிலையில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது

# ஹிங்குராகொட தாக்குதலில் காயமைடந்த விகாராதிபதி மரணம்

(10.07.04)

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த ஹிங்குராகொட போதிக்கராமய விகாரதிபதி இன்று காலை காலமானார். கடந்த 8ம் திகதி இரவு ஹிங்குராகொட விகாரை மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் விகாரையின் தேரர் கெடிகமுவே சுகத தேரர் காயமடைந்தார். காயமடைந்த அவர் கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுத் தீவிர சிகிச்சை பெற்று வந்தார். இன்று காலை அவர் காலமானதாக வைத்தியசாலையின் பணிப்பாளர் ஹெக்டர் வீரசிங்க தெரிவித்தார். கைக்குண்டு வீச்சுக்கு இலக்கான விகாரையிலிருந்து கடந்த 5ம் திகதி ஆயுதங்களுடன் 13 பேரைப் பொலிசார் கைது செய்திருந்தமையும் பின்னர் அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

S.A. Nathan Credit & insurence Bern

சுவிசில் 14 வருட அனுபவத்தோடு கூடிய பணத்தினை பெற்றுக்கொடுத்து வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெற்று முன்னணி வகிக்கும் ஒரே நிறுவனம் S.A. Nathan Credit

* கடன் பெறுவோருக்கு வங்கி ஆலோசனையுடன் விசேட சலுகை
அதிககூடிய பணமா! குறைந்த வட்டி வீதமா! GE capital லா (Pro credit), Swiss Credit ஆ எது வேண்டுமாயினும் நாடவேண்டிய நிறுவனம் S.A. Nathan Credit
* அத்தோடு அனைத்து காப்புறுதிகளும் செய்து கொடுக்கப்படும்.

வங்கி கடன் பெற விரும்புகின்றீர்களா ? B or C or CH உள்ளவர்களின் பணத்தேவையை உடனுக்குடன் பூர்த்தி செய்யக் காத்திருக்கின்றோம்.

S. Atputhanathan (Atputhan) Kaspar str 15/94, 3027 Bern CH. Tel: 031 992 62 14 / Fax: 031 992 62 11 / Natel: 079 208 50 46

(32ம் பக்கத் தொடர்ச்சி)

## மட்டக்களப்பில் புலிகள்.....

இவ்வாறான தாக்குதல்கள் எம்மைப் பலவீனப்படுத்தி விடாது. இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் நிராயுதபாணிகளாக அரசியல் நடவடிக்கையில் ஈடுபடும் எம்மவர் மீதே தாக்குதல்கள் நடப்பதால், இதில் எமது பலம், பலவீனம் குறித்து கேள்வியெழுப்பத் தேவையில்லை.

மட்டக்களப்பில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுவதைப் படையினர் பெரிதும் விரும்புகின்றனர். பலத்த பாதுகாப்புடன் படையினர் நின்ற பகுதியில் இந்தச் சம்பவம் நடைபெற்றமை இதனை உறுதிப்படுத்தியுள்ளது. இந்த நிலைமைகள் குறித்தெல்லாம் தலைமைப்பீடம் விரிவாக ஆராய்ந்து வருவதாகவும் கூறினார்.

இதேவேளை, எமது மக்கள் மீது, எமது போராளிகள் மீது, இந்தத் தமிழர் படைமீது யுத்தம் திணிக்கப்படுமாகவிருந்தால் அதை எதிர்கொள்வதற்கு நமது தேசியத் தலைவரின் கட்டளையை எதிர்பார்த்து இன்றும் தயாராகவுள்ளோம் என தமிழீழ விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் த.குயிலின்பன் தெரிவித்தார். அம்பாறை மாவட்ட கரும்புலிகள் தின பிரதான நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேற்படி பிரதான நிகழ்வு அக்கரைப்பற்று ஆலையடி வேம்பு கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. குயிலின்பன் தொடர்ந்து உரையாற்றுகையில், இன்று மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் நாம் பாரிய படைக்கட்டுமானத்தை வைத்திருக்கின்றோம். ஆனால், எமது எதிரிகள் எமது படைகளைச் சிதைக்க முற்பட்டும், எம்மைத் தாக்கவும் முனைந்துள்ளனர். எம்மை எதிரி பலமாக இல்லையென நினைத்து இத்தாக்குதல்களை மேற்கொள்கின்ற போதிலும், முடிந்தால் எம்மோடு யுத்தம் செய்ய முன்வரட்டுமெனக் கூறுகின்றோம்.

அப்பொழுது எமது பலம் எத்தகையது என்பதை எதிரிக்கு உணர்த்துவோம். இன்று யுத்தமா, சமாதானமா என்ற சூழலுக்கு நாம் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். இன்றும் கூட எமது போராளிகள் தாக்கப்பட்டுள்ளனர். எமது போராளிகளின் உயிர்கள் பறிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால், எமது தேசியத் தலைவர் இன்னும் எல்லை கடந்த பொறுமையுடனிருப்பது சமாதானத்தின் பால் அவர் காட்டும் பெரும் அக்கறைக்கு எடுத்துக்காட்டாகும். நாம் யுத்தத்தை விரும்புபவர்களல்ல, நாம் யுத்தத்தில் நின்றவர்கள், யுத்தத்தை அனுபவித்தவர்கள், யுத்த மையப்பகுதியில் நின்றதன் காரணமாக கைகளை, கால்களை இழந்ததோடு, அதற்கும் மேலாக தாயக விடுதலைப் போரில் பதினோராயிரத்து 648 மாவீரர்களைக் கூட விலை கொடுத்து நிற்கின்றோம் எனத் தெரிவித்தார்.

# கருணா குழுவைச் சேர்ந்த இருவருக்கு மரணதண்டனை

(11.07.04)

மட்டக்களப்பு இலுப்படிச்சேனை பகுதியில் வைத்து, கருணா குழுவைச் சேர்ந்த இருவருக்கு நேற்று வியாழக்கிழமை காலை விடுதலைப் புலிகள் மரணதண்டனை வழங்கியுள்ளனர். இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல்துறை அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தமிழ்த் தேசியத்தையும், தமிழரின் உரிமைப் போராட்டத்தையும் வலுவிழக்கச் செய்யும் வண்ணம் கருணாவின் கைக் கூலிகளாகவும், சிறீலங்கா இராணுவப் புலனாய்வாளர்களின் உதவியுடன் செயற்பட்ட இருவருக்கு நேற்றுக் காலை 10 மணிக்கு (8ம் திகதி) இலுப்படிச்சேனைச் சந்தியில் வைத்து விடுதலைப் புலிகளால் மரண தண்டனை வழங்கப்பட்டது.

இலுப்படிச்சேனையைச் சேர்ந்த பாலசுந்தரம் சிறிதரன் (23) என்பவருக்கும், பன்குடாவெளியைச் சேர்ந்த தில்லையம்பலம் சுந்தரராஜன் (24) என்பவருக்குமே இத்தண்டனை வழங்கப்பட்டது.

இவர்களிடமிருந்து கிளைமோர், கைக்குண்டுகள் இரண்டு, ரி.56 ரகத் துப்பாக்கி ஒன்று, அதற்குரிய ரவைக் கூடுகள் மூன்று, கைத்துப்பாக்கி ஒன்று, கோல்சர் ஒன்று. கையடக்கத் தொலைபேசி ஒன்று, வயர்கள், மருந்துப் பொருட்கள் சிலவும் கைப்பற்றப்பட்டன. சிறீலங்கா இராணுவத்தினரால் பயன்படுத்தப்படும் பொருட்களென இவையாவும் அடையாளம் காணப்பட்டன. அத்துடன் இவைகள் அனைத்தும் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன.



இது தொடர்பாக மக்களுக்கு விடுதலைப் புலிகள் கருத்துத் தெரிவிக்கையில், பணத்திற்காகவும் அற்ப ஆசைகளுக்காகவும், தேச விரோத சக்திகளுடன் சேர்ந்து தமிழ்த் தேசியத்தை சீர்குலைக்கும் நடவடிக்கையில் தங்கள் பிள்ளைகள் ஈடுபடாமல் பெற்றோர் பார்த்துக் கொள்ள வேண்டும். அத்தோடு, மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களிலிருந்து எமது அமைப்பில் இணைந்து இராணுவப் பயிற்சி பெற்றவர்கள் எதுவித அச்ச உணர்வுமின்றி தங்கள் பெற்றோருடன் இருந்து கல்வி, பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடுமாறு கேட்டுக் கொள்கிறோம். இதேவேளை, தமிழ்த் தேசியத்திற்காக பற்றுணர்வுடன் செயற்பட விரும்புவோர் எமது தாயக மீட்பில் அக்கறை கொண்டு தங்கள் சுயவிருப்பின் பேரில் எம்முடன் இணைந்து செயற்படலாம் என வேண்டுகோள் விடுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

## பேச்சுவார்த்தை மீள.....

றனர். அவர்கள் சமாதானத்தையும் பாதுகாப்பையுமே நாடுகின்றனர். ஆனால், நாம் அண்மைக்காலமாக பார்க்கும் அரசியல் வன்முறைகள் சமாதானப் பேச்சை மீண்டும் ஆரம்பிப்பதை கடினமானதாக்கிவிடும். மேலும், வன்செயல்கள் இடம்பெறாமல் தடுக்குமாறு சகல தரப்பினரையும் ஐரோப்பிய ஒன்றியம் கேட்டுக்கொள்கிறது. அதே சமயம் யுத்த நிறுத்தம் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படுவதை ஒன்றியம் வரவேற்கிறது. பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கும் பணியை தொடர்ந்து மேற்கொள்ளுமாறு சகல தரப்பினரையும் ஒன்றியம் கேட்டுக் கொள்கிறது. பேச்சுவார்த்தை மூலமே மோதலுக்கு தீர்வு காணமுடியும். சகல சமூகங்களினதும் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய தீர்வுக்கு ஐரோப்பிய ஒன்றியம் தனது ஆதரவை வழங்கும் என்பதை மீண்டும் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறது. அதேசமயம் மனித உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்த விரும்புகிறது.

## மாகாணசபை தேர்தலில் சந்திரிகா வாக்களிக்கவில்லை

சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நேற்று நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலின் போது வாக்களிக்கவில்லையென ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன. ஜனாதிபதியின் வருகைக்காக செய்தியாளர்களும், புகைப்படப்பிடிப்பாளர்களும் நிட்டம்புவ சிறீசங்கபோதி மகா வித்தியாலயத்தில் நேற்றுக் காலை முதல் காத்துக் கிடந்தபோதும் ஜனாதிபதி வருகைதராத காரணத்தினால் ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டியேற்பட்டது. சுகயீனம் காரணமாகவே ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்கச் செல்லவில்லையென ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தபோதும், பாதுகாப்புக் காரணங்களுக்காகவே ஜனாதிபதி வாக்களிக்கச் செல்லவில்லையென விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.


**மணமகன் தேவை**

தமிழீழம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 39 வயதுடைய பட்டதாரிப் பெண்ணிற்கு (விவாகரத்தானவர் பிள்ளைகள் இல்லை) பெண்வீட்டார் மாப்பிள்ளை தேடுகிறார்கள்.
தொடர்புகள்: 06 67 03 23 82 (பாரிஸ்)
07 73 94 416 (கொழும்பு)
22

**Asha Video Movies**

உங்கள் இல்லத்தின் திருமணம், பூப்புனித நீராட்டுவிழா பிறந்தநாள் மற்றும் அனைத்து மங்கலகரமான நிகழ்வுகளைச் சிறந்த முறையில் (Digital - DV Camera) மூலம் வீடியோவில் படம் பிடித்து, நவீன முறையில் கணினி (Computer) மூலம் பதிவுசெய்து தருகின்றோம். அத்துடன் புகைப்படமும் எடுத்துக் கொடுக்கப்படும்.
**தொடர்புகளுக்கு: 01 48593429 / 0615737073**
Pub-Fr-39



ஈழமுரசு
POOBALAM WEEKLY

"POOBALAM"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris, France.

**RCS PARIS**
B 452 164 817 (2004B03079)

**Directeur de la publication:**
A.F. Santiogu

**Redacteur:** K. Jeisanthar

**Impression:**
IMPRIMERIES SAGITTAIRE
157 Boulevard Davout
75020 Paris.
Tel - 01 40 30 24 78

Dirigeant : Yohan TUIL

நிர்வாகி: அ.பி. சந்தியோகு
ஆசிரியர்: கி.ஜெய்சந்தர்

**தபால் தொடர்புகளுக்கு:**
POOBALAM
22, Rue Perdonnet,
75010 Paris, France
E.Mail-
Poobalam_murasu@hotmail.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பிரான்ஸ்:
Tel: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16

ஜேர்மனி:
T C C (வெளியீட்டுப் பிரிவு)
POSTFACH 101 613
46016 OBERHAUSEN
GERMANEY
TEL: 0208 205 99 103
FAX: 0208 205 99 104
HAND: 0049 172 28 86 291

சுவிஸ்:
MEDIA HOUSE
POSTFACH 6707, 3001 BERN.
TEL: 031 381 75 72

டென்மார்க்:
அன்பு
P.O.Box 65
7400 Herning, Denmark.
Tel: 86336352 - Fax: 65302588

பிரித்தானியா:
பரணி : - Tel: 07958675021
மோகன் : - Tel: 07961582285

இத்தாலி: மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD
Tel: 22425527

நெதர்லாந்து: த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா:
Tel: 61 3 8802 8368

**குறிப்பு:**
இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு. ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.



Restaurant
**Tharsana's**
தர்ஷனாஸ் உணவகம்
23, Rue Perdonnet, 75010 Paris
Tél: 01 40 05 08 36- 06 80 02 93 41
M°: La Chapelle ou Stalingrad

* இலங்கை, இந்திய உணவுவகைகளை உங்கள் குடும்பத்தோடு வந்து சுவைத்து மகிழ்ந்திடவும்
* உங்கள் இல்லத்தின் இனிய விழாக்களை கொண்டாடி மகிழ்ந்திடவும், அனைத்து உணவு வகைகளையும் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்வதற்கும் லாச்சப்பலில் நீங்கள் நாடவேண்டியது.

**தர்ஷனா & பிரஷா உணவகங்கள்**
இங்கு சாப்பாடுகளை ஓடருக்குப் பெற்றுக் கொள்வதுடன், உங்கள் விழாக்களையும் இங்கு மகிழ்வுடன் கொண்டாடலாம்

Restaurant
**Prassah**
Gastronomiques Indiennes
பிரஷா உணவகம்
54 Rue Louis Blanc, 75010 Paris
Mo: La Chapelle ou Louis Blanc
Tel: 01 53 26 39 41

ஈழமுரசு
ஐரோப்பா
POOBALAM WEEKLY

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"POOBALAM"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16

வீடு வாங்குதல்–விற்றல்–முதலீடு செய்தல்
☒ வீடு வாங்குவோருக்கான 100% கடன் வசதி
☒ SCI ஸ்தாபனத்தின் மூலம் வீடுகள் வாங்கி முதலீடு செய்து கொள்ளுதல்
☒ கட்டப்பட்ட புதிய – பழைய வீடுகள் வாங்குதல்
☒ நிலம் வாங்கி புதிய வீடுகள் கட்டுதல்
முழு அளவிலான இலவச ஆலோசனைகள் வழங்கப்படும்
தொடர்புகள்: 06 64 73 49 82

# மட்டக்களப்பில் புலிகள் மீதான தாக்குதலை தடுக்க தலைமைப்பீடம் விரைவில் நடவடிக்கை


## – மட்டு. – அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் தெரிவிப்பு

(11.07.04)

மட்டக்களப்பில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் தங்கள் உறுப்பினர்கள் மீதான தாக்குதலைத் தடுக்க, சில உறுதியான நடவடிக்கைகளை தலைமைப்பீடம் விரைவில் எடுக்குமென விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் கூறுகையில், இந்தத் தாக்குதல்கள் எமக்கு விடப்படும் சவாலாகவே கருதுகிறோம். ஆனாலும், போர் நிறுத்த உடன்பாட்டைத் தொடர்ந்தும் கடைப்பிடிப்போம். எம்மை ஆத்திரமூட்டி மீண்டுமொரு யுத்தத்தை திணிக்கும் முயற்சிகளாகவே இவற்றைக் கருதுகிறோம். இவ்வாறான தாக்குதல்கள் நடைபெற்றாலும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தொடர்ந்தும் செயற்படுவோம். எம்மீதான தாக்குதல்களை தடுத்து நிறுத்துவது தொடர்பாக தலைமைப்பீடம் விரைவில் சில நடவடிக்கைகளை எடுக்கும். மட்டக்களப்பில் நடைபெறும்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)



# இந்திய அமைப்புக்களின் கண்ணிவெடி அகற்றும் பணி திருப்தி இல்லை

## – நிதியுதவி வழங்க ஜப்பான் மறுப்பு –

வடக்கு-கிழக்கு பகுதியில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இந்திய அமைப்புக்களின் பணியில் திருப்தி ஏற்படாததால் அந்தப் பணிக்காக தொடர்ந்தும் நிதியுதவியை வழங்குவதற்கு ஜப்பான் அரசு மறுப்புத் தெரிவித்துள்ளது. வடக்கில், குறிப்பாக வவுனியாவில் கண்ணிவெடி அகற்றும் பணியில் இந்தியாவைச் சேர்ந்த இரு அரச சார்பற்ற நிறுவனங்களான `சாவற்றா' மற்றும் `ஹொறிசோன்' ஆகியன ஈடுபட்டுள்ளன. இந்திய இராணுவத்தில் கடமையாற்றி ஓய்வுபெற்ற சிரேஷ்ட அதிகாரிகளும் இந்த அமைப்புகளில் அங்கம் வகிப்பதுடன் கண்ணிவெடி அகற்றும் பணியிலும் நேரடியாக ஈடுபட்டுள்ளனர்.

முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொடவின் அழைப்பின் பேரிலேயே இவ்விரு அமைப்புக்களும் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளுக்காக இலங்கை வந்தன. இவற்றின் பணியைத் தொடருவதற்காக 4 345 000 டொலர்களை ஒதுக்குமாறு மிலிந்த மொறகொடவினால் நடாத்தப்படும் அமைப்பு அண்மையில் ஜப்பான் அரசிடம் கோரிக்கை விடுத்திருந்தது. மொத்தமாக இந்தப் பணிக்காக மிலிந்த மொறகொட அமைப்பு 815 100 டொலர்களை எதிர்பார்க்கின்றது. இதில் 1.82 மில்லியன் டொலர்களை `சாவற்றா' அமைப்புக்கும் 1.71 மில்லியன் டொலர்களை `ஹொறிசோன்' அமைப்புக்கும் வழங்க உத்தேசித்துள்ளது. எனினும், இவ்விரு அமைப்புகளும் சர்வதேசத் தரத்தில் தங்கள் பணிகளை மேற்கொள்ளவில்லை என்பதைச் சுட்டிக் காட்டியுள்ள ஜப்பான் அரசு, இவற்றுக்கு நிதியுதவியை வழங்கவும் மறுத்துள்ளது.

தற்போது வடக்கு - கிழக்கில் கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் எட்டுக்கும் மேற்பட்ட அமைப்புகள் ஈடுபட்டுள்ளன. இந்தப் பணிக்காக ஜப்பான் பெருமளவு நிதியை வழங்கி வருகிறது. ஒவ்வொரு அமைப்பினதும் நடவடிக்கையைப் பொறுத்தே அவற்றுக்கு நிதியுதவியை தொடர்ந்தும் வழங்குவது குறித்து தீர்மானிக்க முடியுமெனவும் ஜப்பான் அரசு கூறியுள்ளது.

# பேச்சுவார்த்தை மீள ஆரம்பமாவதை அரசியல் வன்முறைகள் கடினமாக்கிவிடும்

## ஐரோப்பிய ஒன்றியம் கடும் எச்சரிக்கை

(11.07.04)

சமாதானப் பேச்சுவார்த்தை மீண்டும் ஆரம்பிக்கப்படுவதை அண்மைய அரசியல் வன்செயல்கள் கடினமாக்கும் என்று ஐரோப்பிய ஒன்றியம் எச்சரித்திருக்கிறது, இத்தகைய வன்முறைகளுக்கு மன்னிப்பு கிடையாதென்றும் இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினைகளுக்கு இவை ஒருபோதும் தீர்வைத் தேடித் தரப்போவதில்லை எனவும் அது தெரிவித்துள்ளது. கிழக்கிலும் ஏனைய இடங்களிலும் இடம்பெறும் அரசியல் படுகொலைகள் மற்றும் கொழும்பில் இடம்பெற்ற தற்கொலை குண்டு வெடிப்பு போன்ற சம்பவங்கள் உட்பட அரசியல் வன்முறைகள் அண்மைக் காலத்தில் இலங்கையில் அதிகரித்திருப்பதையிட்டு விசனம் தெரிவித்திருக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப் பீடம், இது தொடர்பாக கடந்த சனிக்கிழமை அறிக்கையொன்றை விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, இலங்கையின் சகல சமூகங்களையும் சேர்ந்த பெரும்பான்மையான மக்கள் அமைதியையே விரும்புகின்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

Phone 2000 - Sonia restaurant ஆதரவில் ஆர்.ரி.எம். பிறதெர்ஸ் இன்ரநெஷனல் பெருமையுடன் வழங்கும்

15 வது கலைத்தென்றல்

'கீதம் சங்கீதம்'
'நகைச்சுவை விருந்து'
'பாட்டுக்கு பாட்டு'

கலைஞானிதன் பி.எச். அப்துல் ஹமீட் வழங்கும்
'பாட்டுக்கு பாட்டு'
இலங்கை வானொலி, தொலைக்காட்சி புகழ் பயஸ் - ரட்ணம் கலந்துகொள்ளும்
சுப்பர் சண் இசையில் இலை மறை காய்களாய் இருக்கும் பாடகர்களை
வெளிக்கொண்டுவரும் இனிய நிகழ்ச்சி

அவதாரனம்
மதி குழுவினரின்
மேலைத்தேய நடனம்

Espace Amorc
199 rue saint martin
75001 Paris
(Mo: Etienne marcel)

பாட்டுக்கு பாட்டு போட்டி நிகழ்ச்சியில் பங்குபற்ற விரும்புவோர்
15.07.2004 இற்கு முன் தொடர்புகொள்ளவும்.

மேலதிக தொடர்புகளுக்கு
Phone 2000 -01 40 05 03 43
Siva: 06 20 21 11 11
Nice Telecom: 01 40 37 63 68
ஸ்ரீ பாரதி அச்சகம்: 01 42 05 46 04

08.08. 2004 ஞாயிறு
மாலை 5.00 மணி